www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16 - 30 செப்டம்பர் '9

ரூ. 4.00



## நடப்பது நாடாளுமன்ற சர்வாதிகாரம்! மக்களுக்கு எங்கே அதிகாரம்?



மேகமலை தேயிலை தோட்டத் தொழிலாளர்கள்

## தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையும் போராட்டமும்



சம்பள உயர்வுக்காகப் போராடிக் கைதான மாஞ்சோலைத் தொழிலாளர்கள்

படிப்பகம்

www.padippakam.com

# போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்! மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைப்போம்!!

## — தேர்தல் புறக்கணிப்பு இயக்கச் செய்திகளின் தொகுப்பு

கடந்த ஐம்பதாண்டுகளில் நாடும் மக்களும் பல தேர்தல்களைச் சந்தித்துவிட்டனர். "இனி பாலாறும் தேனாறும் ஓடும்" எனப் பேசி, ஓட்டு வாங்கிச் செல்வார்கள். ஆனால், குழாயில் தண்ணீர்கூட வராமல் அவதிப்படுவதுதான் கைமேல் கண்ட பலன். ரோடு வசதி, குடிநீர், கல்வி போன்ற மக்களின் அடிப்படையான தேவைகளைக் கூடத் தீர்த்து வைக்க முடியாத இந்நாடாளுமன்ற ஆட்சிமுறை, நாட்டையே அச்சுறுத்தும் ஊழல், சாதிவெறி, மதவெறி, கிரிமினல் கும்பலின் ஆதிக்கம் போன்ற பிரச்சினைகளை ஒழித்துக் கட்டிவிடும் என நம்ப முடியுமா?

மக்களின் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமானால், ஊழலையும், சாதி - மதவெறியர்களையும் ஒழிக்க வேண்டுமானால், முதலில், இந்த நாடாளுமன்ற சர்வாதிகாரத்தை ஒழிக்க வேண்டும். அதனிடத்தில் மக்கள் சர்வாதிகார அமைப்புகளைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இதை மையமாக வைத்து, தமிழகத்தில் இயங்கிவரும் புரட்சிகர அமைப்புகளான, ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., - இந்நான்கு அமைப்புகளும் இணைந்து "போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்! மக்கள் சர்வாதிகார மன்றங்களை அமைப்போம்" எனும் முழக்கத்தின் அடிப்படையில், தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தை நடத்தி வருகின்றன.

இவ்வியக்கத்திற்கு மக்கள் மத்தியில் பெருகி வரும் ஆதரவைக் கண்டு பீதியடைந்து போன ஓட்டுக் கட்சிகள், போலீசை ஏவிவிட்டு, இந்த இயக்கத்தை ஒடுக்கிவிட முயன்று வருகின்றன. போலீசின் கைது - சிறை - அடக்குமுறைகளையும் மீறி, இவ்வியக்கம் தமிழகமெங்கும் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

### ஆண்டிப்பட்டியில்

| | |
|---|---|
| *பெயர்* | : பைரவன் |
| *சாதி* | : டாபர்மேன் |
| *வயது* | : 3 |
| *தொகுதி* | : ஆண்டிப்பட்டி |
| *தேர்தல் சின்னம்* | : செருப்பு |
| *வாக்குறுதி* | : பணம் கொடுக்கும் யாருக்கும் வாலாட்டாமல், நன்றியுடன் பாடுபடுவது. |

23.8.99 அன்று மாலை, தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி பகுதியில், ஓட்டுப் பொறுக்கும் வேட்பாளர்களுக்கு மத்தியில் 'நன்றியுள்ள' டாபர்மேன் சாதி நாய் ஒன்று தனக்கும் ஓட்டுப் போடுங்கள் எனக் கேட்டு வீதிவீதியாக வந்தது. இறுதியில், விவசாயிகள் விடுதலை முன்னணி ஆண்டிப்பட்டி கிளை சார்பாக நடைபெற்ற பொதுக்கூட்ட மேடையில், மக்கள் கொடுத்த மனுக்களைப் பெற்றுக் கொண்டு, தன்னைத் தேர்ந்தெடுக்கும் மக்களுக்குப் பாடுபடுவதாக வாக்குறுதி கொடுத்தது.

இவை அனைத்தும், விவசாயிகள் விடுதலை முன்னணி ஆண்டிப்பட்டி கிளை சார்பாக நடந்த தேர்தல் புறக்கணிப்பு பொதுக்கூட்டத்தில், நடைபெற்ற நிகழ்ச்சிகள். இது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. "கட்சிக்காரனுங்களுக்கு ஓட்டுப் போடுறதை விட, இந்த நாயிக்கு ஓட்டுப் போடுறது மேல்" என இன்றைய போலி ஜனநாயகத்தின் யோக்கியதையைப் பரிகசித்து மக்கள் பேசிக் கொண்டனர்.

தேர்தலைப் புறக்கணித்துப் பேச, பொதுக்கூட்டம் போடத்தான் போலீசு கெடுபிடி; அனுமதி மறுப்பு. நாயும், கழுதையும் ஓட்டுக் கேட்கத் தடையில்லை. இதுதான் இன்றைய ஜனநாயகத்தின் 'மாட்சிமை'!

### சென்னையில்

"போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணியுங்கள்! மக்கள் சர்வாதிகார மன்றங்களை கட்டியமையுங்கள்!" என்ற முழக்கங்களுடன், நூற்றுக்கும் மேற்பட்ட தட்டிகளை, சென்னை உயர்நீதி மன்றம், பேருந்து நிலையம், பாரிமுனை ஆகிய பகுதிகளில் 24.8.99 அன்றிரவு சென்னைத் தோழர்கள் கட்டினர்.

இரவு ரோந்து வந்த எஸ்பிளனேட் காவல்துறை உதவி ஆய்வாளரின் கண்களில், இத்தட்டிகள் பட்டன. "ஜனநாயக விரோதமான, வன்முறையான, ஆபாசமான தட்டிகள்" என்று அவர் உணரத் தொடங்கி, 'கடமை உணர்வுடன்' அவற்றையெல்லாம் கழற்றி போலீசு நிலையத்திற்கு கொண்டு சென்றார். தட்டிகள் கட்டிக் கொண்டிருந்த நமது தோழர்களிடம் மீதமிருந்த தட்டிகளையும், ஏணி, கயிறு போன்றவற்றையும் பறிமுதல் செய்து தோழர்களை மிரட்டி அனுப்பினார்.

மறுநாள் காலை, ம.க.இ.க. தோழர்கள் 10 பேர், எஸ்பிளனேட் போலீசு நிலையம் சென்று தட்டிகளைக் கழற்றிய உதவி ஆய்வாளர் மீது புகார் கொடுத்தனர். ஓட்டுப் போடாதே என்று பிரச்சாரம் செய்வது எமது உரிமை; அதைத் தடுக்க போலீசுத் துறைக்குச் சட்டப்படி எந்த உரிமையும் இல்லை என வாதாடினர்.

உதவி ஆய்வாளரின் மேற்கண்ட நடவடிக்கை ஜனநாயக விரோதச் செயல், அடாவடித்தனமான அராஜகம் என்றும் உயர் அதிகாரிகளிடம் புகார் செய்வதோடு, வழக்கும் தொடுப்போம் என்று எச்சரித்த பின்பு, தான் செய்தது தவறுதான், நட்ட ஈடு தருகிறேன்; இதற்கு மேல், நடவடிக்கை ஏதும் வேண்டாம் என சம்பந்தப்பட்ட உதவி ஆய்வாளர் தோழர்களிடம் மன்றாடியுள்ளார். கழற்றிய தட்டிகளையும் ஏணியையும் தோழர்களிடம் திருப்பிக் கொடுத்துள்ளார்.

### ஈரோட்டில்

தேர்தல் புறக்கணிப்பு முழக்கங்களை சுவரில் எழுதத் தடை! சுவரொட்டி ஒட்டத் தடை! என்று போலீசு கெடுபிடி செய்த நிலையில், ஈரோடு பகுதி தோழர்கள் புதிய வழிமுறையைக் கடைபிடித்தார்கள். 4.8.99 அன்று தோழர் வெங்கட், தோழர் இரகு, தோழர் இராஜன் ஆகியோர் தேர்தல் புறக்கணிப்பு முழக்கங்களை எழுதித் தங்கள் முதுகு மற்றும் மார்புகளில் கட்டித் தொங்கவிட்டனர். ஈரோடு மையப் பேருந்து நிலையத்தில் நடமாடும் சுவரொட்டிகளாக மாறி, பேருந்தில் பிரச்சாரம் செய்ததுடன், நிதிவசூலும் செய்தனர். நமது தோழர்கள் சென்ற இடங்களுக்கெல்லாம் தொடர்ந்து வருவதும், கூடிநின்று தோழர்களின் கருத்துக்களைக் கேட்பதுமாக மக்கள் அலைமோதினர்.

தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரத்தினால் பீதியடைந்த போலீசார், தோழர்களை இடைமறித்துப் பிரச்சாரம் செய்யக் கூடாது; சென்று விடுங்கள் என எச்சரித்தனர். தோழர்களோ, தேர்தல் புறக்கணிப்பு - பிரச்சாரம் செய்வது எங்

தொடர்ச்சி 23-ஆம் பக்கம்

**"வேட்பாளரைவிட நாய்க்கு ஓட்டுப் போடலாம்" என மக்களைப் பேச வைத்த, ஆண்டிப்பட்டி வி.வி.மு.வின் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம்**





படிப்பகம்

# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 14

**இதழ்: 19 - 21**

16 ஆக.'99 - 30 செப்.'99

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# தேர்தல் புறக்கணிப்பு ஏன்?

தேர்தல் அரசியலுக்கு ஒரு செயற்கையான சூடேற்றும் தீவிர முயற்சியில் ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளும், பத்திரிகைகளும் வானொலிகளும் ஈடுபட்டுள்ளன. ஆனால், கூலிக்குத் திரட்டப்பட்ட கும்பலைத் தவிர, வாக்காளப் பெருமக்கள் எந்தவித ஈடுபாடும் அக்கறையும் காட்டவில்லை. நடுத்தர வர்க்கத்தினரின் அரசியலற்றவாதம் இதற்குக் காரணமல்ல. ''வேலையில்லாத் திண்டாட்டம், தொழில்கள் முடக்கம், விலைவாசி யேற்றம், குடிதண்ணீர் - சாக்கடை - சாலை வசதி போன்ற அடிப்படைத் தேவைகள் எதையும், எந்த ஆட்சியும், எந்த அரசியல் கட்சியும் தீர்க்கவில்லை. பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து ஓட்டுவாங்கிக் கொண்டுபோய், மீண்டும் மீண்டும் துரோகம் செய்வதே வரலாறு, வாடிக்கையாகிவிட்டது. இனி யாருக்கும் ஓட்டுப் போட்டு எந்தப் பயனும் அடையமுடியும் என்ற நம்பிக்கை அற்றுப் போய்விட்டது.'' என்று உரத்த குரலில் பெரும்பான்மையான வாக்காளர்கள் வெறுப்பை உமிழ்வதைத் காணமுடிகிறது.

''வாக்காளர்கள் எழுப்பும் கோரிக்கைகள் எல்லாம் உள்ளூராட்சி மன்றம் முதல் ச' டமன்ற உறுப்பினர்கள் வரை கவனிக்க வேண்டியவை. இவையெல்லாம் அதிகபட்சம் மாநில ஆட்சியாளர்கள் கவனிக்க வேண்டிய பிரச்சினைகள். இப்போது நடப்பதோ நாடாளுமன்றத் தேர்தல்கள். ஆகவே, தேசியப் பிரச்சினைகளில்தான் கவனம் செலுத்த வேண்டும்'' என்று அனைத்துக் கட்சிகளுமே ஒதுக்கிவிட்டன. எனவே, எந்தவொரு கட்சியும், எந்தவொரு கூட்டணியும் ஆக்கபூர்வமான - அடிப்படையான சமூக, பொருளாதார, அரசியல் திட்டம் கொள்கையை முன்வைத்து ஓட்டுக் கேட்பதில்லை. பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ் கும்பலின் தலைமையிலான 24 கட்சிகளின் ''தேசிய ஜனநாயக முன்னணி''; காங்கிரசு - அதிமுக - போலி கம்யூனிஸ்டுகள் அமைத்துள்ள மதச்சார்பற்ற முன்னணி; மாநில அளவில் திராவிடக் கட்சிகளுக்கு மாற்று அணி என்று சொல்லிக் கொண்டு பண்ணையார் மூப்பனாரின் த.மா.கா., புதிய தமிழகம், சில சாதி மத அமைப்புகள் தமிழகத்தில் இணைந்துள்ளன. இதுபோன்று, உ.பி.யில் முலயம் சிங், கன்ஷிராம், மராட்டியத்தில் சரத் பவார் தலைமைகளில் களத்தில் குதித்துள்ள மூன்றாவதான சில உதிரி சக்திகள்.

இப்படி மூன்று பிரிவுகளாகப் பிரிந்து வாக்காளர்களிடம் வந்தாலும், நாட்டை அமெரிக்கா உட்பட மேல்நிலை வல்லரசுகளுக்கும் பன்னாட்டு - தேசங்கடந்த தொழில் கழகங்களுக்கும் மறு அடகுவைத்து மறுகாலனியாக்குவது; உலக வர்த்தக நிறுவனம், உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் ஆகியவற்றின் கட்டளைகளை ஏற்றுத் தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்குவது; அண்டை நாடுகளுக்கு எதிராக தேசியவெறி - யுத்த வெறியைக் கிளப்பி, தெற்கு ஆசிய பிராந்திய ஆதிக்கத் துணை வல்லரசாக மாற்றுவது; அதேசமயம், போராடும் புரட்சிகர - பரந்துபட்ட மக்களையும் தேசிய இனவிடுதலை இயக்கங்களை ஒடுக்குவது ஆகியவற்றில் இப்பிரிவுகளுக்கிடையே வேறுபாடு கிடையாது. எனவேதான், வரவு - செலவு அறிக்கை உட்பட திட்டங்களும் சட்டங்களும் எவ்வித எதிர்ப்புமின்றி, எல்லா சட்டமன்றங்களிலும், நாடாளுமன்றத்திலும் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேறுகின்றன.

இந்த நிலையில் கொள்கை, கோட்பாடு அடிப்படையில் இல்லாமல் சாதி, மத ரீதியில் அரசியல் அணிசேர்க்கை உருவாகி இருப்பதில் வியப்பில்லை. மதவாத எதிர்ப்பு, ஊழல் எதிர்ப்பு, இரண்டையும் எதிர்ப்பது என்கிற கொள்கை பேசினாலும், மதவாத சக்திகளும், ஊழல் சக்திகளும் அல்லது இரண்டையும் எதிர்க்கும் மதச்சார்பற்ற - ஊழலற்ற சக்திகளும் தனித்தனி அணியாகச் சேர்ந்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. மூன்று பிரிவுகளிலும் சாதி, மதவாத, ஊழல் சக்திகள் இடம் பெற்றிருக்கிறார்கள். மதவாதம், ஊழல் போன்றவற்றைக்கூட எதிர்த்து முறியடிப்பதற்கான குறைந்த பட்ச குறிப்பான திட்டம் எதுவும் இந்தப் பிரிவுகளால் முன்வைக்கப்படவில்லை. அப்படிப்பட்ட திட்ட உடன்பாடு எதுவும் அந்தந்த அணிகளில் பங்கேற்பவர்களிடையே கிடையாது.

இக்காரணங்களினால்தான், கூட்டணி சேருவதற்காக சொன்ன ஊழல் எதிர்ப்பு, மதவாத எதிர்ப்பு ஆகிய இரண்டு பிரச்சினைகளையுமே விட்டுவிட்டு ஆட்சிக் கவிழ்ப்புக்கு யார் காரணம், நிலையான ஆட்சி யாரால் தரமுடியும் போன்ற வேறு விவகாரங்களைப் பேசுகின்றனர். மத்தியில் ஆட்சிக் கவிழ்ப்புக்கும், மாநிலங்களின் ஆட்சியை பலமுறை கலைத்ததற்கும் காரணமாக இருந்த காங்கிரசு, தன்னால்தான் நிலையான ஆட்சிதர முடியும் என்கிறது. ஏற்கனவே ஆட்சிக் கவிழ்ப்புகளில் ஆர்வமாகப் பங்கேற்ற பா.ஜ.க., இப்போது தானே அதற்குப் பலியான நிலை வந்ததும், ஐந்தாண்டுகளுக்கு நாடாளுமன்றம் நீடித்திருப்பதற்கான சட்டத் திருத்தம் கொண்டு வருவதாக தேர்தல் அறிக்கையில் கூறுகிறது; சோனியா வெளிநாட்டவர், இரண்டு தொகுதிகளில் போட்டியிடத் தடை விதிக்கும் சட்டம் கொண்டு வருவது போன்ற பிரச்சினைகளை முன் நிறுத்துகிறது.

பொது நோக்கம் ஏதோ இருப்பதாகக் கூறினாலும், தேர்தலுக்குப் பிறகு மட்டுமல்ல, அதற்கு முன்பே அணி மாறுவதும் கட்சி தாவுவதும் தொடங்கிவிட்டது. கருணா

www.padippakam.com

நிதி - வைக்கோ, வாழப்பாடி - இராமதாசு, மூப்பனார் - கிருஷ்ணசாமி, லல்லு - பர்த்ன், சந்திரபாபு நாயுடு - பா.ஜ.க, ஜனதா தளம் (ஐக்கியம்) - பா.ஜ.க ஆகியோரிடையே நடந்த கடைசி நேரத் தொகுதிப் பங்கீடுத் தகராறுகளும் கழுத்தறுப்புகளும் கொள்கை, கோட்பாடுகளை முன்னிறுத்தி நடந்தவை அல்ல. அதேபோலத்தான் ஜெயலலிதா, சோனியாவால் அனாதைகளாக்கப்பட்டவர்கள் ஒரே அணியாகி, இப்போது கொள்கைச் சவடால்கள் அடிக்கிறார்கள். ஓட்டுக்காகவும் சீட்டுக்காகவும்தான் கூட்டு என்பது தேர்தல் அரசியல் விதியாகிவிட்டது. ''கொள்கை கோட்பாடெல்லாம் கிடையாது, வெற்றி வாய்ப்பு, அதிக எண்ணிக்கை ஆகிய இரண்டும்தான் தேர்தல் கூட்டணிகள் சேர்வதைத் தீர்மானிக்கின்றன'' என்று பகிரங்கமாகவே அரசியல் தலைவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.

தங்களுடைய அடிப்படைத் தேவைகள் கூட நிறைவேறாத அதிருப்தி, ஓட்டுக் கட்சித் தலைவர்களின் நம்பிக்கை துரோகம் ஆகிய இரண்டு காரணங்களுக்காக தேர்தல்கள் மீது அவநம்பிக்கை அடைந்து, இனிமேலும் ஓட்டுப்போடுவதில் பயனில்லை என்று வாக்காளர்களில் பலர் கூறுகின்றனர். ஆனால், இன்றைய அரசியல் அமைப்பின் கீழ் தேர்தல்களைப் புறக்கணிப்பதற்கு இன்னும் பல முக்கியமான, வலுவான காரணங்களும் அவசியமும் இருக்கின்றன.

முதலாவதாக, நாடாளுமன்ற ஜனநாயக முறைக்கு வக்காலத்து வாங்குபவர்கள் வாதிடுவதைப் போல, ஓட்டுரிமை என்பது, நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஜனநாயக உரிமை அல்ல. வெற்றுத்தாளில் கையொப்பம் போட்டுத் தருவது தான் ஓட்டுப் போடுவது என்பது. அப்படி வாங்கிக் கொண்டு போகும் ஓட்டுக் கட்சிக்காரர்கள் அதை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளும் உரிமத்தைப் பெறுகிறார்கள். இன்னின்ன அரசியல், பொருளாதார, சமூகக் கொள்கைகளையும் திட்டங்களையும் தான் கடைப்பிடிக்க வேண்டும் என்கிற கட்டுப்பாடுகள் எதுவும் கிடையாது. நாட்டுக்கும் மக்களுக்கும் எதிராக அவர்கள் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையையும் தடுக்கவோ, தண்டிக்கவோ மக்களுக்கு எந்த அதிகாரமும் வழியும் கிடையாது. ஒரு தொகுதி வாக்காளர்களின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர், அவர்களின் எண்ணங்களைத்தான் பிரதிபலிக்க வேண்டும்; அவர்களின் விருப்பப்படிதான் செயல்பட வேண்டும் என்கிற நெறிமுறை எதுவும் கிடையாது. அவற்றுக்கு மாறாக, அணி சேர்ந்தோ, கட்சி தாவியோ ஆட்சி அமைக்கலாம், ஆட்சியைக் கவிழ்க்கலாம், சட்ட - திட்டங்கள் போடலாம், இலஞ்ச - ஊழல் - அதிகார முறைகேடுகளில் ஈடுபடலாம். அவருடைய செயல்களைத் தடுக்கவோ, மாற்றவோ வாக்காளர்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது. வேண்டுமானால், அடுத்தமுறை அவரைத் தேர்ந்தெடுக்காமல் வேறொருவருக்கு வெற்றுத்தாளில் கையொப்பமிட்டுக் கொடுத்து உரிமத்தை மாற்றித் தரலாம்; வேறெதுவும் செய்ய முடியாது.

இரண்டாவதாக, இந்த நாடு ஜனநாயக நாடு என்றும், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளும், அவர்கள் உருவாக்கும் ஆட்சிக்குத் தலைமையேற்கும் அமைச்சர்களும் மட்டும்தான் இந்த நாட்டை ஆளும் அதிகாரம் பெற்றவர்கள் என்றும், அதாவது இந்த நாட்டை மக்கள், தங்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் மூலம் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்கிறார்கள் என்றும், இதுதான் ஜனநாயகம் என்றும் கூறப்படுகிறது. ஆனால், இது உண்மையல்ல. உள்ளூராட்சி மன்றத்தில் இருந்து நாடாளுமன்றம் வரை மக்கள் பிரதிநிதிகள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அந்தந்த மன்றங்களில் கொண்டு வரப்படும் சட்டதிட்டங்களை ஆதரித்தோ, எதிர்த்தோ கைதூக்கும் உரிமை மட்டுமே உள்ளது. அவர்களில் பெரும்பான்மையினர் சேர்ந்து உருவாக்கும் அமைச்சரவை போன்ற தலைமைக்கு ஆளும் நிர்வாக அமைப்பில் முடிவுகள் எடுக்கும் அதிகாரம் உண்டு. ஆனால், தாம் போடும் சட்டதிட்டங்களையோ, நிர்வாக முடிவுகளையோ அமலாக்கும் அதிகாரம் இந்த இரண்டுமட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும் கிடையாது. அதற்கான நிர்வாக அதிகாரம் முழுவதும் உள்ளூராட்சி மன்ற ஆணையர் முதல் வட்ட, மாவட்ட ஆட்சியர் ஊடாக மாநில - மத்தியத் தலைமைச் செயலாளர் வரையிலான அதிகாரவர்க்க அமைப்பு, நீதிமன்றம், போலீசு, இராணுவம் போன்ற அமைப்புகளில் உள்ள அதிகாரிகள் என்கிற ஒரு தனிவகைச் சாதியிடம் இருக்கிறது. ஆகவே, இந்தத் தேர்தல்கள் எல்லாம் ஆளும் நிர்வாக அதிகாரம் பெற்றவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடக்கவில்லை. ஆளும் நிர்வாக அதிகாரம் ஏதுமற்ற பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காகவே நடக்கின்றன.

மூன்றாவதாக, ஆளும் நிர்வாக அதிகாரம் படைத்த அதிகாரிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அல்ல. கல்வித் தகுதியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டும், முறைகேடுகள் மூலமாக அந்தத் தகுதிகள்கூட இல்லாமலும், முன்பே அதிகாரிகளாக இருப்பவர்களால் நியமிக்கப்படுபவர்கள். இவர்களுடைய நடவடிக்கைகளை மேற்பார்வையிடவும், தவறு செய்தால் தண்டிக்கவும், தடுக்கவும் இவர்களுடைய மேலதிகாரிகள்தான் அதிகார உரிமை உடையவர்கள். எம்.எல்.ஏ., எம்.பிக்கள், மந்திரிமார்கள் தவறு செய்தால்கூட, மக்கள் விசாரிக்கவோ தண்டிக்கவோ முடியாது. ''நீதிபதிகள்'' என்கிற அதிகாரிகள்தான் விசாரித்துத் தண்டிக்க முடியும். நாட்டின் சட்ட திட்டங்களில் முன்வரைவுகளைத் தயாரித்துக் கொடுப்பதோடு, அவற்றை அமலாக்கும் நிர்வாக அமைப்பாக அதிகாரிகளே அமையும்படி அந்தந்த சட்டதிட்டங்களிலேயே அதிகாரத்தை வகுத்துக் கொள்கிறார்கள்.

நான்காவதாக, வெறும் கல்வித் தகுதி அல்லது முறைகேடுகள் மூலம் நியமனம் பெறும் அதிகாரிகள் மக்கள் நலன்களை அடிப்படையாகக் கொண்டு மக்களுக்குப் பொறுப்பாகச் செயல்படுவதற்கான எந்த நிர்பந்தமும் கிடையாது. ஒரு தேர்தல் அரசியல்வாதியைப் போலவே சொந்தச் சம்பாத்தியம் கருதியே, எவ்வளவு சம்பளம் வரும், எவ்வளவு கிம்பளம் வரும், என்னென்ன அதிகாரம் கிடைக்கும் என்பதைக் குறிவைத்தே அதிகாரிகளாகப் போகிறார்களே தவிர, மக்கள் சேவையை மனதில் வைத்துப் பதவிக்கு வந்தவர்கள் அல்ல. ஆளும் நிர்வாக அதிகாரிகளுக்குத் தரப்படும் பயிற்சியும், இன்றைய சமூக, பொருளாதார, அரசியல் அமைப்பையும், தரகு அதிகார வர்க்கம் - நிலப்பிரபுக்களின் சுரண்டல் - ஒடுக்குமுறையையும் பாதுகாப்பது எப்படி என்பதற்காகத்தான்; மக்களுக்குச் சேவை செய்வதற்காக அல்ல.

ஏதாவது கோரிக்கைகளுக்காகப் போராடும் மக்களைப் பயங்கரமான முறையில் ஒடுக்குகிறது போலீசு. வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் ''லாக் - அப்'' - கொட்டடிக் கொலைகள், வன்புணர்ச்சியில் ஈடுபடும் போலீசு, வரம்பற்ற அதிகாரம் வைத்துக் கொண்டு காட்டாச்சி நடத்துகிறது. மக்கள் சேவையில் ஈடுபடாமல் தின்று கொழுத்து இருக்கும் இராணு

> நாட்டை ஆளும் நிர்வாக அதிகாரம் அதிகார வர்க்கம், போலீசு, இராணுவம், நீதிமன்றம் போன்ற அமைப்புகளில் உள்ள அதிகாரிகளிடம்தான் உள்ளது. இந்த அதிகாரிகள், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை; தேர்தல்களோ, ஆளும் நிர்வாக அதிகாரம் ஏதுமற்ற பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

வத்தினர், சிவிலியன் மக்களிடையே நிறுத்தப்படும் பொழுதெல்லாம் துப்பாக்கிச் சூடு, கொலை, கொள்ளையில் ஈடுபடும் சம்பவங்கள் ஏராளமாகவுள்ளன. தரகு முதலாளி அம்பானி என்றால் விடுமுறை நாட்களிலும், வீட்டிலேயே வழக்கு நடத்திச் சாதகமான தீர்ப்பு வழங்கும் நீதித்துறை அதிகாரிகள், போபால் நச்சுப்புகை வழக்கு, கீழ் வெண்மணி முதல் தில்லி சீக்கியர் படுகொலைகள் வரை, ஆதிவாசி சிறுமி மதுரா முதல் தாழ்த்தப்பட்ட பன்வாரிதேவி வரை ஆயிரக்கணக்கான வன்புணர்ச்சி வழக்குகளில் நீதிக்குப் புறம்பான மக்கள் விரோதத் தீர்ப்புகளை வழங்குகிறார்கள். பொதுத்துறை அதிகாரிகள் பகற்கொள்ளையடிக்கிறார்கள். ஆளும் நிர்வாக அமைப்பின் எல்லா மட்டங்களிலும் இலஞ்ச ஊழலும், அதிகாரமுறைகேடுகளும் தலைவிரித்தாடுகின்றன. நிரந்தரமான இந்த மக்கள் விரோத அரசு அமைப்பை மாற்றுவதற்கான எதுவும் தேர்தல் மூலம் கிடையாது.

**இலஞ்சம் - ஊழல் - அதிகார முறைகேடுகளில் ஈடுபடும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளையோ, மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அதிகாரிகளையோ தண்டிப்பதற்கு மக்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. இந்தத் தேர்தல்களோ, அரசியல் அமைப்போ அந்த அதிகாரத்தை மக்களுக்கு வழங்குவதில்லை.**

ஐந்தாவதாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவது குறிப்பிட்ட காலத்துக்குத்தான் பதவி வகிக்க முடியும். அதன் பிறகு மீண்டும் ஓட்டுக் கேட்டு மக்களிடம் வரவேண்டும். அவர்களின் கடந்த கால குறைநிறைகளைக் கண்டு நிராகரிக்கலாம் அல்லது மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வாய்ப்புப் பெறலாம். இந்த வகையிலாவது அவர்கள் மக்களுக்குப் பொறுப்பாக நடக்கும் அவசியம் ஏற்படுகிறது. ஆனால், ஆளும் நிர்வாக அமைப்பின் அதிகாரிகள் மக்களுக்குப் பொறுப்பானவர்கள் இல்லை. இதையே, என்னை யாரும் ஆட்டவும் அசைக்கவும் முடியாது என்று (திமிரோடு) கூறி நிரந்தரப் பதவி வகிக்கிறார்கள். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் குற்றமிழைத்தால், மத்திய அரசு அனுமதி பெற்றுத்தான் வழக்குப் போட முடியும். நீதிபதிகளையோ விமர்சிக்கவும் உரிமையில்லை; நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரித்தாலே, குற்றமிழைக்கும் நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்ய முடியும். இராணுவ அதிகாரிகளை மக்கள் மட்டுமல்ல, எம்.எல்.ஏ., எம்.பிக்கள் கூடத் தட்டிக் கேட்க முடியாது. நீதிபதிகள், இராணுவ அதிகாரிகள் புனிதர்களாக வைத்துக் காக்கப்படுகின்றனர். ஆனால், அரசியல்வாதிகள் - மக்கள் பிரதிநிதிகள் தலையீட்டால்தான் நிர்வாகம் சீர்கெட்டுப் போகிறது. அதிகாரிகளைச் சுதந்திரமாகச் செயல்படவிட்டால் திறமையான ஆட்சி நடக்கும் என்று பார்ப்பன, நடுத்தர, மேட்டுக்குடியினர் பிரச்சாரம் செய்கின்றனர். அரசியல்வாதிகள் - கிரிமினல்கள் - அதிகாரிகளின் முக்கூட்டுதான் நாட்டையே ஆட்டிப் படைப்பதாக ஆய்வறிக்கைகள் கூறுகின்றன. இதிலும் இவர்களின் பின்னணியில் இருக்கும் தரகு அதிகார வர்க்கம், நிலப்பிரபுக்கள் மறைக்கப்படுகின்றனர். ஆனால், இந்தச் சமூக விரோத அரசியல் கூட்டில் அதிகாரிகள் மட்டுமே யோக்கியமானவர்கள் என்று மோசடி செய்கின்றனர். தேர்தல்கள் மூலம் ஏற்படும் ஆட்சி மாற்றம் எல்லாம் ஆளும் நிர்வாக அமைப்பை மாற்றுவதில்லை; அதன் மேல்மட்டத்தை, மூடுதிரையை மாற்றுவதுதான்.

ஆறாவதாக, இந்த நிரந்தரமான ஆளும் நிர்வாக அமைப்பை அகற்றாமல் எத்தனை தேர்தல்கள் வந்தாலும், அது நாடாளுமன்ற ஜனநாயகமாக இருந்தாலும் சரி, அதிபர் ஆட்சி முறையாக இருந்தாலும் சரி, அடிப்படை அரசியல், சமூக, பொருளாதார மாற்றம் எதையுமே சாதிக்க முடியாது. நடைபெறும் தேர்தல்கள் எல்லாம் இந்த உண்மையை மூடிமறைத்து, தற்போதைய அரசியல் அமைப்பு நீடித்திருப்பதற்கான ஒப்புதலை மக்களிடம் பெறுவதற்காகவே நடத்தப்படுகின்றன. இதற்கு நேர்மாறாக, மாற்றாக மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ளும் ஓர் அதிகார அமைப்பை நிறுவியாக வேண்டும்.

மக்கள் தாம் வாழும் கிராமங்கள், பகுதிகளில், தொழில் புரியும் ஆலைகளில் எல்லாம் மக்கள் சர்வாதிகார மன்றங்களை நிறுவ வேண்டும். அனைத்து அதிகாரங்களையும் சொத்துக்களையும் கைப்பற்றிக் கொள்ள வேண்டும். உடமைகளை, குறிப்பாக நிலவுடமைகளை நியாயமான முறையில், வர்க்க அடிப்படையில் மறுவிநியோகம் செய்து பகிர்ந்து கொள்ள வேண்டும். கைப்பற்றப்பட்ட அதிகாரத்தையும், சொத்துக்களையும் காத்துக் கொள்வதற்கு மக்கள் படைக் குழுக்களை அமைத்து, ஆயுதமேந்த வேண்டும். இத்தகைய மக்கள் சர்வாதிகார மன்றங்களின் பிரதிநிதிகளடங்கிய கூட்டமைப்பே நாட்டை ஆள வேண்டும். இதற்குத் தடையாக நிற்கும் அனைத்துச் சக்திகளையும் அடித்து நிர்மூலமாக்க வேண்டும். அதற்கு முதற்படியாக தேர்தல்களைப் புறக்கணிப்பதோடு, தற்போதைய ஆளும் நிர்வாக அமைப்புக்குக் கட்டுப்பட மாட்டோம் என்று கலகம் செய்ய வேண்டும்.

படியுங்கள்!

**காஷ்மீர் யாருக்குச் சொந்தம்?**

★ காஷ்மீரில் ஒரு இலட்சம் இந்திய இராணுவத்தினர் நிரந்தரமாக நிறுத்தி வைக்கப்படக் காரணமென்ன?
★ கார்கில் போரின் பின்னணி என்ன?
★ காஷ்மீர் பிரச்சினையின் வரலாறு என்ன?
★ இந்தியா – பாகிஸ்தான் தீராப்பகைக்குத் தீர்வு என்ன என்பதை விளக்குகிறது இவ்வெளியீடு.

விலை: ரூ. 5 வெளியீட்டாளர்: புதிய ஜனநாயகம்

பிரதி வேண்டுவோர் புதிய ஜனநாயகம் முகவரிக்கு பணவிடை (M.O.) மூலம் ரூ. 6 அனுப்புக; அல்லது ரூ. 6 மதிப்புள்ள அஞ்சல் தலைகளை (STAMPS) அனுப்புக.


படிப்பகம்

www.padippakam.com

### மாஞ்சோலை – வல்லக்கடவு – மேகமலை

# தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையும் போராட்டமும்

— நேரடி செய்தித் தொகுப்பு

### சென்னையில்...

ஜூலை 30.. நெல்லை தாமிரபரணிக் கரையில் போலீசு நடத்திய படுகொலையைக் கண்டித்து சென்னையில் உண்ணாவிரதம். ''தலித் அமைப்புகளை ஒன்றுபடுத்தும் மாபெரும் பணியை, நாங்கள் செய்ய முடியாததை, தலைவர் மூப்பனார் செய்திருக்கிறார்'' - திருமாவளவன் பேசுகிறார். சுற்றிலும் மடிப்புக் கலையாத கதர் உடையுடன் த.மா.கா தலைவர்கள்; அக்கட்சியின் உதட்டுச்சாயம் பூசிய பெண்கள், விசிறிக் கொண்டு இருக்கின்றனர். ஆருணின் முஸ்லீம் ஐக்கிய ஜமாஅத்தைச் சேர்ந்த வியாபாரிகள் செல்ஃபோனுடன் நடமாடுகின்றனர். அருகில் காமாட்சி நாயுடுவின் படத்தைச் சட்டையில் குத்திய திராவிடத் தெலுங்கு முன்னேற்றக் கழகத்தினர். புதிய தமிழகத்திற்காக ஓரமாய் உட்கார்ந்திருக்கும் திரிசூலம் கல்லுடைக்கும் தொழிலாளிகள்.

### ஆரோக்கியநாதபுரத்தில்....

நெல்லை அருகேயுள்ள சிறு கிராமம் ஆரோக்கியநாதபுரம். வேலை நிறுத்தம் செய்துவரும் மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்கள், அங்கே தங்கியிருக்கின்றனர். தேவாலயத்தினுள்ளே ஆங்காங்கே துணிமூட்டைகள். வெளியே மணலில் விளையாடும் குழந்தைகள். தொழிலாளிகள் பலர் நெல்லை மாவட்டத்தில் பரவிக்கிடக்கும் தங்கள் சொந்த ஊர்களுக்குச் சென்று விட்டனர். இருப்பவர்களுக்காக ஓரத்தில் திறந்த வெளியில் சமையல் தயாராகிறது. உள்ளூர் மக்கள், தொழிலாளர்கள் புடை சூழ முன்னணியாளர்கள் அன்பு, டேனியல் இருவரும் பத்திரிகை நிருபர்களைச் சந்திக்கின்றனர். ஒவ்வொருவரிடமும் தங்கள் வாழ்க்கைப் போராட்டத்தைச் சலிக்கமால் விடிய விடியப் பேசுகின்றனர். இரவு அவர்களுடன் தங்கிவிட்டு மறுநாள் மாஞ்சோலைப் பயணம்.

### மாஞ்சோலையில்.....

பல நாட்கள் இலை பறிக்காமல் அடர்ந்து கிடக்கும் தேயிலைச் செடிகளின் உயரம் அவர்கள் நடத்தும் போராட்டத்தைத் தெரிவிக்கின்றது.

தோட்டத்தையும், தொழிலாளர்களையும் ஒரு நாளில் பார்த்துப் பேசிவிட்டு மீண்டும் நெல்லை. தொழிலாளர் நல அதிகாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், எதுவும் நடக்காதது போல ஓடும் தாமிரபரணி — இவர்களுடன் பயணத்தின் முதல்கட்டம் முடிகிறது.

### மேகமலையில்.....

அடுத்தநாள் விருதுநகர், தேனி வழியாக கம்பம்; மலைகடந்து கேரளத்தின் வண்டிப் பெரியார் அருகிலிருக்கும் ஆர்.பி.டி எஸ்டேட். மலையாளச் சாயலில் தமிழ் பேசும் தொழிலாளிகளுடன் ஒரு நாள். மீண்டும் கம்பம் திரும்புதல். அருகிலிருக்கும் மேகமலையில் இந்துஸ்தான் லீவரின் எஸ்டேட். மப்பு, மந்தாரம், சாரல், கடுங்குளிர் கலந்த மலைச்சூழலில் வேலை முடிந்து வந்த தொழிலாளர்களுடன் ஒரு நாள். ஒருவாரப் பயணம் முடிந்து கம்பம் வி.வி.மு தோழர்களிடம் விடை பெற்றுகொண்டு பேருந்து ஏறுவதற்கு முன்னதாக ஒரு தேநீர். வழக்கமான தேநீர்தான்; ஆனால், சுவைக்கவில்லை.

★☆★

### சினிமாவில்......

பசுமை நிறைந்த ஊட்டி மலைத்தொடர். வண்ண உடையுடன் கொழுந்து பறிக்கும் அழகான மேக்கப் பெண்கள். சென்னையிலிருந்து வந்து தங்கி, துரத்தித் துரத்தி அந்தப் பெண்களைக் காதலிக்கும் பணக்காரத் தமிழ்க் கதாநாயகர்கள். அகன்ற திரையில் தேயிலைத் தோட்டத்தைச் சித்தரிக்கும் தமிழ் சினிமாவின் படிமத்தை முதலில் காறித் துப்பிவிட்டு, யதார்த்தத்திற்குத் திரும்புவோம்.

நமது ஒரு வாரப் பறவைப் பார்வையினூடாகக் கிடைத்த விபரங்களை வைத்தே ஒரு முழுமையான திரைப்படமோ, வீடியோப்படமோ, நாவலோ உருவாக்க முடியும். அது இயலாதெனினும், மலையில் வாழும் மக்களின் வாழ்க்கையை ஒரு கோட்டுச் சித்திரமாகவாவது வரைய முடியும். அந்தக் கோட்டினூடாக இருக்கும் ரத்தமும், சதையும், எலும்பும் நிறைந்த வாழ்க்கையை உங்களாலும் உணர முடியும்.

★☆★

### பெண் தொழிலாளர்கள்

தேயிலைத் தோட்டத்துப் பெண் தொழிலாளிகளின் முக்கியமான வேலை கொழுந்து பறிப்பது. காலை 7.30-க்கு வேலை நேரம் ஆரம்பம். குடியிருப்பின் அருகில்தான் ''மஸ்டர் ரோல்'' (ஆளெடுப்பு) கட்டிடம் இருக்கும். கங்காணிகளும், பிரிவு அதிகாரிகளும் இங்கேதான் தொழிலாளர்களைப் பதிவு செய்து தோட்டங்களுக்கு அனுப்ப வேண்டும் என்பது விதி. அங்கிருந்து நடந்து சென்றால் வேலைநேரம் குறையும் என்பதால், நேரடியாகத் தோட்டங்களுக்கு அனுப்பிவிடுவது எங்கும் வழக்கம். 7 கி.மீ. மலை ஏறிச் செல்ல வேண்டிய ஒரு பெண், அதிகாலை 3 மணிக்கு எழுந்து, சமைத்து, குழந்தைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, 6 மணிக்குள் புறப்பட வேண்டும்.

கடுங்குளிரைத் தடுக்கக் கவச உடைகள் கிடையாது. மடித்துக் கட்டிய சேலையின் மேல் 3 ''பிளாஸ்டிக் ஷீட்டு''க்களைச் சுற்றி, அதன்மேல் ஒரு உரச்சாக்கு; அப்புறம் தேயிலை பறித்துப் போடும் இடுப்புத் தட்டு (சாக்கு), 3 கிலோ கத்தரிக்கோல், காலை - மதியம் உணவுச்சட்டி, தலைக்கு முக்காடிட ஒரு சாக்கு - மொத்தம் 20 கிலோ எடையுடன் மலை ஏற வேண்டும். கவச உடையுடன் 20 கிலோ எடையுடன் கார்கில் மலை ஏறும் இராணுவ வீரனுக்குத் தரப்படும் மதிப்பும் மரியாதையும் அவளுக்குத் தெரியாது.

5 நிமிடம் தாமதமானாலும், 'திரும்பிப் போ, வேலை கிடையாது' என்பான் கங்காணி. காலைப்பிடித்துக் கெஞ்ச வேண்டும். அவனுக்குத் தெரியாமல் செடிகளுக்குக் கீழே காலை உணவை விழுங்க வேண்டும். சிறுநீர் கழிக்கவோ, மாதவிடாய்க் காலங்களில் ஒதுங்குவதற்கோ சென்றால், கங்காணி கத்துவான். 'உன்னை நம்ப முடியாது; ஒன்னுக்குப் போன இடத்தைக் காட்டு' என்பான். குளிரோடு சேர்த்து வெட்கமும், வேதனையும் உடலைக் கூனிக் குறுக்கும்.

8 மணி நேரம் கொழுந்து பறிக்கும் கைகளின் வேகத்தில் மாற்றம் கூடாது. கைகளில் பறிப்பது நின்றுபோய்விட்டது. கனமான கத்திரிக்கோலைத் தூக்கி கத்தரி வெட்டுவது என்றால் கைக்கடுப்பு அதிகம் இருக்கும். இடுப்பில் எப்போதுமிருக்கும் 10 கிலோ கொழுந்துடன் நடப்பது வலிக்கும். கொழுந்து பறிக்கும் போது, தவறிப் போய் கீழிருக்கும் தாயிலையில் கிள்ளி விட்டால், தண்டனையாக அடுத்த நாள் வேலை கிடையாது. (''பருவமான



படிப்பகம்

www.padippakam.com

கொழுந்தத்தான் பறிப்போம்; மீதியை 8 நாள் கழிச்சு அடுத்து ரவுண்டுல பறிக்கணும்னு விட்டுடுவோம். செடிகள் எங்க புள்ளங்க மாதிரி'' — ஒரு பெண் தொழிலாளி)

மதிய இடைவேளை. பச்சைக் குழந்தை வைத்திருக்கும் பெண், மடைதிறந்த வெள்ளம் போல, மலை இறங்கி வீடு சென்று பால் கொடுத்துவிட்டு மீண்டும் ஏறி வருவதற்குள் இடைவேளை நேரம் முடிந்திருக்கும். உட்கார்ந்து உண்ண இடம் கிடையாது. மழையானால் நனைந்து கொண்டே மழை நீருடன் சோற்றை முழுங்க வேண்டும். பனிக்காலம், மழைக்காலம், குளிர்காலம் - எல்லாவற்றிலும் வேலை செய்ய வேண்டும்.

மாலை 6 மணிக்கு வீடு திரும்பினால் அரைமணி நேரம்தான் குழாயில் குடிநீர் வரும். சண்டை போட்டுப் பிடிக்க வேண்டும். குழந்தைகளைக் குளிக்க வைத்து, சமைத்துச் சாப்பாடு போட வேண்டும். தேயிலைத் தூள் தொழிற்சாலையில் கணவன் வேலை பார்க்கிறான் என்றால், இரவு உணவு கொண்டு செல்ல வேண்டும். அதற்காக இருட்டில், மீண்டும் மலை ஏறி இறங்க வேண்டும். வந்து படுத்தால் உடலின் அலுப்பில் குளிர் மறந்து தூக்கம் வரும். அவளின் ஒரு நாள் கழிவது இப்படித்தான்.




**கையுறையோ, சுவாசக் கவசமோ இன்றித் தேயிலைச் செடிகளுக்கு மருந்தடிக்கும் மேகமலை எஸ்டேட் தொழிலாளி.**

## ஆண் தொழிலாளர்கள்

ஆண்களுக்கு காட்டு வேலையும், தேயிலைத் தூள் தொழிற்சாலை வேலையும் அதிகம். தேயிலைச் செடி வைக்க மலைச் சரிவை மட்டம் போடுவது, கண்ணு வைத்தல், களை பறிப்பது, உரம் போடுதல், மருந்தடித்தல், கவாத்து வெட்டுதல் (கிளைகளை நறுக்குவது) அவைகளில் சில. உரம் என்றால் 50,100 கிலோ மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு, 10 கி.மீ. மலையில் ஏறிப்போய், சில ஹெக்டேர்களில் போட வேண்டும். பலரிடம் மருந்தடிப்பதற்குத் தேவையான பாதுகாப்பு கவசமோ, உடையோ கிடையாது. சில தோட்டங்களில் நிரந்தரத் தொழிலாளிக்கு மட்டும் தரப்படுகிறது. காவாத்து வெட்டுவது முன்பு கையில்; இப்போது எந்திரத்தில். 10 கிலோ எந்திரத்தை 50 கிலோ வலுக்கொண்டு இயக்கி 225 முதல் 350 செடிகள் வரை வெட்ட வேண்டும். வெட்டி முடிந்ததும் வலிக்கும் நெஞ்சில் சாராயம் இறங்கும். அலுப்பும் பறந்து போகும். இப்படிப்பட்ட ஒரு எந்திரத்தின் வேலையில் 20 பேர் உடல் உழைப்புக் கூலியும் பறிபோகும். மழைக்காலங்களில் காலில் அட்டை ஏறும். ரத்தம் குடித்து விட்டு அது வாய் விட்டுவிடும் என்று தொழிலாளர்களின் வேலையும் தொடரும்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஓய்வு கிடையாது. வீட்டையும், வீட்டைச் சுற்றியும் சுத்தம் செய்வது; தவறாமல் காட்டிற்குச் சென்று ஒரு வாரத்துக்குத் தேவையான சுள்ளி சேகரிக்க வேண்டும். வார இறுதியிலும், கூலி பெறும் மாதத்தின் முதல் 10 நாட்களிலும் - பொருள் வாங்குவதற்காக மலை இறங்க வேண்டும். சாக்குப் பைகளுடன், மினி பஸ்ஸின் கூரையில் மட்டும் 40 பேர் பயணம் செய்ய வேண்டும். அரிசி, பருப்பு, மளிகை சாமான்களை நிர்வாகம் சலுகை விலையில் விற்க வேண்டும் என்று சட்டம் உண்டுதான். ஆனால் கல்லிடைக் குறிச்சியில் விற்கப்படும் 10 ரூபாய் அரிசி, மாஞ்சோலையில் 13 ரூபாய். தனியார் கடைகள் மட்டுமே உண்டு. ஆகவே வேறு வழியின்றி, கீழிறங்கி பொருள் வாங்கி பேருந்தில் பிதுங்கி வரும் தொழிலாளர்களின் காட்சி போர்க்களத்தை நினைவுபடுத்தும். 5000 அடி உயரத்தில், மொட்டைக் கூரைப் பேருந்தில், கொண்டை ஊசி வளைவுகளில் கீழே விழாமல் வரும் அவர்களுக்குப் பாதுகாப்பு யார்?

**பன்னாட்டு நிறுவனமான இந்துஸ்தான் லிவர், தனது தொழிலாளர்களுக்குக் கொடுத்திருக்கும் குடியிருப்பின் இலட்சணம்!**



மேகமலையில் பேருந்து ஏறும் முன்பு, ஒரு கோவிலில் நிற்கும். மணியடிக்கும் மாரியம்மன் கோயில் பூசாரி, பேருந்தைச் சுற்றி பிரசாதம் கொடுத்து தட்சிணை பெறுவார். நெற்றியில் பூசிய நீறுடன், அம்மனின் 'பாதுகாப்பில்' பயணம் தொடரும். பேருந்துச் சேவையை இயக்கி, பராமரிப்பது அரசுதான், நிர்வாகமல்ல. பல இடங்களில் இந்த மினி பஸ்களுக்கு முன் பதிவு உண்டென்றால் பார்த்துக் கொள்ளுங்கள். சிரமங்களை நேரில் பார்க்கும் ஓட்டுநரும், நடத்துநரும் தொழிலாளர்களுக்கு நண்பர்கள். அவசரத்திற்கு வாங்க வேண்டிய பொருளை கீழிருந்து வாங்கி வந்து வீட்டின் முன்பு ''ஹாரன்'' அடித்துக் கொடுக்கும் அன்பான ஓட்டுநர்களும் உண்டு.

## தோட்டக் குடியிருப்புகள்

இலங்கை தேயிலைத் தோட்டத்தில் 'லயம்' என்றழைக்கப்படும் வரிசை வீடுகளை, இங்கே 'லைன்' என்கிறார்கள். ஒரு லயனுக்கு 5, 6 வீடுகள் இருக்கும். எப்போதோ கட்டிய, இடிந்து விழும் சுவர்களுக்கு மேல் கூரையாகப் போடப்பட்டிருக்கும் அஸ்பெஸ்டாஸ், துருப்பிடித்த தகரம், காற்றில் பறக்கும் ஓடுகள் மூன்றையும் பனியும், குளிரும் எளிதில் தாக்கி வீட்டை நிரப்பும். வெறும் காலுடன் இடிந்த காரை அல்லது மண் தரையில் நிற்க முடியாது. ஒரே வீட்டில் தடுப்பு போட்டு 3 குடும்பங்கள் வரை வசிக்க வேண்டும். ஒரே குடும்பத்தில் 2, 3 தம்பதியினர் வாழும் குடும்பங்களையும் பார்க்க முடியும். அறைகளில் பொருள் அடைசல் மும்பய் தாராவியின் குடிசையை நினைவுபடுத்தும். பிரம்மாண்டமான மலைகளில் மனிதனுக்கு மட்டும் ஏன் நெரிசல்? தற்காலிகத் தொழிலாளிகளுக்கு குடியிருப்பு கிடையாது. அதனால், மக்கள் தாங்களாகவே தங்கள் வீடுகளை இல்லாதவர்களுடன்


படிப்பகம்

www.padippakam.com

பகிர்ந்து கொள்கிறார்கள்.

ஆடிக் காற்றில் பறக்கும் ஓடுகளுக்குப் பாரமாக மண் மூட்டையை நிரப்பியிருக்கிறார்கள். அதையும் தாண்டி மாஞ்சோலையில் ஓடுகள் உடையும்; காற்றிலே பறக்கும். அதனால் வரும் நட்டத்தை நிர்வாகம் ஏற்காது. மேகமலையில் கூரையின் மேலிருக்கும் மணல் மூட்டைகளில் செடி கொடிகளும் உண்டு. குளிரை ஓரளவிற்குத் தடுக்கும் உள் கூரைச் செலவு தொழிலாளியினுடையது. வீட்டிற்கு வெள்ளையடிக்க மூன்றாண்டுக்கு ஒருமுறை சுண்ணாம்பைக் கொடுத்து ஒரு நாள் கூலியையும் நிர்வாகம் கொடுக்கும். இதனால் வெள்ளையடிக்கும் கணக்கில் முக்கால் வாசி மிச்சமாகும். வீட்டைச் சுற்றி வேலிகள் இல்லை. கரடி தாக்கிய, பாம்புகள் கடித்த கதைகள் மாஞ்சோலையில் ஏராளம். வாசலுக்கு வெளியே தாண்டினால் அதல பாதாளச் சரிவுகளும் உண்டு. நமக்குத்தான் திகைப்பென்றாலும், மக்களுக்கு அவை சாதாரணமானவை.



**குளிர், பனி, மழையில் இருந்து தொழிலாளர் குடும்பத்தினர் தங்களைத் தற்காத்துக் கொள்ள இந்த உடைகள் போதுமா?**

## தோட்டத்துக் குழந்தைகள்

மலைக்காடுகளை அழித்துச் செப்பனிட்டு, பல்லாயிரம் ஹெக்டேரில் தேயிலைத் தோட்டத்தை உருவாக்கிய தொழிலாளர்களுக்கு தங்கள் குழந்தைகளைப் பெற்று வளர்ப்பது அசாத்தியமானது. நிரந்தரப் பெண் தொழிலாளிகளின் குழந்தைகளுக்கு மட்டுமே காப்பக வசதி. கணவன் நிரந்தர ஆண் தொழிலாளி, மனைவி தற்காலிகப் பெண் தொழிலாளி என்றால்கூட காப்பக வசதி கிடையாது. குழந்தைகள் குளிரும் தரையில் உருளும். வீட்டுப் பெரிசுகளும், அண்டை அயலாரும் பார்த்துக் கொண்டால் உண்டு. பள்ளிக்குச் செல்வதென்றால் பேருந்து ஏறி, பல மைல் தாண்டிச் செல்ல வேண்டும்.

மலையில் கல்வி என்றால், ஊட்டி, கொடைக்கானல் கான்வென்டுகள் என்று நினைத்து விடாதீர்கள். மேகமலை ஹைவேவிஸ் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், ''இது எங்களுக்கு பணிஷ்மெண்ட் ஏரியா'' என்கிறார்கள். ஆசிரியர்கள் யாரும் அங்கு தங்குவதில்லை. தேனி, கம்பம் என்று பல ஊர்களிலிருந்து வருகிறார்கள். பேருந்து ஒரு நாள் வரவில்லை என்றால் பள்ளி விடுமுறை.

பள்ளியின் தகவல் பலகை, 10-ஆம் வகுப்பின் தேர்வுச் சராசரியை 20 சதவீதம்தான் என்கிறது. பலகை ஏதுமில்லாத அஸ்பெஸ்டாஸ் கூரையின் கீழே கடுங்குளிர் தடையின்றி குதிக்கின்றது. உரச்சாக்கை கோட்டாக தைத்து ஸ்வட்டரின் மேல் போட்டு கொண்டாலும், மாணவர்களுக்கு நடுக்கம் குறையவில்லை. பள்ளிக்கு வந்து போவதே ஆசிரியர்களுக்கும், மாணவர்

# நாம் சென்று வந்த தேயிலைத் தோட்டங்கள் - ஓர் அறிமுகம்

### மாஞ்சோலை

திருநெல்வேலி மாவட்டம் - கல்லிடைக்குறிச்சி அருகே இருக்கும் மணிமுத்தாறு அணையின் மேலே, பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேசனின் (பி.பி.டி.சி.) 'சிங்கம்பட்டி குரூப்' மாஞ்சோலைத் தேயிலைத் தோட்டம் உள்ளது.

இதன் பரப்பளவு 8,750 ஏக்கர். உயரம் 400 முதல் 6500 அடி வரை, இருக்கிறது. நிர்வாகத்தின் கணக்குப்படி 1,643 நிரந்தரத் தொழிலாளிகளும், 743 தற்காலிகத் தொழிலாளிகளும் உள்ளனர். கணக்கில் வராமல் பணியாற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகம் என்று தொழிலாளிகள் கூறுகின்றனர். 133 வருட வயதைக் கொண்ட பி.பி.டி.சி. 1913-இல் தேயிலைச் சாகுபடியை ஆரம்பித்தது. 1929-இல் சிங்கம்பட்டி ஜமீன்தாரிடம் ஒரு ஏக்கருக்கு குத்தகை விலையாக ரூ. 88 விதம் 99 வருடத்திற்கு குத்தகை எடுக்கப்பட்டது. இத்தோட்டத்தை 1952 - சென்னைத் தோட்டங்கள் ஒழிப்பு சட்டப்படி அரசு எடுத்துக் கொண்டாலும், பழைய ஒப்பந்தப்படி குத்தகையை நீடிக்க அனுமதித்தது. தற்போது ஒரு ஏக்கருக்கு ரூ. 10 வீதம் ஆண்டு வாடகை, அரசுக்கு கிடைக்கிறது. மாஞ்சோலையில் தேயிலைத் தூள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மூன்று உள்ளன.

### வண்டிப் பெரியார்

மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள கேரள மாநிலத்தின் குமுளிக்கு அருகில் வண்டிப் பெரியார் நகரத்திலிருக்கும் வல்லக்கடவில் அமைந்துள்ளது 'ராவ் பகதூர் தாகூர்' (ஆர்.பி.டி.) தேயிலைத் தோட்டம், கேரளாவில் பெரிய தோட்டங்களில் ஒன்று. பரப்பளவு 4,500 ஏக்கர். சபரிமலை, மவுண்ட் என இருபெரும் பிரிவுகளில் 9 எஸ்டேட்டுகள் உள்ளன. அவையும் 18 உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

அதில் ஒன்றுதான் நாம் சென்ற வல்லக்கடவு மவுண்ட் பிரிவு. இங்கு 8-ஆவது காலனியில் 160 நிரந்தரத் தொழிலாளிகளும், 340 தற்காலிகத் தொழிலாளிகளும் உள்ளனர். முழுத் தோட்டத்தில் சுமாராக 4000-த்திற்கும் மேற்பட்ட தொழிலாளிகள் இருப்பார்கள். 8 தேயிலைத் தூள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன.

### மேகமலை

கம்பம், தேனி சாலையில் இருக்கும் சின்னமனூர் அருகில் இருப்பது மேகமலை. இங்கு இந்துஸ்தான் லீவரின் தேயிலைத் தோட்டம் சுமார் 10,000 ஏக்கரில் உள்ளது. அதில் மேகமலை, ஹைவேவிஸ், மணலார், அப்பர், வெண்ணிலார், மகாராஜ மெட்டு, இரங்கலார் என ஏழு எஸ்டேட்டுகள் உள்ளன. நிரந்தரத் தொழிலாளிகள் சுமார் 2100 பேரும், தற்காலிகத் தொழிலாளிகள் 1000 பேரும் உள்ளனர். தூள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று உள்ளது. 7 எஸ்டேட்டுகளில் குடியிருப்போர் அனைவரும் ஹைவேவிஸ் நகர பஞ்சாயத்தில் வருகின்றனர். மக்கள் தொகை 7,740.



படிப்பகம்

www.padippakam.com

களுக்கும் சாதனை என்பதால் கல்வி - அறிவு இதற்கெல்லாம் வழியில்லை. இங்கும் கல்விச் செலவை அரசு ஏற்றிருக்கிறது. தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பயிலக் கூடாது என்பதில் நிர்வாகமும் எச்சரிக்கையாய் இருக்கிறது. சட்டப்படி செய்ய வேண்டிய உதவிகள், ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டிய ரூ. 2 இலட்சம் பணம் எதுவும் கிடையாது. கேட்பாரும் இல்லை.

இதையும் தாண்டி மேல்நிலைக் கல்விக்கும், பட்டப்படிப்பு படிப்பதற்கும் கீழே உள்ள ஊர்களில் விடுதிகளில் தங்கிப் படிக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் 3 பேர் வருடம் முழுவதும் உழைத்தால்தான் ஒருவரைப் படிக்க வைக்க முடியும். எல்லாத் தோட்டங்களிலும் கூடுதலாகப் படித்தவர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். தப்பித்தவறி பட்டம் பெற்றவர்களுக்கும் நிர்வாக அலுவலக வேலை எளிதில் கிடைக்காது. படித்தவன் என்பதால் தோட்ட வேலையும் கிடையாது.

### பொழுது போக்கு

ஒவ்வொரு தொழிலாளியும், குடும்பமும் தனக்குப் பின் தன் குழந்தையாவது மலையில் சிரமப்படக் கூடாது; படித்து வேறு வேலைக்குப் போக வேண்டும் என நினைத்தாலும், முடியவில்லை. அந்த நினைப்பு மட்டும் வாழையடி வாழையாகத் தொடர்கிறது. போக்குவதற்கு பொழுதில்லை என்றாலும், எஸ்டேட்டில் பொழுது போக்கு எப்படி இருக்கும்? சட்டப்படி உள் அரங்க, வெளி அரங்க விளையாட்டுப் பொருள்களும், இடங்களும் இருக்க வேண்டும். குடியிருக்கவே லோல்படும் போது விளையாட்டெல்லாம் சாத்தியமா? பேருந்து வந்தால் தினசரிகள் வரும். பல வீடுகளில் வானொலி உண்டு. சில வீடுகளில் தொலைக்காட்சியும் உண்டு.

அதிலும் மாஞ்சோலையில் கேபிள் டி.வி இணைப்பு தடை செய்யப்பட்டிருக்கிறது. ''நீயும் சன் டி.வி, ஸ்டார் டிவி பார்த்தின்னா, உனக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்?'' — தோட்டத்து மேலாளரின் மேற்படி நியாயம்தான் அதற்குக் காரணம். சலித்துப் போன தூர்தர்ஷன் நிகழ்ச்சிகளையாவது மாலையில் ஊர்ப் பஞ்சாயத்து டி.வி.யில் பார்க்கலாம் என்றால் அதுவும் 6.30-க்கு மேல் பார்க்க முடியாது. வேலை முடிந்து வரும் நேரமும் அதுதான். அப்பறம் வெந்ததைத் தின்று உறுத்தும் மலைக் கம்பளியைப் போர்த்திக் கொண்டு முடங்க வேண்டியதுதான். எல்லாத் தோட்டங்களும் இரவு 7 மணிக்கு அடங்கி விடுகிறது. வருடத்தின் பெரும்பான்மை நாட்கள் குளிர்காலமாக இருப்பதாலும் வேறு வழியில்லை. ''எங்களுக்கு பொழுதுபோக்கே, ரெண்டுபுறம் இருக்கும் மலையை மாறி மாறி பார்க்கறதுதான்'' என்கிறார் மேகமலையில் இருக்கும் ஒரு இளைஞர்.

# மலைகளில் நடப்பது யாருடைய ஆட்சி?

பல்லாண்டுகளாக மலைகளில் நடப்பது முதலாளிகளின் ஆட்சி மட்டும்தான். குரூப் மேனேஜர் ஜெயராமை, மாஞ்சோலையின் கருணாநிதி என்றுதான் தொழிலாளிகள் அழைக்கின்றனர். இவரின் மாத சம்பளம் மட்டும் ரூ. 25,000. கண்கவரும் வண்ணம் கொண்ட ஒரு மாளிகையில் (நீச்சல் குள வசதியுடன்) குடியிருக்கிறார். நிர்வாகத்தரப்பில் உயர் அதிகாரிகளின் குழந்தைகள் அனைவரும் ஊட்டியில் படிக்கின்றனர். இவர்களுக்கென்றே தனியாக மாட்டுப் பண்ணை உண்டு. ஆளுக்கொரு டாடா சுமோ, என்பீல்டு புல்லட்டும் உண்டு. மாஞ்சோலை பி.பி.டி.சி.யின் சட்ட ஆலோசகர் திவாகர் மூர்கத் வால்பாறையில் இருக்கிறார். தொழிலாளிகளை மோசடி செய்ய உதவும் இந்த சட்ட நரிக்கு வருடத்திற்கு 4 முறை சுற்றுலா அலவன்ஸ் உண்டு என்றால் பாருங்கள். புல்லட்டில் வரும் மேனேஜர்களைப் பார்த்து, ''ஐயா, சாமி, துரை வணக்கமுங்க'' என்பதைத் தவிர, வேறு வார்த்தைகளை தொழிலாளிகள் பேச முடியாது; பேசியதும் இல்லை.

எல்லாத் தோட்டங்களிலும் பஞ்சாயத்து, வார்டு போன்ற குடியாட்சி அமைப்புக்கள் உண்டு. போலி ஜனநாயகத்தின் உண்மை முகத்தை மலையகம் மட்டும் தெளிவாகக் காட்டுகிறது. மேகமலையிலிருக்கும் 7 எஸ்டேட்டுகளும் ஹைவேவிஸ் நகர பஞ்சாயத்தில் வருகிறது. அங்கு நாம் சென்றிருந்தபோது பஞ்சாயத்து தலைவர் இல்லை. விரிவாக்க அலுவலர் (E.O.) மட்டும் இருந்தார். ''எல்லாத்தையும் நிர்வாகம் பார்த்துக்குவாங்க. நாங்க லைட் போடுறது, நூலகம், சமுதாயக் கூடம் இதெல்லாம் பார்த்துக்குவோம்'' என்று உண்மையை ஒத்துக் கொண்டார், இந்த அதிகாரி. அதிலும் எரியாத லைட், பாழடைந்த சமுதாயக் கூடம் இவற்றையெல்லாம் தொழிலாளிகள் நமக்குக் காண்பித்தார்கள் என்பது வேறு விசயம். முதலாளிகளின் ஆட்சியில் 'மக்கள் தங்களையே ஆட்சி செய்யும் ஜனநாயக அமைப்பின்' லட்சணம் இதுதான்.

பெயர்ப் பலகை, பி.பி.டி.சி.யின் ஆட்சி தொடங்குவதைக் குறிக்கிறதா? 'மாஞ்சோலையின் கருணாநிதி' - குரூப் மேனேஜர் ஜெயராம் (இடது)



தோட்டங்களில் பொதுவான அரசியல் சுவரொட்டிகள் ஒட்டக் கூடாது. ஒட்டினால் நிர்வாகமே ஒரு தொழிலாளியைக் கூலிக்கு அமர்த்தி உடனே கிழிக்கும். அந்நியர்கள் எவரும் நுழையக் கூடாது. தனியார் வாகனங்களில் வருபவர்களிடம் ஆயிரம் விசாரணைக்குப் பிறகு நுழைவுக் கட்டணம் பெற்றுக் கொண்டுதான் அனுமதிக்கிறார்கள். புகைப்படம் எடுக்க அனுமதியில்லை. ஏறக்குறைய இராணுவத் தொழிற்சாலையைப் போன்றே தோட்டங்கள் இருக்கிறது. அப்போது மட்டும்தான் முதலாளிகள் தங்களது மாபெரும் வருவாயையும், தொழிலாளர்கள் மீதான மாபெரும் அடிமைத்தனத்தையும் தொடரமுடியும்.

### தோட்ட முதலாளிகள்

'இந்துஸ்தான் லீவர் டீ எஸ்டேட்ஸ் (இந்தியா டிவிஷன்) உங்களை வரவேற்கிறது' - மேகமலையின் அடிவாரத்தில் நாம் கண்ட அறிவிப்புப் பலகை இதுதான். உலகம் முழுவதும் டீ எஸ்டேட்டுக்காக எத்தனை டிவிஷன்கள் வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. மேகமலைத் தோட்டத்தில் இந்துஸ்தான் லீவர் மற்றும் ப்ரூக் பாண்ட் இரண்டு நிறுவனங்களுக்கும் பங்குகள்



படிப்பகம்

உண்டு. முன்பு பாண்ட்டின் ஆட்சி, தற்போது லீவரின் ஆட்சி. தேயிலை, காஃபி இரண்டையும் 'மாறாத அதே தரம், புத்தம் புதிய பேக்கில்' என்று புதிய உறையில் விற்பதற்காக, விளம்பரத்திற்கு மட்டும் கோடிக் கணக்கில் இந்நிறுவனங்கள் செலவழிக்கின்றன. கேவலம், தொழிலாளர்கள் குடியிருக்கும் ஓட்டைக் கூரையைக் கூட மாற்றாமல் இருப்பவர்களும் இவர்கள் தான்.

மாஞ்சோலை பி.பி.டி.சி.யின் பங்குதாரர்களில் கிரிஜ், முத்தண்ணா (எம்.டி. கர்நாடகா), கொத்தபாலா (ஆங்கிலேயர் - இலண்டன்) போன்ற நபர்களும், பாம்பே டையிங், பிரிட்டானியா போன்ற நிறுவனங்களும் உண்டு. இதில் பாம்பே டையிங் - நுஸ்லி வாடியாவின் குடும்பமே முக்கியமான முதலாளிகளாக இருக்கிறார்கள். அம்பானியை எதிர்த்த வர்த்தகப் போராட்டத்தில் வெல்வதற்காக, 'சமூக நீதிப் போராளி'களில் ஒருவரான வி.பி. சிங்கை ஆதரித்த புரவலர்களும் இவர்கள்தான். மாஞ்சோலைத் தோட்டத்தின் வருட வருமானம் குறைந்தபட்சம் ரூ. 350 கோடியாகும். நிரந்தர - தற்காலிகத் தொழிலாளிகளின் தினக்கூலி, போனஸ் - ஆண்டிற்கு சுமார் 4.5 கோடி மட்டும்தான். இன்னும் நிர்வாகச் செலவு, பூச்சி மருந்து, உரம், இதரச் செலவுகளைச் சேர்த்தாலும் 10 கோடியைத் தாண்டாது. மீதியெல்லாம் இலாபம்தான். அரசு, நிதித்துறை, சுங்கத் துறை, வருமான வரித்துறை எவருக்கும் இவர்களது இலாபக் கணக்கு தெரியாது.

அனைத்தும் சரியாக இருந்தால், ஒரு ஏக்கர் நஞ்சை நிலத்தில் விவசாயிக்கு கிடைக்கும் ஒரு போக நெல்லின் மதிப்பு அதிகபட்சம் ரூ. 10,000 மட்டும்தான். அதிலும் கூலி, உரம், மருந்துக்கு ரூ. 5000 செலவாகும். சிறு, நடுத்தர, பணக்கார விவசாயிகளும் இப்படி அல்லல்படும்போது, ஒரு தேயிலைத் தோட்ட முதலாளியின் இலாபம் அபரிமிதமானது. ஒரு தேயிலைச் செடியில் கொழுந்து பறித்தால், 8 நாட்களில் மீண்டும் துளிர்க்கும். 3 வருடத்திற்கு ஒரு முறை கவாத்து வெட்டப்படும் தேயிலைச் செடி 3 மாதத்தில் வளரும். ஒரு செடியின் வயது 30 வருடங்கள் நீடிக்கும்.

முதலாளிகளைப் பொருத்தவரை தேயிலை ஒரு பச்சைத் தங்கம்தான். அசாமில் தேயிலைத் தோட்டம் வைத்திருக்கும் டாடா, உல்ஃபா அமைப்பிற்கு பணம் கொடுத்த பிரச்சினை 2 ஆண்டுகளுக்கு முன் பேசப்பட்டது. அப்போது டாடா முதலாளி, 'உல்ஃபா' குறித்து மாஞ்சோலையின் முதலாளியான நுஸ்லி வாடியாவுடன் விவாதித்த தொலைபேசி பேச்சும் வெளியிடப்பட்டது. பத்திரிகைகளும் ஓட்டுக்கட்சித் தலைவர்களும் ஏனைய தொழிலதிபர்களும் - தோட்ட முதலாளிகளின் பாதுகாப்பற்ற தன்மை குறித்து கண்ணீர் வடித்தனர். தோட்டங்களைப் பாதுகாக்க அரசு செலவில் இராணுவத்தை நிறுத்த வேண்டும் என்றும் கோரினர்.

ரொம்ப சரி! தோட்ட முதலாளிகளிடமிருந்து, தோட்டத் தொழிலாளர்களைப் பாதுகாக்க யாரை அனுப்புவது?

★ ☆ ★

# தேயிலை - மலையில் விளையும் பச்சைத் தங்கம்

இந்தியத் தேயிலையின் 98-ஆம் ஆண்டு உற்பத்தி 87 கோடி கிலோ. அதில் உள்நாட்டிற்கு 70 கோடியும், ஏற்றுமதிக்கு 17 கோடியும் ஒதுக்கப்பட்டன. நாம் அருந்தும் (தரங்குறைந்த) தூளின் சந்தை விலை ஒரு கிலோவிற்கு ரூ. 200 ஆகும். இதில் ஒரு கிலோவிற்கு குறைந்தபட்சம் ரூ. 150 இலாபம் எனக் கொண்டால், 70 கோடி கிலோவின் இலாபம் 10,500 கோடி ரூபாய் ஆகும். ஏற்றுமதித் தேயிலையின் தரம் அதிகம். ஒரு கிலோவிற்கு மிகக் குறைவான இலாபம் ரூ. 200 எனக் கொண்டால் 17 கோடி கிலோவின் வருவாய் 3,400 கோடி ரூபாய் ஆகும். சிறிய தோட்ட முதலாளிகளுக்கு இத்தகைய இலாபம் பொருந்தாது; எனினும், இந்தியத் தோட்டங்களின் பெரும்பங்கு தரகு முதலாளி மற்றும் பன்னாட்டு நிறுவனங்களிடம்தான் உள்ளன.

பி.பி.டி.சி., ஆர்.பி.டி., ஏ.வி.டி., டாட்டா, பிர்லா, இந்துஸ்தான் லீவர், ப்ரூக் பாண்ட் போன்ற நிறுவனங்கள் தேயிலையை உற்பத்தி செய்து தூளாக்கி, விற்பனையும் செய்கின்றன; ஏற்றுமதியும் செய்கின்றன. அவர்களின் உண்மையான இலாபக் கணக்கு எவரும் அறியமுடியாத ஒன்று. மேலும், இவர்களின் தோட்டங்களில் காப்பி, மிளகு, ஏலக்காய் போன்றவையும் விளைகின்றன. அவற்றின் வருமானம் தனி. இப்படி தோட்ட முதலாளிகளின் வருவாய் எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதை ஊகித்துப் பாருங்கள். நாம் சென்று வந்த மூன்று எஸ்டேட்டுகளில் அறிந்த விவரங்களின்படியும், பத்திரிகைகளில் வந்த விபரங்களை வைத்தும் அவர்கள் வருமானம் எவ்வளவு என்று பார்ப்போம்.

## மாஞ்சோலை பி.பி.டி.சி.

மாஞ்சோலை பி.பி.டி.சி.யின் தேயிலை உற்பத்தி குறித்து ஃபிரண்ட்லைன் பத்திரிகையில் வந்த தகவல்கள்: தேயிலைத் தூள் வருடத்திற்கு 80 இலட்சம் கிலோ; காஃபி 10 இலட்சம் கிலோ. உரம், பூச்சிகொல்லி மருந்து இன்றி வளர்க்கப்படும் ஆர்கானிக் தேயிலைத் தூள் 10 இலட்சம் கிலோ. 1988-இலிருந்து இவ்வகைத் தேயிலைக்காக தனி எஸ்டேட்டையும், தொழிற்சாலையையும் நிர்வாகம் உருவாக்கியிருக்கிறது. தற்போது உலகின் மிகப்பெரும் ஆர்கானிக் தேயிலை உற்பத்தியாளர்களும் இவர்கள்தான். இதன் ஒரு கிலோ தூளின் விலை ரூ. 1000 முதல் 2000 வரை இருக்கும்.

ஆயிரம் கிலோ ஒரு டன் என்றால், 80 இலட்சம் கிலோ தேயிலை என்பது 8 ஆயிரம் டன். சாதாரண தேயிலைத் தூளில் ஒரு டன்னுக்கு குறைவான இலாபம் (1000 x ரூ. 100) ஒரு இலட்சம். 8 ஆயிரம் டன்னுக்கு 80 கோடி ரூபாய். அதேபோல் காஃபி ஒரு கிலோவுக்கு இலாபம் ரூ. 150 என்றால் 10 இலட்சம் கிலோவிற்கு 15 கோடி ரூபாய். அடுத்து ஆர்கானிக் தேயிலைக்கு ஒரு கிலோவிற்கு ரூ. 1000 விதம் 10 இலட்சம் கிலோவிற்கு 100 கோடி ரூபாய். மொத்த இலாபம் 195 கோடி ரூபாய்.

நாமறிந்த விவரத்தின்படி, அங்கிருக்கும் 3 தூள் தொழிற்சாலைகள் வருடம் முழுவதும் - 24 மணி நேரமும் செயல்படுகிறது. ஒரு மணி நேரத்தில் அடுப்பில் வறுக்கப்படும் தூளின் மதிப்பு 12 இலட்சம். மொத்தத்தில் பி.பி.டி.சி.யின் ஆண்டு வருமானம் தோராயமாக ரூ. 350 கோடிக்கு குறையாது.

## வல்லக்கடவு ஆர்.பி.டி.

பொதுவாக 4 கிலோ தேயிலைக் கொழுந்திலிருந்து ஒரு கிலோ தூள் தயாரிக்க முடியும். இடம், கொழுந்தின் பருவம் போன்றவை காரணமாக இக்கணக்கு சிறிது மாறுபடலாம். இங்குள்ள தோட்டத்தில் பருவ காலத்தில் (6 மாதம்) ஒரு நாளைக்கு ஒரு டிவிஷனில் 10,000 கிலோக் கொழுந்தும், பருவமற்ற காலத்தில் (6 மாதம்) 500 கிலோவும் கிடைக்கும். வருடத்திற்கு ஒரு டிவிஷனில் 18,90,000 கிலோ வீதம் 18 டிவிஷனில் 3,40,20,000 கிலோ உற்பத்தியாகிறது. இதில் 4-ல் ஒரு பங்கு தூளாகிறது என்றால் 85 இலட்சம் கிலோ கிடைக்கும். இதற்கு ரூ. 150 வீதம் ஒரு கிலோவிற்கு இலாபம் என்றால் சுமாராக 130 கோடி கிடைக்கும். மேலும் பருவ காலத்தில் பல இடங்களிலிருந்து ஒரு கிலோ கொழுந்து ரூ. 10 அல்லது 15 வீதம் வாங்கியும் தூளாக்குகின்றனர். அதன் வருமானமும், காஃபி, ஏலக்காய், மிளகு இவற்றின் வருமானமும் சேர்ந்தால் 250 கோடிக்கு குறையாது.

## மேகமலை இந்துஸ்தான் லீவர்

இங்கு சூப்பர், சூப்பர் பெரிது, பைன் டஸ்ட், ரெட்டஸ்ட், பெக்கோ, .பியபன்ஸ் போன்ற தூள் ரகங்கள் உற்பத்தியாகின்றன. பருவகாலம், சாதாரண காலம் இரண்டிலும் சராசரியாக ஒரு நாளைக்கு, 72,000 கிலோ தயாராகிறது. எனில் இவற்றின் ஆண்டு மதிப்பு சுமாராக ரூ. 350 கோடியாகும். மேலும் பருவ காலங்களில் அபரிதமாக விளையும் கொழுந்துகளை வறுக்க முடியாமல் ஒரு கிலோவிற்கு ரூ. 18 வீதம் வெளியே ஷிற்கின்றனர். அதன் கணக்கு தனி.

www.padippakam.com

# நவீன கொத்தடிமைத்தனத்தில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்

இனி, இம்மக்கள் மலையோடு சங்கிலியாகக் கட்டுண்டு கிடக்கும் நிலையைப் பரிசீலிப்போம். நிரந்தர தேயிலைத் தோட்டத்து தொழிலாளியேயானாலும், ஓர் அரசு ஊழியர், ஆசிரியர், வங்கி ஊழியர், தொழிற்சாலைத் தொழிலாளர் ஆகியோருக்கு இருக்கும் ஊதிய உயர்வு, பலவித விடுமுறை, இதர சலுகைகளில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இவர்களுக்குக் கிடையாது. ஒரு நிரந்தரத் தொழிலாளிக்கு இடுப்புத் தாட்டும் (ரூ. 40) ஒரு மலைக் கம்பளியும் கொடுப்பார்கள். (அதன் விலை ரூ. 150 பெறும். கரடுமுரடான, உறுத்தும் மோட்டா ரகமான அந்த மலைக் கம்பளிக்குப் பதிலாக, நல்ல கம்பளி வாங்க வேண்டுமானால் ரூ. 500 தேவை. அதற்காக, ரூ. 100 மட்டுமே நிர்வாகம் தரும். மீதியைத் தொழிலாளிதான் போட்டு வாங்க வேண்டும்.) மாதத்திற்கு 26 நாள் வேலை உத்திரவாதம் உண்டு என்பதைத் தவிர, தினக்கூலிதான்; மாதச் சம்பளம் கிடையாது. அதாவது ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாள்தான்; ஆனால், சம்பளம் கிடையாது. இடி, மின்னல், மழை, மலைச்சரிவு ஆகிய இயற்கைச் சீற்றத்தால் வேலைக்குப் போக முடியாது என்று தொழிலாளி முடிவெடுத்தால், அன்றும் சம்பளம் கிடையாது. மருத்துவ விடுப்பு ஆண்டிற்கு 14 நாள் உண்டென்றாலும், பாதிக் கூலிதான் கிடைக்கும். அதையும் மருத்துவர் மற்றும் மேலாளரின் ஒப்புதல் சீட்டு பெறுவதற்கு மலைமலையாய் அலைய வேண்டும். அதற்குள் நோயே குணமாகிவிடும்.

தேர்தலன்றுகூட ஓட்டுப் போட்டுவிட்டு, வேலை செய்ய வேண்டும். பல்லாயிரம் தொழிலாளிகள், பல ஆண்டுகள் வேலை பார்த்தாலும் இவர்கள் அனைவரும் தினக்கூலிதான். நிரந்தரத் தொழிலாளியேயானாலும், அவரது குடும்ப உறுப்பினர் மருத்துவச் செலவைக் கூட சம்பளத்தில் பிடிப்பார்கள். முற்றிய நோய்வாய்ப்பட்ட அவரது குடும்ப உறுப்பினரை மாஞ்சோலையிலிருந்து பாளையங்கோட்டை கொண்டு செல்ல ரூ. 1300 கட்ட வேண்டும். அப்போதுதான் ஆம்புலன்ஸ் வரும். எஸ்டேட் மருத்துவமனையில் பிரசவம் பார்க்க 2 நாள் கட்டணம் ரூ. 1000. இவர்களின் சம்பளப் பட்டியலை வாங்கிப் பார்த்த போது ஏகப்பட்ட பிடித்தங்கள். மேற்படி சில்லறை சலுகைகள் கூட மறுக்கப்பட்டவர்கள் தினக்கூலித் தொழிலாளர்கள். நிரந்தரத் தொழிலாளியோ, தற்காலிகத் தொழிலாளியோ, யாரானாலும் சட்டப்படி அவர்களுக்கும் குடும்பத்தாருக்கும் நிர்வாகம் செய்து தர வேண்டிய குடியிருப்பு, மருத்துவம், கல்வி, கவச உடுப்பு, உணவு விடுதி போன்ற அடிப்படை வசதிகள் அனைத்தும் மறுக்கப்பட்டிருக்கின்றன.

சிங்கம்பட்டி ஜமீன்தார் முருகதாஸ், மாஞ்சோலைத் தொழிலாளிகளுக்கு எல்.ஐ.சி. ஏஜெண்டாகவும் இருக்கிறார். அவருக்குரிய தொகையை சம்பளத்தில் பிடிக்கிறார்கள். மாடு வளர்த்தால் மாதம் ரூ. 5 கட்ட வேண்டும். அது கன்று போட்டால் விற்றுவிட வேண்டும். மாடு விற்பதும் வாங்குவதும் நிர்வாகத்தின் அனுமதியுடன்தான் நடக்கும். ஆடுகள் வளர்க்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ''கூட்டுறவு''க் கடைகளில் வாங்கப்படும் அரிசி, மளிகைச் சாமான்களுக்கும் சம்பளம் பிடிக்கப்படும். மின் கட்டணம், கேண்டின் செலவு, தொழில்வரி ஆண்டிற்கு ரூ. 12, குடும்ப உறுப்பினர்களின் மருத்துவச் செலவு - என்று ஏராளம் பிடித்த பின் சில நூறுகள் மட்டும் மிஞ்சும். குடும்பத்தில் இருவர் வேலை பார்த்தாலும் போதாது. எஞ்சிய தேவைகளுக்கு மலையின் கீழே கந்து வட்டிக்கடன் வாங்க வேண்டும். 'எல்லாம் ஒரு ரொட்டேஷனில்தான் ஓடுது' என்கிறார் ஒரு தொழிலாளி.

ஓய்வு பெற்றால், வீட்டையும் மலையையும் உடன் காலி செய்வது போலத்தான். தேர்ந்த தொழிலாளி என்றால், அதே தினக்கூலியுடன் வேலை செய்ய நிர்வாகம் அனுமதி அளிக்கும். மற்றவர்கள் நிர்வாகத்தின் மாட்டுப் பண்ணைகளில் சாணம் அள்ளுவது, சாக்கடை சுத்தம் செய்வது, இதர எடுபிடி வேலைகள் செய்தால் ஒரு நாள் கூலி ரூ. 20 தரப்படும். 62 வயது இம்மானுவேல், மாஞ்சோலையில் 45 வருடம் வேலை செய்து ஓய்வு பெற்றவர். அவருக்கு கிடைக்க இருக்கும் கிராஜுவிட்டி தொகை ஒரு லட்சம் ரூபாய் தேறலாம். அதில் குழந்தைகள் படிப்புச் செலவு போன்ற கடன்களைக் கழித்தால் சில ஆயிரங்கள் மிஞ்சும். 45 வருட அரசு - வங்கிப் பணி செய்தவர்களுக்கு எவ்வளவு கிடைக்கும்? மேலும் இம்மானுவேலுக்கு ஓய்வு பெறும்வரை ஒரே தினக் கூலிதான். தினக் கூலிக்கு ஏது ஊதிய உயர்வு? பி.எப்., கிராஜுவிட்டி தொகையை அலைந்து வாங்க ஒரு வருடம் ஆகும். சி.பி.எம். ஆளும் கேரளம் உள்ளிட்டு, எழுதப்படிக்கத் தெரிந்திருந்தாலும் எல்லாத் தோட்டங்களிலும் சம்பளக் கைச்சாத்தில் கைநாட்டுதான் போட வேண்டும். கையெழுத்துப் போடுவது என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

விடுமுறை நாள் வேலைக்கும், பணி நேரத்தைத் தாண்டி செய்யப்படும் வேலைக்கும் சட்டப்படி 'ஓவர்டைம்' கூலி 2 மடங்கு கொடுக்க வேண்டும். மலைகளில் மட்டும் அந்த விதி செல்லாது. தமிழ்நாட்டில் 8 மணி நேரத்திற்குள் 16 கிலோ கொழுந்தும், கேரளத்தில் 14 கிலோவும் பறிக்க வேண்டும். இந்த அளவைவிடக் குறைத்துப் பறித்தால், தமிழ்நாட்டில் பாதிக் கூலியும்; கேரளத்தில் குறையும் ஒரு கிலோவிற்கு 83 பைசா குறைத்தும் தரப்படும். சரி, அதிகமாகப் பறித்தால் என்ன தருவார்கள்? தமிழ்நாட்டில் 16 கிலோவுக்கு மேல் பறிக்கும் ஒரு கிலோவிற்கு 10 காசு தருவார்கள். கேரளத்தில் 14 முதல் 30 கிலோ வரை 37 பைசாவும், அதற்கு மேல் பறித்தால் 47 பைசாவும் தருவார்கள். மழைக் காலத்தில் பறிக்கப்படும் கொழுந்துகளின் எடையில் 4 கிலோ குறைக்கப்படும்.

''பொம்பளை ஆளுக கணக்கு பார்த்துப் பறிக்கிறதில்லை, 30, 100, 350 கிலோ கூட பறிப்பாங்க'' என்கிறார் ஒரு தொழிலாளி. நிர்வாகம் செய்யும் கணக்கு மோசடிகளை தொழிலாளர்களின் கைகள் செய்வதில்லை. இவர்கள் பறிக்கும் 1 கிலோ கொழுந்தின் சந்தை விலை குறைந்தது ரூ.18 ஆகும். குறைந்த பட்சம் 14 கிலோவுக்கு மேல் பறிக்கப்படும் ஒவ்வொரு 14 அல்லது 16 கிலோவிற்கு இரு மடங்கு கூலி கொடுப்பதற்குப் பதில் 10 காசு, 30 காசு என்பது எவ்வளவு பெரிய மோசடி!

**''டாடா டீ'' நிறுவனத்தில் வேலை பார்க்கும் 60,460 தொழிலாளர்களுக்கு 98-99-ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்ட சம்பளம்/கூலி/போனஸ் 69.34 கோடி ரூபாய். அதே ஆண்டில் அந்நிறுவனம் விளம்பரத்திற்காகச் செலவழித்தது 73.46 கோடி ரூபாய்!**





படிப்பகம்

www.padippakam.com

# முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்கும் கருணாநிதி அரசின் மோசடி விளம்பரம்

● அரசு விளம்பரம் - மாஞ்சோலையில் கொத்தடிமை இல்லை என தேசிய மனித உரிமை கமிஷன் - கார்த்திகேயன் அறிவித்துள்ளார்.

★ உண்மை நிலவரம் - விதிப்படி இல்லையென்றாலும், நவீன முறையில் அடிமைத்தனம் உள்ளதா என்பதை கட்டுரையைப் படிக்கும் வாசகர்கள் முடிவு செய்க.

● அ.வி.: தமிழகத்தில்தான் அதிக அளவு ஊதியம் - ரூ. 63.88.

★ உ.நி.: இதில் அடிப்படை ஊதியம் ரூ. 31 மட்டுமே. மேலும் தொழிலாளர்களில் பெரும்பான்மையினரான தற்காலிகத் தொழிலாளிக்கு ஆண்டிற்கு 100 நாள் வேலை கிடைத்தால் அதிகம். பஞ்சப்படி சேர்த்து தரப்படும் 63.88-இல் ஏனைய வாழ்க்கை வசதிகளுக்காக மாதந்தோறும் சில நூறுகள் பிடித்தும் செய்யப்படுகிறது.

● அ.வி.: 98 சதவீத தொழிலாளிகளுக்கு வீடு வசதி.

★ உ.நி.: ஒரு வீட்டில் 3 குடும்பங்கள் சிறை வைக்கப்பட்டுள்ளன. நம் கண்ணாலேயே கண்டோம். அதன்படி 98 சதவீத நிரந்தர தொழிலாளர்களுக்கு 30 சதவீத வீடுகள்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. பல்லாயிரக் கணக்கான தற்காலிகத் தொழிலாளர்களுக்கு வீடு கிடையாது.

● அ.வி.: 328 காப்பகங்கள், 88 பள்ளிகள், 104 கேன்டீன்கள், 129 மருந்தகங்கள், 24 மருத்துவமனைகள் தமிழகத் தோட்டங்களில் உள்ளன.

★ உ.நி.: காப்பகங்கள் தேவைப்படும் இளம் வயது தற்காலிக பெண்களுக்கு அதைப் பயன்படுத்த முடியாது. பள்ளி, கேன்டீன், மருத்துவ வசதி போன்றவையும் கணக்கில் மட்டும்தான் வரும். நடைமுறையை ஏனைய பெட்டிச் செய்திகளில் காண்க.

● அ.வி.: 1000 தற்காலித் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப் பட்டனர்.

★ உ.நி.: நிரந்தரத் தொழிலாளிக்கு மாதத்திற்கு 26 நாள் வேலை, சில அற்ப சலுகைகள் தவிர வேறு ஏதும் கிடையாது. நாம் சென்று வந்த தோட்டங்களில் 10, 15, 20 வருடமாக வேலை பார்க்கும் தற்காலிகத் தொழிலாளிகள் ஏராளம் இருக்கின்றனர். மொத்தத் தொழிலாளர்கள் எண்ணிக்கையில் இவர்கள் பங்கு 50 சதம் இருக்கும்.

● அ.வி.: இலை பறித்தல், கவாத்து வெட்டுதல் போன்ற பணிகளில் இயந்திரம் கூடாது என்ற கோரிக்கையை அரசு தலையீட்டால் நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

★ உ.நி.: பச்சைப் பொய். நாம் சென்ற 3 தோட்டங்களிலும் கத்தரி வைத்து கொழுந்து பறிப்பதையும், எந்திரத்தின் மூலம் தேயிலைச் செடியைக் கவாத்து வெட்டுவதையும் கண்ணால் கண்டோம். இவை ஒரு தொழிலாளிக்கு கடினமான வேலை என்பதோடு, பலரின் வேலையும் பறிபோகிறது. எந்திரமயமாக்கம் 50 சதவிதம் ஆக்கப்பட்டுவிட்டது என்பதுதான் உண்மை.

● அ.வி.: சட்டவிதியை அமலாக்காத தோட்ட நிறுவனங்கள் மீது கடந்த ஆண்டு 1,034 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

★ உ.நி.: கள்ளச் சாராய வியாபாரிகள் மது விலக்கு போலீசுக்கு மாதந்தோறும் 'வழக்குகள்' கொடுப்பதற்கும், இதற்கும் வேறுபாடு இல்லை. தொடரப்பட்டுள்ள வழக்குகளில் நிர்வாகம் குற்றமிழைத்ததாக நிரூபிக்கப்பட்டாலும், அபராதத் தொகை ரூ. 500-லிருந்து 5000-த்தைத் தாண்டாது. அவ்வளவு ஏன், ஒரு முதலாளி சட்டத்தின் விதிகள் அனைத்தையும் மீறுவதாக வைத்துக் கொண்டாலும், ஆண்டுதோறும் சில ஆயிரங்களை அபராதமாக வீசிவிட்டு தொழில் நடத்தலாம்; தடையில்லை.

அதிலும் குறைவாகப் பறித்தால் அரை நாள் சம்பளம் வெட்டு என்றால் அயோக்கியத்தனமில்லையா?

தன் வீட்டைச் சுற்றி காய்கறிகள் போடுவதற்கு சட்டப்படி இடம் ஒதுக்கித் தர வேண்டும். ஆனால், வீணாகும் தரிசு நிலத்தில்கூட காய்கறிகள் பயிரிடத் தொழிலாளருக்கு உரிமை இல்லை. மாஞ்சோலையில் நாம் கண்ட இடங்களில் அத்தகைய வீட்டுத் தோட்டங்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன. எல்லா எஸ்டேட்டுகளிலும் நடப்பது, போவதற்கான இடம் போக மீதியெல்லாம் தேயிலைதான். ''வெள்ளைக்காரன் கொடுத்த தோட்டத்தை 80-ஆம் ஆண்டுக்கு மேல் பறிச்சிட்டாங்க' என்கிறார் மாஞ்சோலை பெரியவர் இம்மானுவேல். ஆக, காய்கறிகளைக் கூட, அவ்வளவு பெரிய மலையில் அதிக விலை கொடுத்துத்தான் வாங்க வேண்டும். கேரள வண்டிப் பெரியாரில் சமீபத்தில் மறைந்து போன புரட்சியாளர் தோழர் மணி (வி.வி.மு, பு.மா.இ.மு) மக்களைத் திரட்டி, முதலாளிகளுடன் மோதி, சிலருக்காவது நிலத்தை பட்டாவுடன் வாங்கினார். அத்தகைய தலைவர்கள் எல்லாத் தோட்டங்களிலும் இல்லையே!

மலைகளில் 9 மாதம் கடுங்குளிர் நிலவுகிறது. அதை எதிர்த்து வாழ கம்பளி ஆடை, கம்பளிப் போர்வை, மழைக் கோட்டு, தொப்பி, குடை என்று குழந்தை முதல் பெரியவர் வரை ஒருவருக்கு குறைந்த பட்சம் ரூ. 500 ஆகிறது. அதையும் தொழிலாளிகளே வாங்க வேண்டும். ஆம், இப்படித்தான் தொழிலாளிகள் மலைகளோடு கட்டிப் போடப்பட்டிருக்கிறார்கள். பிரம்மாண்டமான இயற்கையை எதிர்கொண்டு வாழ்வதற்கே கூலி போதாது. கூலிக்காக வாழ்க்கை, வாழ்க்கைக்காக கூலி என்று பல தலைமுறைகளாக அங்கே முளைபடிக்கப்பட்டு ஆயுள் கைதிகளாக இருப்பது இப்படித்தான். இது அடிமைத்தனம் இல்லையா? கடன் கொடுத்து குடும்பமே தலைமுறை தலைமுறையாக வேலை செய்ய வைப்பதைத்தான் - கொத்தடிமை முறை என்று சட்டம் சொல்கிறது. சட்டத்தின் விதிகளில் சிக்காமல் நவீன முறைகளில் இங்கே கொத்தடிமைத்தனம் நீடிக்கிறது.

## 'மார்க்சிஸ்டு'களின் ஆட்சியிலும் தோட்ட முதலாளிகளின் ராஜாங்கம்தான்!

போலி கம்யூனிஸ்டுகளுக்கும், கருணாநிதிக்கும் இடையே தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிக கூலி கிடைப்பது தமிழ்நாட்டிலா? மேற்கு வங்கத்திலா? என்று லாவணி நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது, பல்வேறு தொழிற் சங்கங்களைச் சேர்ந்த குழுவொன்று, மேற்கு வங்க மாநிலத்தில் வாழும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையை ஆய்வு செய்து, "அம்மாநிலத்தைச் சேர்ந்த 3,00,000 தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வாழையடி வாழையாக கொத்தடிமைத்தனத்தில் இருத்தி வைக்கப்பட்டிருப்பதையும், அவர்களின் வாழ்க்கையும், உயிரும் தோட்ட முதலாளிகளின் கைகளில் ஊசலாடிக் கொண்டிருப்பதையும் அம்பலப்படுத்தி, அறிக்கை வெளியிட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களுக்குச் சட்டப்படி கொடுக்க வேண்டிய குடியிருப்பு, குடிநீர்வசதி, கல்வி, சுகாதார - மருத்துவ வசதிகள், குழந்தை காப்பகங்கள், பொழுதுபோக்கு போன்ற எல்லா உரிமைகளும் மறுக்கப்பட்டு, மலைகளில் தனித் தனி தீவுகளாகக் கொட்டடிகளில் அடைக்கப்பட்டு, தோட்ட முதலாளிகளால் சுரண்டப்பட்டு வருவதை அவ்வறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. 'மார்க்சிஸ்டு'கள், இங்கே, தமிழகத்தில் தோட்டத் தொழிலாளர்களின் நண்பனாம்! அங்கே தோட்ட முதலாளிகளின் காவலனாம்! 'மார்க்சிஸ்டு'கள் மக்களை ஏய்ப்பதற்கு ஒரு வரம்பே கிடையாதா?

அஸ்ஸாமில் வாழும் 8,50,000 தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையும் இதிலிருந்து எவ்விதத்திலும் மாறுபடவில்லை என்றும் அக்குழுவின் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# சட்டம் பெயரளவு! நடைமுறை கடுகளவு!!

தோட்டத் தொழிலாளர் சட்டம் - 1951, தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதிகள் - 1955 — இரண்டு சட்டங்களும் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளைத் தெளிவில்லாமல் கூறுகின்றன. முதலாளிகளைப் பாதுகாக்கும் இந்தத் தெளிவில்லாத சட்டங்களில் இருக்கும் அரைகுறை சலுகைகள் கூட வழங்கப்படுகிறதா என்பதைப் பார்ப்போம்.

1. 50 ஹெக்டேருக்கு மேல் தோட்டம் வைத்திருக்கும் முதலாளி, ஒருவர் தனது தோட்டத்தை அரசிடம் பதிவு செய்வதற்கான கட்டணம் ரூ. 250 மட்டுமே!

2. சட்டப்படி ஒரு தொழிலாளி என்பவர் தோட்டம் தொடர்பான வேலைகள் செய்பவராவார். அது தவிர, கட்டுமான, சாலை, மின்வசதி போன்ற வேலைகள் செய்பவர் இப்பிரிவில் வரமாட்டார். ஒருவர் நேரடியாகவோ, ஒப்பந்தம் மூலமோ, வேறு நிறுவனத்தின் மூலமோ, வாடகைக்கு எடுக்கப்பட்டோ வேலை செய்தாலும் அவர் தோட்டத் தொழிலாளியாகவே கருதப்படுவார். அவருக்கு இலவச குடியிருப்பு - மருத்துவ சிகிச்சை உள்ளிட்டு அனைத்து வசதிகளும் அளிக்கப்பட வேண்டும்.

நடைமுறை:

*அனைத்து எஸ்டேட் நிர்வாகங்களும் தோட்டத் தொழிலாளிகளை தற்காலிகம் - நிரந்தரம் எனப் பிரித்து நிரந்தரத் தொழிலாளிகளுக்கு மட்டும் அச்சலுகைகளை வழங்குகிறது. ஆக, சரிபாதி தொழிலாளிகளுக்கு எந்த வசதியுமில்லை.*

3. ஒரு எஸ்டேட்டின் பல பிரிவுகளில் தோட்ட மருத்துவமனைகள் — ஆண் - பெண் மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தக வசதிகளோடு அமைக்க வேண்டும். இது வெளிப்புற நோயாளிகளுக்கானது. எஸ்டேட்டின் தலைமையகத்தில் 5 மருத்துவர்கள், 100 படுக்கைகள் மற்றும் அனைத்து மருத்துவ வசதிகளோடு, உள் நோயாளிகளுக்கான மருத்துவமனைகள் இருக்க வேண்டும்.

நடைமுறை:

*வெளிப்புற நோயாளிகளுக்கான மருத்துவமனைகள் என்பது உண்மையில் ஒரு கம்பவுண்டர் (படித்தோ, படிக்காமலோ) சில மாத்திரைகளோடு ஓர் அறையில் இருப்பதுதான். தலைமை மருத்துவமனை என்பது தோட்ட மருத்துவமனையின் வசதிகளைக் கொண்டிருக்கிறது. தொழிலாளிகளைப் பொருத்தவரை இதில் சிகிச்சை பெறுவது என்பது அப்பல்லோவிற்கு போவது போல, கைக்கு எட்டாததுதான்.*

4. மருத்துவ வசதிகள் இல்லாத பட்சத்தில் ஒரு தொழிலாளி வெளியே சிகிச்சை பெற்றால், அதற்கான செலவை நிர்வாகத்திடமிருந்து தொழிலாளர் நல ஆய்வாளர் (அரசு அதிகாரி) வசூலித்துக் கொடுக்க வேண்டும். மாறாக, நிர்வாகத்தின் மேல் நடவடிக்கை எடுக்க முடியாது.

5. இலவச மருத்துவச் சிகிச்சை ஒரு தொழிலாளிக்கும் அவரது குடும்பத்திற்கும் அளிக்கப்பட வேண்டும் என்பது விதி.

நடைமுறை

*இவ்வசதி ஒரு நிரந்தரத் தொழிலாளிக்கு மட்டும் அளிக்கப்படுகிறது. அவரது மனைவி அல்லது கணவர், வயதான குழந்தைகள், பெற்றோர்கள் ஆகியோருக்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதன்படி எல்லா எஸ்டேட் மருத்துவமனைகளும் இலாபகரமாய் இயங்குகின்றன.*

6. நிர்வாகம் இலாபமற்ற மலிவு விலையில் உணவகங்கள் நடத்த வேண்டும் என்பது விதி.

நடைமுறை

*தொழிலாளர் கூட்டுறவு என்ற பெயரில் அதிக விலையில் உணவகங்கள் நடத்தப்படுகிறது. அதுவும் அவர்கள் வேலை செய்யும் இடங்களில் அல்ல; குடியிருப்பின் அருகேதான் நடத்தப்படுகிறது.*

7. கைக்குழந்தையை வைத்திருக்கும் ஒரு பெண் ஒரு நாள் மட்டும் வேலைக்குச் சென்றாலும் குழந்தை காப்பக வசதி அவருக்கு அளிக்கப்பட வேண்டும் என்பது சட்டம்.

நடைமுறை:

*நிரந்தர பெண் தொழிலாளிக்கு மட்டும் (நிரந்தர ஆண் தொழிலாளிக்கும் கிடையாது) காப்பக வசதி அளிக்கப்படுகிறது. 15, 20 வருடங்கள் கழித்துத்தான் அதாவது கைக்குழந்தைகள் வளர்ந்த பிறகே - ஒரு பெண் நிரந்தரமாக்கப்படுகிறார். ஆக, ஆயிரக்கணக்கான பெண் தொழிலாளர்கள் இருக்கும் எஸ்டேட்டின் குழந்தைகள் காப்பகத்தில் சராசரியாக 5, 10 குழந்தைகள்தான் உள்ளன.*

8. பேறு கால விடுமுறை எல்லாப் பெண்களுக்கும் குழந்தை பெறும் முன்னும் பின்னும் பாதிக் கூலியுடன் 3 மாதம் விடுப்பு அளிக்கப்பட வேண்டும். அதுவும் அந்தப் பெண்கள் அந்த வருடத்தில் 160 நாள் வேலை செய்திருக்க வேண்டும். தற்போது வேலை நாட்களை 80 ஆகக் குறைத்திருக்கிறார்கள்.

நடைமுறை:

*இங்கு தற்காலிகத் தொழிலாளிகள் கருத்தரிப்பது தெரிந்தால் 79 நாட்கள் மட்டும் வேலை கொடுப்பார்கள். மேலும் நிர்வாகத்தின் கணக்கில் வரும் ஆண்டின் ஆரம்பம்தான் முக்கியம். இந்தக் கணக்கிற்கேற்பவே கருத்தரித்து வேலை செய்ய வேண்டும். அல்லது 5 மாத பிள்ளைத்தாச்சியை 5 கி.மீ. நடந்து போய் வேலை செய்யச் சொல்வார்கள். அது முடியாது போனால் நாள் கணக்கு குறையும். முன்னர் பார்த்தபடி குழந்தை பெறும் பருவம் தாண்டியே நிரந்தரத் தகுதி கொடுக்கப்படுவதால், பிரசவ கால விடுமுறை ஏட்டில் மட்டுமே இருக்கிறது.*

9. மக்களின் எண்ணிக்கைக்கேற்ப பள்ளிகள், விளையாட்டு, பொழுதுபோக்கு வசதிகள் எதுவும் சட்டப்படி எங்கும் கிடையாது. தொழிலாளர் குடியிருப்புக்கு பொதுமக்கள் எவரும் தடையின்றிச் செல்லலாம் என்ற விதிக்கும் மரியாதை கிடையாது. நிர்வாகத்தின் அனுமதி, விசாரணையின்றி யாரும் எஸ்டேட்டில் நுழைய முடியாது.

10. சட்டப்படி தொழிலாளர் நல அதிகாரி, ஆய்வாளர், மாவட்ட மருத்துவ அதிகாரி ஆகியோர் எஸ்டேட்டுகளுக்கு அடிக்கடி சென்று, ஆய்வறிக்கையை அரசிடம் அளிக்க வேண்டும். நாம் கேட்ட தொழிலாளர்கள் அனைவரும் 'இத்தெய்வங்களை' தம் வாழ்நாளில் பார்த்ததே இல்லை என்கிறார்கள்.

11. எஸ்டேட்டுகளில் இருக்கும் தேயிலைத் தூள் தயாரிப்புத் தொழிற்சாலைகள் - சட்டப்படி தோட்டத் தொழிலாளர் சட்டத்தில் வராது. இங்கு தொழிற்சாலைத் தொழிலாளர் சட்டத்தின் விதிகள் மட்டும் பொருந்தும். ஆயினும் இங்கும் தோட்டத் தொழிலாளரைப் போன்றே தினக்கூலி முறையும், 'தற்காலிக - நிரந்தர' மோசடிகளும் தொடருகின்றன. இதுபற்றி நெல்லை தொழிலாளர் நல அதிகாரியிடம் கேட்டபோது, 'அப்படியா எங்களுக்குத் தெரியாதே' என்றார்.

12. அரசு அதிகாரிகள் தவறுகளைக் கண்டுபிடித்து நிர்வாகத்தின் மேல் வழக்குத் தொடுத்தால் நிர்வாகத்திற்கு தண்டனை என்ன தெரியுமா? 3 மாதம் சிறையும் 500 ரூபாய் அபராதமும்தான். எல்லாவற்றுக்கும் மேலாகச் சட்டம் ஒரு விதியை வைத்திருக்கிறது. அதன்படி இச்சட்டத்திற்கு அப்பாற்பட்டு ஏற்படுத்தப்படும் விதிகள் - உடன்படிக்கைகள் - ஒப்பந்தங்கள் ஆகியவற்றுக்கு அரசுச் சட்டம் பொருந்தாது என்பதுதான். அப்புறம் என்ன? முதலாளிகள் ஆளுக்கொரு சட்டம் போட்டு ஆனந்தமாய் மலைகளை ஆட்சி செய்கிறார்கள்!



படிப்பகம்

www.padippakam.com

## மாஞ்சோலை தொழிலாளர் போராட்டம்

# உரிமைப் போராட்டமா? சாதியப் பிரச்சினையா?

கடந்த 98-ஆம் ஆண்டில் நடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது கிருஷ்ணசாமி மாஞ்சோலைக்கு வருகிறார். அதற்கு முன்பேயே தன்னார்வக் குழு ஒன்றின் உதவியுடன் மகளிர் மன்றம் தொடங்கிய பெண் தொழிலாளிகள் நிர்வாகத்துடன் முரண்படத் தொடங்கியிருந்தனர். புதிய தமிழகத்தின் தொடர்பு அவர்களுக்கு சிறிது தைரியத்தைக் கொடுத்தது. கிருஷ்ணசாமிக்கு சாப்பாடு போட்ட 'குற்றத்திற்காக' அன்பு டேனியல் தம்பதியினர் இடமாற்றம் செய்யப்பட்டனர். தேர்தலில் கிருஷ்ணசாமி தோற்றதும் அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இப்படித்தான் மாஞ்சோலைப் போராட்டம் ஆரம்பித்தது.

அதன்பின் தொடர்ச்சியாக வேலை நிறுத்தம், கைது, வழக்கு, மறியல், ஆர்ப்பாட்டம் என வளர்ந்து, மாஞ்சோலை விவகாரம் வெளியில் பேசப்படும் நிலையை அடைந்தது. நிர்வாகமும் அரசும் இதை சாதியப் பிரச்சினை - வன்முறை எனச் சித்தரிக்க முயன்றன. மாஞ்சோலை, மேகமலை இரண்டிலுமுள்ள தொழிலாளர்கள், 'கருணாநிதி, சமத்துவபுரம் ஆரம்பிப்பதற்கு முன்பே தங்கள் தோட்டங்கள் உண்மையான சமத்துவபுரமாக' இருந்து வருவதைப் பெருமையுடன் கூறுகின்றனர். '

எல்லாத் தோட்டங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்கள், குறிப்பாக பள்ளர்கள் கணிசமாக, இருந்தாலும் தேவர், நாடார், கோனார், பிள்ளை, நாயர், ஈழவர், அருந்ததியினர், வண்ணார், முஸ்லீம் என எல்லாச் சாதியினரும் கலந்தே வாழ்கின்றனர். எந்தக் கலவரமுமின்றி அவர்களிடையே பல கலப்பு மணங்கள் நடந்திருக்கின்றன. ஒரே சுடுகாடு; திருமணம், சாவு என அனைத்துச் சடங்குகளுக்கும் அனைவரும் செல்வது எல்லாம் அங்கே சாதாரணம். மொழியும், மதமும், சாதியும் தங்களின் முழுப் பொருளை மலைகளில் கொண்டிருக்கவில்லை.

ஆக, கருணாநிதியும் நிர்வாகமும்தான் சாதியப் பிரச்சினையாக்க முயலுகின்றார்களே ஒழிய, தொழிலாளர்களோ, கிருஷ்ணசாமியோ அல்ல. கிருஷ்ணசாமியின் மேல் மிகுந்த மரியாதை வைத்திருக்கும் தொழிலாளர்கள், 'டாக்டர் ஐயா வந்தப் பிறகு தான் நாங்க இவ்வளவு நாளா முட்டாளா இருக்கிறதே தெரிஞ்சுது; டாக்டரால் எங்களுக்கு பிரச்சினை கிடையாது; எங்களால்தான் அவர் பலரிடம் ஏச்சும் - பேச்சும் கேட்க வேண்டியிருக்கு'' என்கிறார்கள்.

மலையிலே முடங்கிக் கிடந்த மக்களுக்கு, அரசு, போலீஸ், நிர்வாகம், தங்கள் அடிமைத்தனம் - இவையெல்லாம் மெல்ல மெல்ல புரிய ஆரம்பித்திருக்கிறது. பண்ணையார் மூப்பனாரைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே, நில உச்சவரம்புச் சட்டம், உழுபவனுக்கு நிலம் சொந்தம் பற்றி கிருஷ்ணசாமி பேச முடியாது என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களது விழிப்பு நிலை ஒரு தொடக்கம்தான்.

5-ஆவது சம்பள கமிஷனின்படி மாநில அரசின் அலுவலக உதவியாளரின் அடிப்படைச் சம்பளம் ரூ. 750-இலிருந்து ரூ. 2550 ஆக உயர்ந்திருக்கிறது. தேயிலை முதலாளிகள் வைத்திருக்கும் 'டீ போர்டு' அமைப்பு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை தினக்கூலியை ரூ. 1 அல்லது 2 மட்டும் அதிகரிக்கும். மாஞ்சோலைத் தொழிலாளர்கள் முன்வைக்கும் கோரிக்கையான ரூ. 150 தினக்கூலியை அவர்கள் ஏற்கவில்லை. தற்காலிக உடன்படிக்கையில் ரூ. 63 மட்டும் கொடுப்பதாகச் சம்மதித்திருக்கிறார்கள். ஏனைய கோரிக்கைகளும் ஏற்கப்படவில்லை.

முக்கியமாக, வேலை நேரத்தை 7 மணி நேரமாக்க வேண்டும் என்பதை பி.பி.டி.சி. நிர்வாகம் ஏற்க மறுத்துவிட்டது. வீட்டிலிருந்து பல கிலோ மீட்டர் தூரம் மலையில் ஏறி இறங்கும் நேரத்தை கணக்கிலெடுத்தால், 7 மணி வேலை நேரக் கோரிக்கை மிகவும் நியாயமான ஒன்றாகும். முதலாளிகள் மறுத்தாலும் தொழிலாளர்கள் 7 மணி நேரம் மட்டும் வேலை செய்து, சுமார் 3 மாத காலம் தங்கள் எதிர்ப்பைத் தொடர்ந்தார்கள். 8 மணி நேரத்தில் 1.30 மணி நேரம் வேலை செய்யவில்லை என்று அரை நாள் சம்பளம்தான் கொடுப்போம் என நிர்வாகம் கூறிவிட்டது.

அதன்பின் இன்றுவரை வேலை நிறுத்தம் தொடர்கிறது. ஜூன் 6, 7 தேதிகளில் ஆர்ப்பாட்டம் செய்த தொழிலாளிகள் 600 பேரை (பெண்கள், குழந்தைகள் உட்பட) நயவஞ்சகமாகக் கைது செய்து திருச்சி சிறையில் அடைத்தார்கள். நம்மை மாஞ்சோலைக்கு அழைத்துச் சென்ற 16 வயது ஆரோக்கியசாமி தனது தம்பி, தாய், தந்தை என குடும்பத்துடன் சிறையில் அடைக்கப்பட்டான். இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் சிறை சென்ற பெரியவர் இம்மானுவேல், அதன்பிறகு சிறை சென்றது இப்போராட்டத்தில்தான். அவர் மீது போடப்பட்டுள்ள வழக்குகளின் வாய்தாவிற்காக மாதம் ஒருமுறை தனது சொந்த செலவில் மலை இறங்கி நீதிமன்றம் சென்று வருகிறார்.

தாழ்த்தப்பட்டவரைக் கலப்பு மணம் செய்த சுஜாதா என்ற இசுலாமியப் பெண், தன் கணவன் நிர்வாகத்தை ஆதரிக்கும் கருங்காலியாக மாறியவுடன், தாலியை வீசி எறிந்துவிட்டு சிறை சென்றார். தன்னார்வக் குழுக்களில் வேலை செய்துவிட்டு, தற்போது புதிய தமிழகத்துடன் இணைந்திருக்கும் எஸ்தர் ஒரு தொழிலாளியல்ல என்றாலும், சிறைவாசம் அனுபவித்தார். ''2 மாத சிறை அனுபவம், எந்தப் போராட்டத்தையும் எதிர்கொள்ளும் தெம்பை அளித்திருக்கிறது'' என்கிறார்.

சிறையில் அடைக்கப்பட்ட தொழிலாளிகளை விடுவிக்கக் கோரி ஜூலை 23-ந் தேதி நடந்த ஊர்வலத்தில் 17 பேர் கொல்லப்பட்டனர். 5 ஆண்டுகளுக்கு முன்பு, நாக்பூர் கோவாரி பழங்குடி மக்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக மந்திரியைப் பார்க்க ஊர்வலம் நடத்தினர். பார்க்க மறுத்த மந்திரி போலீசை விட்டு அடித்து விரட்ட உத்தரவிட்டதில் 200 பேர் கொலை செய்யப்பட்டனர். அங்கே மந்திரி, இங்கே கலெக்டர். கேவலம், மனு கொடுப்பதற்காக ஊர்வலம் நடத்திய மக்கள் கொல்லப்படுகிறார்கள் என்றால், இந்தக் கொடுமை இந்தியாவைத் தவிர எங்கு நடக்கும்?

பல்லாயிரம் மக்கள் வந்திருக்கும் ஊர்வலத்தில், கலெக்டரே தனது நாற்காலியை விட்டிறங்கி நடந்து வந்து மனுவை வாங்கினால் என்ன குடி முழுகிப் போகும்? கலெக்டர்

**மனு கொடுக்கச் சென்றவர்களை அடித்துக் கொன்ற தமிழகப் போலீசின் காட்டுமிராண்டித்தனம்**





படிப்பகம்

www.padippakam.com

# தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்க பாதுஷாக்கள்

தொழிற்சங்க நிலைமை ஒரேமாதிரிதான். தலைவர்களுக்கு கங்காணி (சூப்பர்வைசர்) பதவி, எஸ்டேட்டுகளின் பராமரிப்பு காண்ட்ராக்ட், வீடு, மருத்துவம் போன்றவற்றில் முன்னுரிமையும் தரப்படுகிறது. மேலும் எல்லா நிர்வாகங்களும் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களுக்குரிய சந்தாத் தொகையை தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து பிடித்துக் கொடுக்கின்றன. அப்புறம் என்ன? வீட்டிலும், மலையிலும் தொழிலாளர்களை கண்காணிக்கும் கங்காணி வேலையை தலைவர்கள் ஒழுங்காகச் செய்கின்றார்கள்.

மேகமலையில் ஹெச்.எம்.எஸ். - மைக்கேல், ஐ.என்.டி.யு.சி. - முருகையா, தி.மு.க. - மனோகர், அ.தி.மு.க. - வைக்கல் போன்றோர் வேலைக்குச் செல்லாத தலைவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு சாலை - வீடு பராமரிப்பு, பிளக்கிங் வெட்டு போன்ற வேலை ஒப்பந்தங்கள் விடப்படுகின்றன.

மாஞ்சோலையில் தி.மு.க. ஏசையாவிற்கு மரம், விறகு, கொழுந்து வேலை ஒப்பந்தங்களும், அ.தி.மு.க. மோகன்தாசின் மகனுக்கு சூபர்வைசர் வேலையும், ஏ.ஐ.டி.யு.சி. தலைவரின் மருமகனுக்கு நிர்வாகத்தின் அலுவலக வேலையும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவர்களைவிட பெரிய சங்கமான ஐ.என்.டி.யு.சி. ஆறுமுகத்தின் சலுகைகளும் பெரியவைதான். மாஞ்சோலையின் சுண்ணாம்பு காண்ட்ராக்ட் இவருக்குத்தான். வருடம் 80 டன் சுண்ணாம்பு வாங்குவதில் இவருக்கு கிடைக்கும் கழிவு மட்டும் ரூ. 1,80,000. மற்றும் இரும்புக் கழிவு, உரச்சாக்கு காண்ட்ராக்ட்டும் இவருக்குத்தான். மாஞ்சோலையின் 3 டிவிஷன் தலைவராகவும் இவர் இருப்பதால் 3 x 2000 என ரூ. 6000 சம்பளத்தையும் பெறுகிறார். தொழிற்சங்க சந்தா ரூ. 60 மூலம் ஆண்டிற்கு கிடைக்கும் தொகை ரூ. 1,20,000. இதன்மூலம் தலைவர் சேர்த்த சொத்துக்கள்: சாத்தான்குளத்தில் ஒரு பெட்ரோல் பங்க், நெல்லை மேம்பாலத்தில் ஒரு எலக்ட்ரிகல் கடை, 2 வாடகைக் கார், கொக்கிரகுளத்தில் 7 இலட்சம் பெறுமான பங்களா என்று நீளுகிறது. தாமிரபரணியில் 17 பேர் அடித்துக் கொல்லப்பட்டதற்கு அருகில்தான் தலைவரின் ஆடம்பர பங்களாவும் நிமிர்ந்து நிற்கிறது. இதுபோக தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதற்கு ரூ. 1000, 5000 என ஆளுக்கேற்ப வாங்குவார்.

71 வயதான ஆறுமுகம், நிர்வாகம் தனக்கு இறைத்திருக்கும் எலும்புகளுக்கு இன்றளவும் விசுவாசமாக இருக்கிறார். "தினக்கூலி ரூ. 63.88-ஐ 150 ரூபாயாக்கணும்கிற கிருஷ்ணசாமியின் கோரிக்கை நடைமுறை சாத்தியமற்றது, இந்த விபரீத கோரிக்கைகளை எந்த தொழிற்சங்கமும் ஆதரிக்க முடியாது" — இந்தியா டுடேக்கு ஆறுமுகத்தின் பேட்டி!

அலுவலகத்தில் கோடிகோடியாய்க் கொள்ளையடிக்கும் காண்ட்ராக்டர்கள், கந்து வட்டித் தொழிலதிபர்கள் - இவர்களின் வாகனங்களெல்லாம் தடையின்றிச் செல்லலாம். ஓட்டுக்கட்சித் தலைவர்கள் கலெக்டர் அலுவலக வளாகத்தினுள்ளே தேர்தல் பிரச்சாரம் செய்யலாம். மாஞ்சோலைத் தொழிலாளிகளின் கோரிக்கைகளுக்காக தலைவர்களின் ஜீப் மட்டும் செல்லக்கூடாது; அதற்காக போலீசு 17 பேரைக் கொல்லலாம் என்றால், அதிகார வர்க்கத்தின் கொழுப்பையும், திமிரையும் என்னவென்பது? நாம் கணக்குத் தீர்க்க வேண்டியவர்களின் பட்டியலில் தாமிரபரணிப் படுகொலைக்குக் காரணமானவர்களும் நிச்சயம் உண்டு.

ஊர்வலத்தில் வந்தவர்கள் பெண் போலீசிடம் அநாகரீகமாக நடந்து கொண்டார்கள் என்ற கதையை 6 நாள் கழித்து அவிழ்த்து விட்டார்கள். நெல்லை மாவட்ட ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரிகள் சங்கம் அதைப் பிரச்சாரம் செய்து, போலீசு வெறியாட்டத்தை மறைக்க முயல்கிறது. பெண்களும், குழந்தைகளும் உட்பட - வாழ்க்கைப் போராட்டத்திற்காக, உணர்வு பொங்க வரும் மக்களை இதைவிடக் கேவலப்படுத்த முடியுமா? பெண் போலீசை விடுங்கள், கை எறி தூரத்திலிருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகக் கண்ணாடிகளில் ஒன்று கூட உடையவில்லையே?

ஆனால், ஊர்வலத்தில் வந்த மக்களின் மண்டைகள் உடைக்கப்பட்டன. அடித்துத் துவைத்து பேச்சு மூச்சின்றி ஆற்றில் அமுக்கிக் கொல்லப்பட்டவர்களும் அவர்கள்தான். மூளை பிதுங்கி, குடல் தள்ளி, ரத்தக்கோரையுடன், காப்பாற்ற ஆளின்றி, கை கால்கள் விரைத்துக் கிடப்பதைக் காட்டும் அந்த புகைப்படங்கள் பார்ப்பவர் எவரையும் நிலைகுலைய வைக்கும். ''பத்தாயிரம் பேர் இருந்தும் நம்ம மக்களை காப்பாத்த நாதியில்லையே'' என்று அழுகிறார் ஆரோக்கியநாதபுரத்திலிருக்கும் ஒரு வயதான தொழிலாளி. ஆறு கோடியைத் தாண்டும் தமிழகத்திற்கு குற்ற உணர்வு வேண்டாம்; துளியளவு மனிதாபிமானம் கூட இல்லாமல் போனது ஏன்?

ஊதிய உயர்வு கேட்டதற்காக, ஒரு மாத காலம் சிறையில் அடைக்கப்பட்ட மாஞ்சோலை தேயிலைத் தோட்ட பெண் தொழிலாளர்கள்



இளவயதில் கணவனை இழந்த மும்தாஜ் பேகம் ஒரு பீடித் தொழிலாளி. அவருடன் 17 வயதிலேயே குடும்ப பாரத்தைப் பகிர்ந்து கொண்டிருந்த ஷாநவாஸ், ஆற்றில் அடித்துக் கொல்லப்படுகிறான். இனி அவனது தம்பி வேலைக்குச் செல்ல வேண்டும். திருச்சி சிறையில் இருந்த தொழிலாளர்களில் மாரியப்பனும் ஒருவர். அவரது மனைவி ரத்தினமேரி, ஒன்றரை வயது மகன் விக்னேஸ், அத்தை மரியம்மாள் அனைவரும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். மேரியும், விக்னேஸும் போலீசால் அடித்து ஆற்றில் தள்ளப்படுகிறார்கள். கண் முன்னே மகளும் பேரனும் கொல்லப்பட்ட காட்சியை நினைத்து நினைத்து மரியம்மாள் இன்றும் அழுதவாறு இருக்கிறார். சிறையிலிருந்த வானொலி மூலம் போராட்டச் செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்த மாரியப்பனுக்கு அப்போது அது தெரியாது. மாண்டவர்களின் கதைகளில் சில இப்படித்தான் இருக்கிறது.

பச்சைத் தேயிலையை, வறுத்துத் தூளாக்கி, பாலும் நீரும் சர்க்கரையும் கலந்து சூடாக்கிய தேநீரில் இப்போது ரத்தமும் கலந்திருக்கிறது. அடுத்தமுறை தேநீரை அருந்துங்கள், உங்களுக்கும் அது சுவைக்காது.

• இராமநாதன்



படிப்பகம்

www.padippakam.com

## புதிய தொலைபேசிக் கொள்கை-99:

# தொலைபேசித் துறையை மொட்டையடிக்க சர்வகட்சி ஒத்துழைப்பு

போஃபர்ஸ் பீரங்கி பேர ஊழல், பங்குச் சந்தை மோசடி, சர்க்கரை இறக்குமதி ஊழல், உர பேர ஊழல் போன்ற நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பு கொண்ட ஊழல் - மோசடிகளில், தனது கைவரிசையைக் காட்டுவதற்கு காங்கிரசு கட்சிக்கு கிட்டதட்ட நாற்பது - ஐம்பது ஆண்டு காலம் தேவைப்பட்டது. ஆனால், பா.ஜ.க.வோ, காங்கிரசின் இந்த ஊழல் சாதனைகளை ஆட்சியைப் பிடித்த பதிமூன்றே மாதத்தில் முறியடித்து விட்டது. தொலைத்தொடர்புத் துறையில் நுழைந்துள்ள தரகு முதலாளிகள் - பன்னாட்டு நிறுவனங்களின் கொழுத்த இலாப வேட்டைக்காக, பா.ஜ.க. அரசு அறிவித்துள்ள புதிய தொலைத்தொடர்புக் கொள்கையால், ''எதிர்வரும் பத்தாண்டுகளில் மைய அரசிற்கு கிட்டதட்ட 50,000 கோடி ரூபாய் நட்டமேற்படும்; மேலும், இப்புதியக் கொள்கையை அவசர அவசரமாக அறிவிப்பதற்காக, பா.ஜ.க. தலைவர்கள், பிரதம மந்திரி அலுவலக அதிகாரிகள், தரகு முதலாளிகள் - பன்னாட்டு நிறுவனங்களுக்கும் இடையே நடந்த இரகசிய பேரத்தில் 300 கோடி ரூபாய் இலஞ்சமாகக் கைமாறியிருக்கக் கூடும்'' என்றும் செய்திகள் வெளிவந்துள்ளன.

தாராளமயமாக்கத்தின் பின், மைய அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்த தொலைத்தொடர்புத் துறையில் இந்தியத் தரகு முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் நுழைவதற்கு வசதியாக, ராவ் அரசாங்கம் 1995-ஆம் ஆண்டில், ''தேசியத் தொலைத்தொடர்புக் கொள்கை''யை அறிவித்தது. தொலைத்தொடர்புத் துறையின் 24 வட்டங்களில் ''செல்லுலர்'' தொலைபேசி வசதியையும், அடிப்படை தொலைபேசி வசதியையும் செய்துதரும் பொறுப்பை தனியாரிடம் தாரை வார்ப்பதற்காக, 1996, 1997-ஆம் ஆண்டுகளில், மைய அரசினால் பகிரங்கப் பொது ஏலங்கள் நடத்தப்பட்டன. டாட்டா, எஸ்ஸார், இஸ்பாட், ரிலையன்ஸ், பாரதி டெலிகாம், பி.பி.எல். போன்ற உள்நாட்டு தரகு முதலாளித்துவ நிறுவனங்களும், ஏ.டி. அண்ட் டி. யு.எஸ். வெஸ்ட், ஹக்ஸ், நினக்ஸ் போன்ற பன்னாட்டு நிறுவனங்களும் ஒன்றோடு ஒன்று கூட்டுச் சேர்ந்து கொண்டு ஏலத்தில் குதித்தன.



பத்தாண்டுகளில் 9,45,000 கோடி ரூபாய் வருமானம் தரத்தக்க இச்சேவைப் பிரிவுகள், தனியார் முதலாளிகள் கோரிய ஏலத் தொகைக்கு, வெறும் 1,15,000 கோடி ரூபாய்க்கு, பஞ்சத்துக்கு அடமானம் வைப்பதைப் போல, அடிமாட்டு விலைக்குத் தனியாரிடம் தாரை வார்க்கப்பட்டன. இந்தத் தொகையினைக் கூட ஏலம் எடுத்த நிறுவனங்கள் உடனடியாக அரசுக்குச் செலுத்த வேண்டிய அவசியமில்லை. தரகு முதலாளிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் ஏலத்தின் போது குறிப்பிட்டபடி, பதினைந்து ஆண்டு கால இடைவெளியில், வருடத்துக்கு இவ்வளவு கட்டணம் செலுத்தினால் போதும் என்று ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

நிர்ணயிக்கப்பட்ட உரிமக் கட்டணத்தை, ஆண்டுதோறும் குறிப்பிட்ட தேதிக்குள் நிலுவையில்லாமல் செலுத்துவதுதான் வியாபார நாணயம். ஆனால், ஏலம் எடுத்த தரகு முதலாளித்துவ கூட்டு நிறுவனங்களோ, தங்கள் நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதாகக் கூறி, ஆண்டு உரிமக் கட்டணத்தைச் செலுத்தாமல் கிடப்பில் போட்டன. அதே சமயம், நட்டமடைவதாகக் கூறும் இத்தனியார் முதலாளிகள், தாங்கள் ஏலத்தில் எடுத்த உரிமத்தை, மைய அரசிடம் திரும்ப ஒப்படைக்காமல், வியாபாரத்தையும் விடாமல் நடத்தி வந்தனர்.

மக்களின் வரிப்பணத்தில் உருவாக்கப்பட்ட தொலைபேசித் துறையின் வலைப்பின்னலைப் பயன்படுத்திக் கொண்டு வியாபாரம் நடத்தி வரும் இக்கனவான்கள், கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் மைய அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் (உரிம) தொகை 8,719 கோடி ரூபாய். ''இத்தொகை முழுவதையும் அரசு தள்ளுபடி செய்ய வேண்டும்; அல்லது கட்டணம் செலுத்த வேண்டிய காலத்தைத் தள்ளிப் போட வேண்டும்'' என்ற நிபந்தனையோடு, தரகு முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் கடந்த ஒரு வருடமாகவே பா.ஜ.க. அரசோடு பேரம் நடத்தி வந்தனர்.

ஒரு விவசாயி அரசிடமிருந்து பெற்ற கடனையோ அல்லது அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரியையோ உரிய தேதிக்குள் செலுத்தாவிட்டால், அவனது சொத்துகளை ஜப்தி செய்வதற்கு ஆளுங்கும்பல் தயக்கம் காட்டியதில்லை. ஆனால், 8719 கோடி ரூபாய் பாக்கி வைத்துள்ள தரகு முதலாளிகளிடம் இந்தக் கெடுபிடியைக் காட்டுவதற்கு பா.ஜ.க. அரசு முன்வரவில்லை. மாறாக, தரகு முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் இதை விட நோகாமல் கொள்ளையடிப்பதற்கு வசதியாக ''புதிய தொலைத்தொடர்புக் கொள்கை - 99''-ஐ (NTP - 99) அறிவித்தது.

இப்புதிய கொள்கையின்படி, தனியார் நிறுவனங்கள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட உரிமக் கட்டணத்தை (Fixed licence fee) ஆண்டு தோறும் செலுத்தும் முறைக்குப் பதிலாக, வருமானப் பகிர்வு (Revenue sharing) எனும் அடிப்படையில், தனியார் தொலைபேசி சேவை நிறுவனங்கள் ஆண்டு தோறும் தங்களுக்குக் கிடைக்கும் வருமானத்தில் 15 சதவீதத்தை அரசுக்கு கட்டணமாகச் செலுத்தும் முறைக்கு மாறிக் கொள்ளலாம். ''வருமானப் பகிர்வு'' அல்லது ''நிர்ணயிக்கப்பட்ட உரிமக் கட்டணம்'' - இவற்றுள் எது தனியார் தொலைபேசி சேவை நிறுவனங்களுக்கு இலாபம் தரத்தக்கதோ, அந்த முறைக்கு அவர்கள் தங்களின் விருப்பப்படி மாறிக் கொள்ளலாம்.

தனியார் முதலா



படிப்பகம்

www.padippakam.com

ளிகளுக்குச் சாதகமான இந்த அதிரடிக் கொள்கை மாற்றம் ஒருபுறமிருக்க, தனியார் நிறுவனங்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக வைத்துள்ள கட்டண பாக்கி முழுவதையும் பிப்ரவரி 28 ஆம் தேதிக்குள் கட்ட வேண்டும் என்ற ஒப்பந்த விதியும் மாற்றப்பட்டது; தனியார் நிறுவனங்கள் பாக்கித் தொகையில் 35 சதவீதத்தை மட்டும் ஆகஸ்டு 15 க்குள் செலுத்தினால் போதும் என்று சலுகை காட்டப்பட்டது. மேலும், தனியார் நிறுவனங்களது ஏல ஒப்பந்த காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிப்பு செய்து, அந்த ஆறுமாத காலத்திற்கு அவர்கள் செலுத்த வேண்டிய கட்டணத் தொகை 1453 கோடி ரூபாயையும் தள்ளுபடி செய்துவிட்டது பா.ஜ.க. அரசு.

''தொலைபேசித் துறையில் நுழைந்துள்ள தனியார் நிறுவனங்கள், இந்தியச் சந்தையைப் பற்றித் தவறாகக் கணித்து, அதிகக் குத்தகைக்கு ஏலம் எடுத்துவிட்டன. தனியார் முதலாளிகள் எதிர்பார்த்த படி அவர்களின் வியாபாரம் வளர்ச்சியடையாததால், அவர்களால் உரிமத் தொகையைச் செலுத்த முடியாமல் போய்விட்டது. எனவே, அரசு அவர்களுக்கு உதவ முன் வந்திருக்காவிட்டால், அந்த நிறுவனங்களின் வியாபாரம் திவாலாகி இருக்கும். திவாலான நிறுவனங்களிடமிருந்து உரிமத் தொகையை எப்படி வசூலிப்பது? நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து வெற்றி பெற்றால்கூட, திவாலான நிறுவனங்களிடமிருந்து பணம் வராது. இதைத் தவிர்க்கதான், அரசு, அந்த நிறுவனங்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்க முன் வந்தது'' என பா.ஜ.க.வும், ''சோ'' போன்ற அக்கட்சியின் துதிபாடிகளும் வாதாடுகின்றனர்.

''செல்லுலர்'' தொலைபேசி சேவையிலும், அடிப்படை தொலைபேசி சேவையிலும் முதலீடு செய்துள்ள தனியார் நிறுவனங்களின் வியாபாரம் வளர்ச்சியடையாமல், திவாலாவதாக பா.ஜ.க. கூறும் நியாயத்தில் எந்தளவு உண்மை உண்டு என பார்ப்போம்.

● மும்பய் மாநகரத்தில் செல்லுலர் தொலைபேசி சேவையினை இயக்கி வரும் ஹட்சிஸன் - மாக்ஸ் நிறுவனத்தின் வாடிக்கையாளர் எண்ணிக்கை கடந்த மூன்று ஆண்டுகளில் 12,000 - லிருந்து 1,17,000 ஆக அதிகரித்துள்ளது.

● இதே போன்று இந்தியாவின் பெரு நகரங்களில் செல்லுலர் தொலைபேசி சேவையினை இயக்கி வரும் பி.பி.எல் - மொபைல் நிறுவனத்தின் வாடிக்கையாளர் எண்ணிக்கையும் 14,000 - லிருந்து 1,11,000 ஆக அதிகரித்துள்ளது.

● பாரதி டெலிகாம் நிறுவனம் செல்லுலர் சேவை வியாபாரத்தில், 1998 - 99 - ஆம் ஆண்டில் அடைந்த இலாபம் 2 கோடி ரூபாய்; மேலும், இந்நிறுவனம் தனது 38 சதவீதப் பங்குகளை, ''பிரிட்டிஷ் டெலிகாம்'' என்ற பன்னாட்டு நிறுவனத்திற்கு விற்று கொழுத்த இலாபம் ஈட்டியுள்ளது. அதே சமயம், இந்நிறுவனம் மைய அரசிற்குச் செலுத்த வேண்டிய கட்டணப் பாக்கியோ 28.74 கோடி ரூபாய்.

சென்னை, மும்பய், கல்கத்தா, தில்லி இந்நான்கு பெரு நகரங்களில் எட்டு தனியார் நிறுவனங்களும், இந்தியாவின் குறிப்பிடத்தக்க 33 நகரங்களில் 14 தனியார் நிறுவனங்களும், பன்னாட்டு நிறுவனங்களோடு கூட்டுச் சேர்ந்து, செல்லுலர் தொலைபேசி சேவையை நடத்தி வருகின்றன. இத்தனியார் தொலைபேசி நிறுவனங்களின் வாடிக்கையாளர் எண்ணிக்கை 30,45,000. ராவ் ஆட்சியில் அறிவிக்கப்பட்ட தேசிய தொலைத்தொடர்புக் கொள்கையின் படி, இந்திய தொலைபேசித் துறை, தனியார் தொலைபேசி நிறுவனங்களுக்குப் போட்டியாக செல்லுலர் சேவையில் நுழைவது தடை செய்யப்பட்டிருந்தது. பா.ஜ.க. அரசு அறிவித்துள்ள புதிய தொலைத்தொடர்புக் கொள்கை - 99-இல், இத்தடை விலக்கிக் கொள்ளப்பட்டாலும், இந்திய தொலைபேசித் துறை இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு செல்லுலர் சேவையில் நுழைய வேண்டாம் என மைய அரசு முடிவெடுத்துள்ளதால், செல்லுலர் சேவையைப் பொருத்தவரை தனியார் நிறுவனங்கள்தான் தனிக்காட்டு ராஜாக்கள்! ஆண்டுக்கு 12,000 கோடி ரூபாய் வரை வருமானம் கொட்டும் இவ்வியாபாரத்தை தங்கள் கைகளுக்குள் அமுக்கி வைத்துள்ள தனியார் நிறுவனங்கள், நட்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதாகக் கூறுவது, முழுப் பூசணிக்காயைச் சோற்றில் அமுக்குவது போன்றதுதான்.



**தரகு முதலாளிகள் - பன்னாட்டு நிறுவனங்களின் இலாபத்திற்காக தொலைபேசித் துறையை மொட்டையடிப்பதா எனப் பிரச்சாரம் செய்கிறது 'மார்க்சிஸ்டு' கட்சி. ஆனால், அக்கட்சியின் எம்.பி. சோமநாத் சட்டர்ஜி, தரகு முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் நட்டமடைந்துவிடக் கூடாது என்ற ஆதங்கத்தோடு பிரதமருக்குக் கடிதம் எழுதுகிறார். ஏன் இந்த இரட்டை வேடம்?**

இதனால்தான், தொலைபேசி சேவையில் முதலீடு செய்துள்ள தனியார் நிறுவனங்கள் திவாலாகிக் கொண்டிருக்கின்றன என்ற பா.ஜ.க. வின் நியாயத்தை, தொலைத்தொடர்புத் துறை அமைச்சராகயிருந்த ஜெக்மோகன் கூட ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். ''லைசென்ஸ்தாரர்கள், அவர்கள் சொல்வதைப் போல நஷ்டம் அடைந்திருப்பார்களானால், அவர்களில் ஒருவர் கூட லைசென்சைத் திருப்பிக் கொடுக்க முன்வராதது ஏன்? ஒரு தொழில் முயற்சியில் நஷ்டமடைகிற யாராக இருந்தாலும், அந்தத் தொழிலைத் தொடர்ந்து செய்து நஷ்டத்தைப் பெருக்கிக் கொண்டே இருப்பார் என்று சொல்வது அறிவுக்குப் பொருத்தமாக இருக்கிறதா?'' என்று தனியார் முதலாளிகளுக்கு சலுகை காட்ட முயலுவதை எதிர்த்து ஜெக்மோகன் எழுப்பிய ஆட்சேபணைகளைக் குப்பைக் கூடைக்குள் தள்ளிவிட்டார், வாஜ்பாயி. ஜெக்மோகன், இந்து மதவெறியர்களிடம் விசுவாசம் காட்டிய அளவிற்கு, தரகு முதலாளிகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் விசுவாசமாக நடந்து கொள்ளாததால், அவரைத் தொலைபேசித் துறையில் இருந்து தூக்கியடித்துவிட்டு, அந்தத் துறையை தானே எடுத்துக் கொண்டார், வாஜ்பாயி.

பிரதமர் அலுவலகமே முனைந்து புகுத்திய இக்கொள்கை மாற்றத்தால், பிரதமர் வாஜ்பாயின் வளர்ப்பு மருமகனுக்கு நெருக்கமான பாரதி செல்லுலர் நிறுவனத்தின் முதலாளி சுனில் மிட்டல்; அத்வானிக்கு நெருக்கமான எஸ்ஸார் கம்யூனிகேஷன்ஸ், ரிலையன்ஸ் அம்பானி, மற்றும் பி.பி.எல். - இந்நான்கு நிறுவனங்களும், இவற்றோடு வியாபாரக் கூட்டு வைத்துக் கொண்டுள்ள பன்னாட்டு நிறுவனங்களும் கொழுத்த இலாபமடையும்.

★☆★

நட்டத்தில் இயங்கும் தனியார் தொலை பேசி நிறுவனங்களைப் பாதுகாப்பதற்கு இக்கொள்கை மாற்றம் அவசியமானது என்று பா.ஜ.க.வும், தாராளமயத்தின் ஆதரவாளர்களும் கூறுகின்றனர். இம்மாற்றம் நியாயமானதென்றால், நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களைக் காப்பாற்றவும் இதே அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டியது தானே!

சந்தைப் பொருளாதாரத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் நட்டத்தில் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்களை இழுத்து மூட வேண்டியதுதான் எனக் கூறும் இவர்கள், நட்டத்தில் இயங்கும் தனியார் நிறுவனங்களை இழுத்து மூடச் சொல்ல வேண்டியதுதானே! நட்டத்தில் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு மானிய உதவி அளித்து, அவை தொடர்ந்து இயங்க அரசு பாதுகாப்பு அளித்தால், அது நாட்டின் பொருளாதாரத்துக்கு வீணான சுமையாம்! அதே சமயம், நாட்டின் பொருளாதாரத்துக்கு நட்ட மேற்படுத்தி, தரகு முதலாளிகள் - பன்னாட்டு நிறுவனங்களின் கொழுத்த இலாபத்திற்கு அரசு உத்திரவாதமளிப்பது மட்டும் எந்த வகை நியாயம்?

www.padippakam.com

இந்த ஆண்டில் தக்காளியும், நிலக்கடலையும் விலை வீழ்ச்சி அடைந்ததால், அதைப் பயிரிட்ட விவசாயிகள் மிகுந்த நட்டமடைந்தனர். தரகு முதலாளிகளைப் போலவே, அந்த விவசாயிகளும் சந்தையைத் தவறாகக் கணித்து மோசம் போய் விட்டனர். தனியார் தொலைபேசி நிறுவனங்கள் நட்டமடைந்துவிடக் கூடாது என்பதற்காக கொள்கை மாற்றம் கொண்டு வந்த ஆளுங்கும்பல், தக்காளி விவசாயிகள் நியாயமான விலை கேட்டு போராடியதை கண்டு கொள்ளவேயில்லை; நிலக்கடலை விவசாயிகளின் போராட்டத்தை, துப்பாக்கிச் சூடு நடத்தி, நாலு விவசாயிகளைக் கொன்று ஒடுக்கியது. சந்தைப் பொருளாதாரச் சூதாட்டத்தில் சிக்கிக் கொண்டு, விவசாயிகளும், தொழிலாளர்களும் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போவதைக் கண்டு கொள்ளாத ஆட்சியாளர்கள், தரகு முதலாளிகள் - பன்னாட்டு நிறுவனங்களைப் பாதுகாப்பதில் மட்டும் அசருவதேயில்லை - இது என்ன வகை சந்தை ஜனநாயகம்?

★☆★

**பா**.ஜ.க.வின் இந்த ஊழல் - மோசடியை அம்பலப்படுத்தி, தேர்தல் பிரச்சாரம் செய்துவரும் காங்கிரசும், போலி கம்யூனிஸ்டுகளும், ''நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில், காபந்து அரசான பா.ஜ.க. அரசு இப்புதிய கொள்கையை அறிவித்திருப்பது வரம்பு மீறிய செயல்; நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தாமல் இப்படி புதிய கொள்கைகளை அறிவித்திருக்கக் கூடாது'' எனக் குற்றஞ் சுமத்தியுள்ளன. இதன் மூலம், தனியார் நிறுவனங்களுக்குச் சாதகமாக பா.ஜ.க. அரசு அறிவித்துள்ள இக்கொள்கைக்கும் தங்களுக்கும் எவ்விதச் சம்மந்தமும் கிடையாது எனக் காட்டிக் கொள்கின்றன. ஆனால், சர்வ கட்சி ஒத்துழைப்புடன்தான், காங்கிரசும், 'மார்க்சிஸ்டு'களும் கொடுத்த ஆலோசனைகளின் அடிப்படையில்தான், இப்புதிய தொலைத்தொடர்புக் கொள்கை உருவாக்கப்பட்டது.

பா.ஜ.க. கூட்டணி அரசு, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழக்கும் முன்பே, மார்ச் இறுதி வாரத்திலேயே, மைய அமைச்சரவை புதிய தொலைத்தொடர்புக் கொள்கை 99-க்கு ஒப்புதல் அளித்து விட்டது. அந்தச் சமயத்திலேயே இக்கொள்கையை எதிர்த்து அம்பலப்படுத்தாத போலி கம்யூனிஸ்டுகளும், காங்கிரசும் இப்பொழுது இக்கொள்கையை எதிர்ப்பதாகக் கூறுவது, தேர்தலில் ஓட்டுப் பொறுக்குவதற்கான தந்திரம்தான்.

'மார்க்சிஸ்டு' கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சோமநாத் சட்டர்ஜி, தொலைத்தொடர்புக்கான நாடாளுமன்ற நிலைக் குழுவில் உறுப்பினராக இருந்து வருகிறார். புதிய தொலைத்தொடர்புக் கொள்கை இந்த நிலைக் குழுவின் ஒப்புதலைப் பெற்றபின்தான், மைய அமைச்



தரகு முதலாளிகளுக்கும் - பன்னாட்டு நிறுவனங்களுக்கும் சலுகை காட்டுவதில் முட்டுக் கட்டை போட்ட ஜெக்மோகனை, தொலைத்தொடர்புத் துறையில் இருந்து தூக்கியடித்தார், உத்தமர் வாஜ்பாயி.

சரவையின் ஒப்புதலைப் பெறமுடியும். சோமநாத் சட்டர்ஜி இக்கொள்கை எதிர்ப்பது உண்மையென்றால், நாடாளுமன்ற நிலைக் குழுவிலேயே தனது எதிர்ப்பைப் பதிவு செய்திருக்க முடியும். மாறாக, அவரின் சம்மதத்துடனும்தான் இப்புதிய கொள்கை, மைய அமைச்சரவையின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், பா.ஜ.க. கூட்டணி அரசு இக்கொள்கையை ஜூலையில் அரசிதழில் வெளியிடுவதற்கு முன்பாக, சோமநாத் சட்டர்ஜி பிரதமர் வாஜ்பாயிக்கு எழுதிய கடிதத்தில், ''தற்பொழுது செல்லுலர் சேவையில் நுழைந்துள்ள தனியார் நிறுவனங்களையும் இப்புதிய கொள்கையில் இணைத்துக் கொள்வது நல்ல முடிவாகும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

சோமநாத் சட்டர்ஜி மட்டுமல்ல, மார்க்சிஸ்டு கட்சியே, தனியார்மயம் - தாராளமயத்திற்கு மாற்று கிடையாது என்ற ஆளுங் கும்பலின் கொள்கையோடு முழுமையாக ஒத்துப் போய்விட்டது. மேற்கு வங்கத்தை, 'மார்க்சிஸ்டு'கள் ஆண்டு வரும் இலட்சணத்தை வைத்தே இதைப் புரிந்து கொள்ளலாம்.

> நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு மானிய உதவி அளிப்பது பொருளாதாரத்துக்கு வீணான சுமை என்றால், தரகு முதலாளிகள் - பன்னாட்டு நிறுவனங்களின் இலாபத்திற்கு அரசு உத்தரவாதமளிப்பது சுகமான சுமையா?

காட்-டங்கல் ஒப்பந்தம், தேசிய தொலைத்தொடர்புக் கொள்கை, காப்புரிமைச் சட்ட திருத்தங்கள் போன்ற தனியார்மய - தாராளமயச் சீர்திருத்தங்கள் அனைத்தும் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வைக்கப்பட்டு, அதன்பின்தான் அமலுக்கு வந்தன. இவற்றை எதிர்த்து நாடாளுமன்றத்தில் ஒப்புக்காக கண்டனக் குரல் எழுப்புவதோடு, 'மார்க்சிஸ்டு'களின் தாராளமய எதிர்ப்பு முடங்கிவிட்டது. தாராளமயம் - தனியார்மயத்தை எதிர்த்து, நாடாளுமன்றத்துக்கு வெளியே மக்கள் திரள் போராட்டங்களைக் கட்டியமைக்க 'மார்க்சிஸ்டு'கள் முன் வந்ததேயில்லை.

இப்பொழுதுகூட, என்.எஃப்.டி.ஈ. (NFTE) என்ற தொலைபேசி ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த போலி கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள், புதிய தொலைத்தொடர்புக் கொள்கைக்கு எதிராக எவ்விதப் போராட்டத்தையும் அறிவிக்காமல், ஓட்டு வேட்டை நடத்துவதற்கு அத்தொழிற்சங்கத்தைப் பயன்படுத்திக் கொள்வதில்தான் குறியாக உள்ளனர். தொலைத்தொடர்புத் துறையில் தனியார்மயத்தைப் புகுத்திய காங்கிரசுக்கு மட்டுமல்ல, இடது வலது போலி கம்யூனிஸ்டுகளுக்கும் இப்புதிய கொள்கையை எதிர்ப்பதற்கான அருகதையோ, ஆற்றலோ கிடையாது என்பதே உண்மை!

★☆★

**இ**ப்புதிய கொள்கையை எதிர்த்து, தில்லி விஞ்ஞானக் கழகம், தில்லி உயர்நீதிமன்றத்தில் தொடுத்திருந்த வழக்கு விசாரணையில், ''அடுத்த நாடாளுமன்றம் இப்புதிய கொள்கைக்கு ஒப்புதல் அளிக்காவிட்டால், பழைய முறைக்குத் திரும்பிவிட தனியார் முதலாளிகள் சம்மதிக்க வேண்டும்'' என்ற நிபந்தனையோடு, இப்புதிய கொள்கையை நடைமுறைப்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல் அடித்த கதைதான் இந்தத் தீர்ப்பு. இந்தக் கொள்கையை எதிர்ப்பதாகக் கூறும் கட்சிகள் அனைத்துமே தாராளமயம் - தனியார்மயத்தை ஆதரிப்பவைதான். எனவே, அடுத்த நாடாளுமன்றத்தில் கட்சிகளின் எண்ணிக்கை பலம் எப்படி அமைந்தாலும், இக்கொள்கை நிராகரிக்கப்பட்டுவிடும் என நம்புவதற்கு இடமில்லை.

தொலைபேசித் துறையின் மொத்த வருமானத்தில் ஐந்தில் மூன்று பங்கு வருமானம், தொலைதூர அழைப்பிற்கான கட்டணத்தின் மூலம் கிடைத்து வருகிறது. தொலைதூர அழைப்பிற்கான (Long distance calls) கட்டணம் சமீபத்தில் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளதால், இந்திய



படிப்பகம்

www.padippakam.com

தொலைபேசித் துறை இந்த வருவாய் ஆண்டில் (1999 மார்ச் முதல் 2000 மார்ச் முடிய) 1,920 கோடி ரூபாய் நட்டமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பா.ஜ.க. அறிவித்துள்ள புதிய தொலைத்தொடர்புக் கொள்கையின்படி, தனியார் தொலைபேசி நிறுவனங்கள், தொலைபேசித் துறைக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ள நிலையில், தொலைபேசித் துறை நகர்ப்புறங்களில் செல்லுலர் / பேஜர் சேவை செய்து தருவது இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குத் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், அத்துறையின் வருமானம் கணிசமாகக் குறைந்து, இந்த நட்டம் அதிகமாகவும் கூடும். இதன் காரணமாக, இந்திய தொலைபேசித் துறை மூலம் இந்திய மக்களுக்குக் கிடைத்துவந்த அரைகுறை சேவையும் முடமாகிவிடும்.

இந்திய தொலைபேசித் துறையின் 1996-97-ஆம் ஆண்டின் மொத்த வருமானத்தில் 56 சதவீதப் பங்கு, 5 சதவீத வாடிக்கையாளர்களான முதலாளித்துவ நிறுவனங்களிடமிருந்து கிடைத்துள்ளது. நகர்ப்புறத்தைச் சேர்ந்த இம்மேல்தட்டு வாடிக்கையாளர்களை, தொலைபேசித் துறையிடமிருந்து தட்டிப் பறித்துக் கொள்ளுவதற்கு வசதியாக, தனியார் தொலைபேசி நிறுவனங்களுக்கு கட்டணக் குறைப்போடு, இலவச வருகை அழைப்புகள் (Free incoming calls), உள்ளூர் அழைப்புக் கட்டணத்தில் தொலைதூர அழைப்பு வசதி போன்ற பல சலுகைகள் வாரி வழங்கப்படுகின்றன.

70,000 கோடி மூலதன மதிப்பு கொண்ட தொலைபேசித் துறையின் வலைப் பின்னலை - கேபிள் இணைப்புகள், தொலைபேசி நிலையங்கள், செயற்கை கோள்கள் - இந்தியாவின் நான்கு பெரு நகரங்களிலும், குறிப்பிடத்தக்க சில வணிக நகரங்களில் மட்டும் செல்லுலர், பேஜிங் சேவை செய்து தரும் தனியார் நிறுவனங்களும், அவர்களின் மேல்தட்டு வாடிக்கையாளர்களும்தான் இனி பெருமளவில் பயன்படுத்திக் கொள்ளுவர். கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதைதான் இது!

ஓட்டுக் கட்சிகளும், தொழிற்சங்கத் தலைமையும் இத்துரோகத்திற்கு வெளிப்படையாகவே துணை போவது ஒருபுறமிருக்கட்டும்; மக்களின் வரிப் பணத்தில் உருவாக்கப்பட்ட இப்பொதுச் சொத்தை, சில தரகு முதலாளிகள், பன்னாட்டு நிறுவனங்கள் சுரண்டிக் கொழுப்பதைக் கண்டும் கோபப்படாமல், கலகம் செய்யாமல், ''நமக்கொன்றும் நட்டமில்லையே'' என்று மௌனமாகத் தங்களின் 'கடமை'யைச் செய்து கொண்டிருக்கும் தொலைபேசித் துறை தொழிலாளர்களின் மனோபாவத்தை என்னவென்பது?

• செல்வம்

## கார்கில் போர்:

# தமிழினக் குழுக்களின் இரட்டை நாக்கு

இந்தியாவின் கார்கில் போரை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பதில் தமிழினவாதிகள் பிளவுபட்டுப் போயுள்ளார்கள். தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க., முதலான பிழைப்புவாத ஓட்டுக் கட்சிகள் இந்துவெறி பாசிஸ்டுகளின் பின்னே அணிதிரண்டு தேசிய பல்லக்கு தூக்குவது ஒருபுறமிருக்கட்டும். இந்துவெறி எதிர்ப்பு, பகுத்தறிவு திராவிடம், பெரியாரியம், மார்க்சியம் பேசும் மூத்த தமிழினவாதியான வே. ஆனைமுத்து, கார்கில் போரை ஆதரித்து தனது ''சிந்தனையாளன்'' இதழில் பக்கம் பக்கமாக எழுதுகிறார். அதே இதழின் பின் அட்டையில் கார்கில் போரை எதிர்த்து தமிழேந்தி என்பவர் கவிதை எழுதியுள்ளார். அட்டையில் நடிகையின் கவர்ச்சிப் படமும், உள்ளே ஆபாசத்தை எதிர்க்கும் பலரது நேர்காணல் செய்தியும் வெளியிடும் மஞ்சள் பத்திரிகையின் பாணியில் இரட்டை முகம் காட்டுகிறது ''சிந்தனையாளன்.''

மறுபுறம் நந்தன் ஏடு, தமிழ் தமிழர் இயக்கம், தமிழ்த்தேசப் பொதுவுடமைக் கட்சி ஆகியன கார்கில் போரை எதிர்த்தும், காஷ்மீரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தும் எழுதுகின்றன. கார்கில் போரை ஒட்டி இவர்கள் பிளவுபட்டு நின்றாலும் இவர்கள் அனைவரும் தமிழ், தமிழினம் ஈழ விடுதலை பற்றி பேசுபவர்கள்; தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஆதரித்து வருபவர்கள்.

இப்போது விடுதலைப் புலிகள் கார்கில் போரில் இந்தியாவை ஆதரிப்பதோடு, இந்துவெறி பாசிச பா.ஜ.க. அரசுக்கும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. ஏறத்தாழ 3 மாதங்களுக்கு முன்பு சோனியாவைக் கொல்ல புலிகள் சதித்திட்டம் தீட்டியுள்ளதாக வந்த செய்தியை புலிகள் தமது பத்திரிகை அறிக்கை மூலம் மறுத்தனர். அச்செய்தியில், ''இந்தியாவின் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் நாங்கள் ஒருபோதும் தலையிட முயற்சிப்பதில்லை; இந்தியாவின் தேசிய நலன்களுக்கு எதிராக எந்த வகையிலும் செயல்பட விரும்புவதில்லை'' என்று இந்திய மேலாதிக்க அரசுக்கு தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி நட்பு கொள்ளத் துடித்தனர்.

பின்னர், கார்கில் போர் மூண்டதும் இந்தியாவின் நிலையை ஆதரிப்பதாகவும், இந்தியாவின் தேசிய நலன்களை அங்கீகரிப்பதாகவும் புலிகள் வெளிப்படையாகவே பிரகடனப்படுத்தியுள்ளனர். தமிழீழத்தில் வன்னி பகுதியிலுள்ள புலிகளின் வானொலியான ''புலிகளின் குரல்'', கார்கில் போர் பற்றிய செய்திகளையும் கருத்துக்களையும் ஒலிபரப்பியபோது இந்தியாவை ஆதரித்தும் பாகிஸ்தானை விமர்சித்தும் ஒலிபரப்பியுள்ளது. வன்னி பகுதியில் வெளியிடப்படும் ''ஈழநாதம்'' எனும் புலிகளின் நாளேடு இதேபோல இந்திய ஆதரவு நிலைப்பாட்டையே எழுதியுள்ளது. இதுதவிர, புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள இதர தகவல் தொடர்புச் சாதனங்களும் இந்தியாவின் கார்கில் போரை ஆதரித்துள்ளன.

தமிழீழத்தில் புலிகள் ஆதரவு பத்திரிகைகளில் வெளியாகியுள்ள செய்திகளின்படி, புலித் தலைவர் பிரபாகரனின் வழிகாட்டலின் கீழ், லண்டனிலுள்ள புலிகளின் அரசியல் ஆலோசகர் ஆண்டன் பாலசிங்கம் மூலமாக தொலைதூர நகல் (FAX) வழியே இந்திய அரசின் அமைச்சர்களுக்கு புலிகளின் இந்திய ஆதரவு நிலையை விளக்கி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. தலைமை அமைச்சர் வாஜ்பாய், இராணுவ அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ், உள்துறை அமைச்சர் அத்வானி, சட்ட அமைச்சர் ராம்ஜெத்மலானி, மின்துறை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் ஆகியோருக்கு இக்கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதுதவிர, இந்திய அரசுச் செயலாளரிடம் ஆண்டன் பாலசிங்கம் தொலைபேசி மூலம் புலிகள் அமைப்பின் இந்திய ஆதரவு நிலையைத் தெரிவித்துள்ளார்.

புலிகள் அமைப்பு, இந்தியப் பிற்போக்கு - மேலாதிக்க அரசுடன் மீண்டும் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள விழைகிறது. புலிகளின் பினாமிகளும் பிழைப்புவாத தமிழினவாதிகளும் நீண்ட காலமாகவே இம்முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். ''புலிகள் இந்தியாவுக்கு எதிரானவர்கள் அல்ல: ராஜீவைக் கொன்றது புலிகள் அல்ல; சிவராசனும் தணுவும் சந்திராசாமியால் அனுப்பி வைக்கப்பட்ட சி.ஐ.ஏ. கைக்கூலிகள்; புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை இந்திய அரசு நீக்க வேண்டும்; ஈழ விடுதலைக்கு இந்தியா உதவி செய்ய வேண்டும்'' என்று தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இப்போது புலிகளே நேரடியாக இம்முயற்சியில் இறங்கி, இந்தியப் பிற்போக்கு - மேலா



படிப்பகம்

www.padippakam.com

# ''நந்தன்'' காட்டும் வழி: கார்கில் போருக்கு எதிர்ப்பு! கார்கில் போரை ஆதரிக்கும் வைகோவுக்கு ஆதரவு!

கடந்த ஜூலை மாதம் 24, 25 தேதிகளில் காஞ்சி நகரில் ம.தி.மு.க.வின் மாநில சுயாட்சி மாநாடு நடந்தது. ம.தி.மு.க.வின் கொள்கை விளக்க அணி துணைச் செயலாளரான பாவாணன், புலித்தலைவர் பிரபாகரனைப் புகழ்ந்தும், மாநில சுயாட்சி கோரிக்கை புறக்கணிக்கப்பட்டால் தமிழ்நாடு தனிநாடாக வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்றும் பேசி முடித்தவுடன், இவையெல்லாம் அவரது சொந்தக் கருத்து; கட்சியின் கொள்கை அல்ல என்று வைகோ மறுத்துப் பேசினார்.




பகுத்தறிவு திராவிடக் கொள்கைக்கும் ஈழ ஆதரவுக்கும் திவசம் நடத்திவிட்டு, தேசிய நீரோட்டத்தில் மூழ்கி, இந்துவெறி பாசிஸ்டுகளுக்கு விசுவாச சேவை செய்துவரும் வைகோ, மாநில சுயாட்சி, தமிழைப் பயிற்று மொழியாக்குவது, தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தால் தொடர்ந்து சுட்டுக் கொல்லப்படுவதற்குக் கண்டனம், ஈழத்தில் செம்மணி கொலைப் புதைகுழி விவகாரத்தில் தடயங்களை அழிக்க முயலும் இலங்கை அரசுக்குக் கண்டனம் என பாசிசப் பங்காளிகளின் ஆதரவோடு மாநாட்டில் தீர்மானங்களை நிறைவேற்றினார். தமிழின உணர்வாளர்களையும் ஈழ ஆதரவாளர்களையும் தம்பின்னே அணிதிரட்டிக் கொண்டு ஓட்டுப் பொறுக்கும் பிழைப்புவாத உத்தியாகவே ம.தி.மு.க.வின் மாநில சுயாட்சி மாநாடு நடந்துள்ளது.

ஆனாலும் என்ன? புலி வேஷங்கட்டி ஆடுபவர்கள் எல்லாம் புலிகள்தான் என்கிறது சுப. வீரபாண்டியனை சிறப்பாசிரியராகக் கொண்டு வெளிவரும் ''நந்தன் வழி'' இதழ். மாநாட்டில் இலங்கை அரசுக்குக் கண்டனம் தெரிவித்ததன் மூலம் ஈழத்தமிழர்களின் நன்றிக்கு உரியதாக ம.தி.மு.க. திகழ்கிறதாம்!

மேலும், ''மத்திய - மாநில அமைச்சர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் இலங்கை அரசுக்குக் கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியதன் மூலம் இதை இந்திய அரசின் கண்டனம் என்று கூடச் சொல்லலாம்'' என்று செயற்கையாக வலிந்து எழுகிறது அந்த ஏடு. அதன் மூலம் ம.தி.மு.க.வின் மாநில சுயாட்சி மாநாடு ஏதோ கொள்கை - இலட்சியத்துக்கான மாநாடு போலவும், பாசிசப் படையணியில் இருந்தாலும் வைகோ தமிழின உணர்வாளர்; ஈழ ஆதரவாளர் என்பது போலவும் காட்ட முயற்சிக்கிறது. பிழைப்புவாத வைகோவின் துரோகத்தனத்தை அம்பலப்படுத்துவதற்குப் பதிலாக, ''ம.தி.மு.க. மாநாட்டில் இலங்கை அரசுக்குக் கண்டனம்'' என்று அட்டைப்படக் கட்டுரையை வெளியிட்டு வைகோவை வெட்கமின்றி தூக்கிப் பிடிக்கிறது.

முந்தைய இதழில் கார்கில் போருக்கு எதிர்ப்பு; இப்போது, கார்கில் போரை ஆதரித்து பாசிசப் படையணியில் நிற்கும் தமிழினத் துரோகி வைகோவுக்கு ஆதரவு — இதுதான் இனவாதிகளின் நந்தன் வழி!

---

திக்க அரசுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டு, அதன் தயவில் ஈழ விடுதலையைச் சாதிக்க விழைகின்றனர்.

தேசிய இனங்களை அடக்கியாளும் இந்தியப் பிற்போக்கு - மேலாதிக்க அரசை புலிகள் ஆதரிப்பது புதிய விவகாரமோ, அதிர்ச்சியூட்டும் செய்தியோ அல்ல. 1983 ஜூலை இனப்படுகொலையிலிருந்து - ஈழ விடுதலைப் போராட்டம் முன்னணிக்கு வந்த காலத்திலிருந்து புலிகளும் ஈழத் துரோக 'போராளி' அமைப்புகளும் இந்தியப் பிற்போக்கு அரசைச் சார்ந்து நின்று, அதன் தயவிலேயே ஈழ விடுதலையைச் சாதிக்க முயன்றன.

திம்பு பேச்சு வார்த்தைகளின் போது, ''பூகோள - அரசியல் - இராணுவ அடிப்படையில் இந்தியா எமது நண்பன்'' என்று புலிகள் பிரகடனப்படுத்தினர். இந்தியாவின் தேசிய இனப் போராட்டங்களை மிருகத்தனமாக அடக்கியாண்ட பாசிச ராஜீவை, ஈழ விடுதலைக்கு வழிவகுத்துத் தரும் நடுவராக புலிகள் அங்கீகரித்தனர். அதற்கு முந்தைய காலங்களில் பாசிசத் தலைவி இந்திராவை ''ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி'' என்றனர். ஈழ ஆக்கிரமிப்புக்கு முன்னோட்டமாக இந்திய இராணுவம் நடத்திய ''பூமாலை நடவடிக்கை''யை ஆதரித்து நின்றனர். இந்திய உளவுப் படையான ''ரா''விடம் பணமும் பயிற்சியும் பெற்றனர். அதன் தூண்டுதலால் சிங்கள அப்பாவி சிவிலியன்களை புலிகள் மிருகத்தனமாகச் சுட்டுக் கொன்றனர். முஸ்லிம்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தி ஈழத்தைவிட்டே விரட்டியடித்தனர். தமிழகத்தில் புரட்சிகர ஜனநாயக இயக்கங்களுடன் ஒன்றுபட்டு நிற்பதற்குப் பதிலாக, கடைந்தெடுத்த பாசிஸ்டுகள், ஓட்டுப் பொறுக்கிகள், பிழைப்புவாத இனவாதிகளுடன் கூடிக் குலாவினர்.

அதன் பரிணாம வளர்ச்சியாக இப்போது இந்துவெறி பாசிஸ்டுகளுடன் - அகண்ட பாரத வெறி பிடித்த பிற்போக்கு பாரதீய ஜனதா கும்பலுக்கு ஆதரவாக நிற்கின்றனர். இந்திரா - ராஜீவ் - எம்.ஜி.ஆர் - வாஜ்பாய் ஆகிய பாசிஸ்டுகளுடன் கூடிக் குலாவுவதும், இந்தியப் பிற்போக்கு அரசின் துணை வல்லரசுக் கொள்கையை, தெற்காசிய வட்டார மேலாதிக்க - விரிவாக்கக் கொள்கையைப் புலிகள் ஆதரித்து நிற்பதும் ஈழ விடுதலைக்கே எதிரான துரோகச் செயலாகும். இந்திய - தமிழக புரட்சிகர ஜனநாயக இயக்கங்களைப் பலவீனப்படுத்தும் செயலாகும்.

தேசிய இன விடுதலை பற்றிய சரியான மார்க்சிய - லெனினியக் கண்ணோட்டமில்லாதது; முதலாளித்துவ - குட்டி முதலாளித்துவ வர்க்கத் தலைமை; ஈழ மக்களை குறிப்பாக, தொழிலாளர் - விவசாயிகளைச் சார்ந்திராமல் ஆயுதங்களையும் போர்ச் சாகசங்களையும் மட்டுமே சார்ந்து நிற்பது; அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்துடன், புரட்சிகர - விடுதலை இயக்கங்களுடன் ஈழ விடுதலையை இணைத்துக் கொள்வதற்குப் பதிலாக, பாசிச ராஜீவ் - எம்.ஜி.ஆர் - வாஜ்பாய் ஆகியோரையும் ஓட்டுப் பொறுக்கிகளையும் பிழைப்புவாதிகளையும் சார்ந்து நிற்பது; மாவோவின் மக்கள் யுத்தப் பாதையை நிராகரித்து சேகுவேராவின் தனிமனித பயங்கரவாதப் பாதையை மேற்கொள்வது ஆகிய அடிப்படைகளைக் கொண்டிருப்பதாலும், ஈழத்தில் ஜனநாயக - புரட்சிகர அமைப்புகளையும் தலைவர்களையும் அழித்தொழித்து ஒரு கட்சி சர்வாதிகாரத்தை நிறுவியுள்ளதாலும் புலிகள் இயக்கம் ஒரு சமூக பாசிச அமைப்பாக மாறிவிட்டது. ஈழ விடுதலையின் மீது ஆழ்ந்த அக்கறை கொண்டு கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக நாம் இந்த உண்மைகளைச் சுட்டிக் காட்டி வந்துள்ளோம். மூன்றாண்டுகளுக்கு முன்பு தமிழ் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த நாத்திக



படிப்பகம்

www.padippakam.com

# கார்கில் போரும் 'கர்ணன்' பெர்னாண்டசும்

அணுகுண்டு வெடிப்பை நியாயப்படுத்தி "சீனாவிடமிருந்து இந்தியாவுக்கு ஆபத்து" என்றும் பின்னர் "பாகிஸ்தானிடமிருந்து ஆபத்து" என்றும் இந்துவெறியர்களின் அகண்ட பாரத நோக்கங்களுக்கு விசுவாசமாகச் சேவை செய்து வருபவர், இராணுவ அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ். கார்கில் போரை முன்னின்று வழிநடத்திய தேசிய வெறியர்; இந்துவெறியர்களையே விஞ்சும் வண்ணம் தேச பக்தி வேஷங்கட்டி ஆடும் போர் வெறியர். காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை இராணுவத்தைக் கொண்டு ஒடுக்கிவரும் அரசு பயங்கரவாத அமைச்சர்.

ஆனாலும் என்ன? அவர் தமிழினம், ஈழத்தமிழர் ஆதரவு என்று வாய்ச்சவடால் அடித்து வருவதால் அவரை விமர்சனத்துடன் ஆதரிப்போம் என்கிறது, தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சி. "ஈழத் தமிழர்களுக்காதரவாக தமிழகம், புதுவை, பெங்களூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற மாநாடுகளில் கலந்து கொண்டு, சிங்களரின் இனவெறியை எதிர்த்து சிங்கமெனக் கர்ஜித்தார்!... ஒடுக்கப்பட்ட தமிழ் இனத்தின் குரலை ஆதிக்கபுரியான தில்லியில் எழுப்ப ஓர் தலைவர் இருக்கிறார் என்று எண்ணி அன்று நம் கண்கள் பனித்தன... அவரது ஜனநாயக உள்ளம் வாழ்க, என வாழ்த்தினோம்.

பா.ஜ.க. கிளப்பும் இந்திய தேசியவெறி, தமிழ்த் தேசிய உரிமையை ஒடுக்கக் கூடியது. ஈழத்தமிழர் தோன்றாத் துணையாக விளங்கும் பெர்னாண்டஸ் இங்குள்ள தேசிய இனங்களை ஒடுக்குவதற்குப் பயன்படக் கூடாது. அணுசக்தி பற்றி அவரது சுயமுரண்பாட்டையும் சரி செய்து கொள்ள வேண்டும்" என்று ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்பு இப்போலிப் பொதுவுடமையாளர்கள் தமது கட்சி இதழான "தமிழர் கண்ணோட்டத்"தில் (ஜூன் '98) எழுதினார்கள்.

இப்போது 'கர்ணன்' பெர்னாண்டசின் கார்கில் போர் வெறியை, காஷ்மீரின் சுயநிர்ணய உரிமையை ஒடுக்கி வருவதைப் பற்றி இக்கோமாளிகள் வாயே திறக்கவில்லை. "கார்கில் போரும் காஷ்மீர் சிக்கலும்" என்ற சிறுநூலை அண்மையில் வெளியிட்டுள்ள இவர்கள், அந்நூலில் போர் வெறியன் பெர்னாண்டசைப் பற்றி ஒரு வார்த்தைகூட எழுதவில்லை. இன்னமும் இந்த இனவாதிகளுக்கு பெர்னாண்டஸ் கர்ணனாகவே காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்.

இப்படி பாசிசப் படையணியில் யாராவது தமிழன், ஈழம் என்று சவடால் அடித்தால் போதும், அவரை ஆதரித்து ஏற்றிப் போற்றுவது தான் இத்தகைய இனவாதிகளின் பாரம்பரியக் கொள்கையாக உள்ளது.

"ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 26 தமிழர்களின் உயிரைப் பாதுகாக்க, தில்லி உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வதற்கான வழக்கு நிதிக் குழுவுக்குப் புரவலர் என்ற பொறுப்பை மனமுவந்து ஏற்றுக் கொண்டார் பெர்னாண்டஸ்...

"துரியோ தனனுக்குத் துணையாகக் களத்தில் கர்ணன் நின்றதுபோல, அத்வானி அணிவகுப்பில் பெர்னாண்டஸ் நிற்கிறார்.

'இந்திய தேசிய' வெறியன் ஜார்ஜ் பெர்னாண்டஸ், ஈழத் தமிழரின் நண்பனா?



கார்கில் போருக்கு எதிர்ப்பு - காஷ்மீரின் சுய நிர்ணய உரிமைக்கு ஆதரவு; பெர்னாண்டசுக்கும் ஆதரவு! இந்துவெறி பா.ஜ.க. அரசுக்கு எதிர்ப்பு; கார்கில் போரில் இந்துவெறியர்களுக்கு - இந்திய மேலாதிக்கவாதிகளுக்கு ஆதரவாக நிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவு!

எப்படியிருக்கிறது, இனவாதிகளின் மகாபாரதம்?

நந்தனாருக்கு எழுதிய விளக்கக் கடிதத்திலும் நாம் இந்த உண்மைகளை உணர்ந்தினோம். (புதிய ஜனநாயகம் அக். '96)

ஆனாலும் இனவாதிகளும் புலிகளின் பினாமிகளும் இதை ஏற்க மறுத்து கோமாளித்தனமாக விதண்டாவாதம் செய்தனர். இப்போது புலிகளின் இந்திய ஆதரவு நிலை பற்றிய ஆதாரபூர்வமான செய்திகள் வெளியாகி ஏறத்தாழ இரு மாதங்களாகியும் இதுபற்றி வாய்திறக்கவே மறுக்கிறார்கள். அன்று நம்மைப் பார்த்து, "இவர்கள் ஈழ விடுதலையை ஆதரிக்கிறார்கள்; ஆனால் புலிகளைப் பாசிஸ்டுகள் என்கிறார்கள். இது மோசடித்தனம் இல்லையா?" என்று பல வண்ண இனவாதிகளும் புலிகளின் பினாமிகளும் எகத்தாளம் செய்தார்கள். இன்று இனவாதிகளில் ஒரு பிரிவினர் கார்கில் போரை எதிர்க்கிறார்கள். கார்கில் போரை ஆதரிக்கும் புலிகளையும் ஆதரிக்கிறார்கள். இது மோசடித்தனம் இல்லையா?

புலிகளின் பாசிசப் போக்கை நாம் சுட்டிக் காட்டி விமர்சித்த போது, நம்மை ஈழ விடுதலைக்கே எதிரானவர்கள் என்றும், துக்ளக் "சோ"-வின் நிலைப்பாட்டைப் பேசுபவர்கள் என்றும் இனவாதிகள் கொச்சைப்படுத்தி அவதூறு செய்தனர். இன்று துக்ளக் "சோ" கார்கில் போரை நியாயப்படுத்தி தேசிய வெறியைக் கக்குகிறார். புலிகளும் கார்கில் போரை ஆதரித்து இந்துவெறி பாசிச ஆட்சியாளர்களுடன் கூடிக் குலாவ விழைகின்றனர். பார்ப்பன - பாசிச துக்ளக் "சோ"வின் நிலைப்பாட்டை ஆதரித்து நிற்பது நாமா? அல்லது புலிகளா?

ஈழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டியது இந்தியாவிலுள்ள புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் கடமை என்று கூறும் இனவாதிகள், இந்தியப் புரட்சிக்கே எதிராக உள்ள புலிகளின் நிலையை எக்காலத்திலும் விமர்சித்ததேயில்லை.

புலிகள் மீதான நமது விமர்சனங்களை மூடிமறைத்தும் மழுப்பியும் புறக்கணித்தும் வரும் பல வண்ண இனவாதிகள், "புலிகள் மட்டுமே இன்று போர்க்களத்தில் இருக்கிறார்கள்; போர்க்களத்தில் ஜனநாயக உரிமை பற்றி பேசுவது முட்டாள்தனமானது; புலிகளால் மட்டுமே ஈழத்தமிழர்கள் பாதுகாப்பும் விடுதலையும் பெறமுடியும்" என்று நீண்ட காலமாக புலித் துதிப் பாடி வருகின்றனர். இன்று, புலிகளின் கார்கில் போர் ஆதரவு - இந்திய பிற்போக்கு அரசு ஆதரவு நிலைப்பாட்டை "இதுவும் ஒரு அரசியல் செயல் தந்திரம்தான்!" என்று நியாயப்படுத்துவர்களேயானால், அவர்களுக்கும் கோயபல்சுக்கும் வித்தியாசம் ஏதும் இருக்காது.

• மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## காங்கிரசின் மதச்சார்பின்மை

உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த பவன் பாண்டே, சிவசேனா வின் முன்னாள் உ.பி. மாநிலத் தலைவர். பாபர் மசூதியை இடித் துத் தள்ளிய இந்து மதவெறியர்களின் சதித்தனத்தில் பவன் பாண் டேயின் பங்கு மிக முக்கியமானது. இந்த இந்து மதவெறியன் சிவசேனாவில் இருந்து வெளியேற்றப்பட்ட பின், உ.பி. மாநில காங்கிரசுக் கட்சி, தனது சட்டமன்றத் தலைவர் பிரமோத் திவாரி மூலம் பாண்டேயுடன் இரகசியமாக உறவு வைத்துக் கொண்டது. இத்தேர்தல் சமயத்தில் கூட்டத்தோடு கூட்டமாக பாண்டேயைக் கட்சிக்குள் சேர்த்து, ஃபைசாபாத் தொகுதி வேட்பாளராக அறிவிக் கவும் காங்கிரசு முடிவு செய்திருந்தது. காங்கிரசின் இந்த இரகசியத் திட்டத்தை பத்திரிகைகள் முன் கூட்டியே அம்பலப்படுத்தி விடவே, காங்கிரசு இஞ்சி தின்ற குரங்காக, விழி பிதுங்கி நிற்கிறது!

## வசதியா? வக்கிரமா?

இந்தியாவிலுள்ள நகரங்களின் குப்பங்களிலும், ''பஸ்தி''க ளிலும் வாழ்ந்து வரும் தொழிலாளர் குடும்பங்களுக்கு, அரசாங் கம் முறையான கழிப்பிட வசதி செய்து தருவது கிடையாது. அதே போல், கிராமப்புறங்களில் நவீன கழிப்பிட வசதி இல்லாததால், மனிதக் கழிவுகளை தாழ்த்தப்பட் டோர் தலையில் சுமந்து செல்லும் கொடுமையும் நிலவிவருகிறது. இந்திய மக்களுக்கு இந்த அடிப் படை வசதியைக் கூட, இதுநாள் வரை செய்து தர மறுத்து வரும் ஆளுங்கும்பல், தில்லியில், ஐந்து இலட்ச ரூபாய் செலவில், முற்றிலும் குளிரூட்டப்பட்ட நவீ னக் கழிப்பறையைத் திறந்து வைத்துள்ளனர். 2.5 கோடி ரூபாய் செலவு செய்து, இன்னும் இது போன்ற 50 குளுகுளு கழிப் பறைகளைக் கட்டித் திறக்கப் போவதாக தில்லியை ஆளும் காங்கி ரசு கட்சி அறிவித்துள்ளது. இதை வசதி என்பதா? அல்லது வக்கி ரம் என்பதா?



இந்திய இராணுவத்தின் அத்துமீறல்களை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யும் காஷ்மீர் பெண்கள்.

## காஷ்மீர் மக்களுக்கு நீதி கிடைக்குமா?

காஷ்மீர் மாநிலத் தலைநகர் ஸ்ரீநகரிலுள்ள ஹஸ்ரத்பால் மசூதியை, 1993 ஆம் ஆண்டு இறுதியில் இந்திய இராணுவம் முற்றுகையிட்ட பொழுது, அதை எதிர்த்து காஷ்மீர் மக்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். இந்த ஆர்ப்பாட்டத்தை ஒடுக்க பிஜ்பெஹ்ரா எனுமிடத்தில் எல்லைப் பாதுகாப்புப் படை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நூற்றுக்கணக்கான காஷ்மீர் மக்கள் இறந்தனர். இப்படுகொலையைப் பற்றி விசாரித்த இராணுவ நீதி மன்றம், குற்றஞ்சாட்டப்பட்ட ஒரேயொரு நபரான மல்ஹார் சிங் என்ற எல்லைப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த துணை ஆய்வாளரை யும் நிரபராதி எனத் தீர்ப்புக் கூறி விடுதலை செய்துவிட்டது. மைய அரசோ, இப்படுகொலை தொடர்பான கோப்புகளை ஆராய தேசிய மனித உரிமை கமிசனுக்கு சட்டபூர்வ உரிமை கிடையாது எனக் கூறிக் கொண்டு, கமிஷன் நடத்தி வரும் விசாரணையை முடமாக்கிவிட முயன்று வருகிறது. மைய அரசின் இந்த அடாவ டித்தனத்தை எதிர்த்து தேசிய மனித உரிமை கமிசன் தற்பொழுது உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளது.

## மேல்சாதி வெறியர்கள் பிடியில் தாழ்த்தப்பட்டோர் தொகுதிகள்

உ.பி. மாநிலத்தில் தாழ்த்தப்பட்டோருக்காக ஒதுக்கப்பட்ட பஞ்சாயத்துகளில், கிட்டதட்ட 100 பஞ்சாயத்துத் தலைவர் பதவி களை, மேல்சாதியைச் சேர்ந்த நிலப்பிரபுக்கள், போலி சாதி சான்றி தழ் கொடுத்துக் கைப்பற்றிக் கொண்டுள்ளனர். அம்மாநிலத்தில் 1995 ஆம் ஆண்டு நடந்த பஞ்சாயத்துத் தேர்தல்களின் பொழுது தான் இம்மோசடி நடந்துள்ளது. மேல்சாதியினரின் இத்தில்லுமுல் லுகள் பற்றிய ஆதாரங்களை 1997 ஆம் ஆண்டிலேயே அனுசுசித் ஜாதி மற்றும் ஜன்ஜாதி ஆயோக் எனும் அமைப்பு அரசுக்குக் கொடுத்த பின்னும், இம்மேல்சாதி பஞ்சாயத்துத் தலைவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## தொடர்வண்டித் துறை அந்நியருக்குத் தாரைவார்ப்பா?

மின்சாரம், தொலைதொடர்பு போன்ற அடிக்கட்டுமானத் துறைகளில் நுழைந்துள்ள அந்நிய நிறுவனங்கள், தொடர்வண்டித் துறையிலும் மூக்கை நுழைக்கத் துவங்கிவிட்டன. ''கிரேட் இண்டி யன் ரெயில்வே கம்பெனி'' எனும் பிரிட்டன் நிறுவனம், இந்திய ரெயில்வேயுடன் இணைந்து, அதே சமயம் இந்திய ரெயில்வேக்கு இணையாக, புதிய தொடர்வண்டி சேவையைத் தொடங்க வுள்ளது. 51 சதவீத முதலீடு செய் யவுள்ள அப்பிரிட்டன் நிறுவ னம், இந்திய ரெயில்வே அமைத் திருக்கும் வசதிகளைப் பயன்ப டுத்திக் கொண்டுதான் இச்சே வையை நடத்தவுள்ளது. உமி கொண்டு வந்தவன் அவல் தின்ற கதைதான்!

## வறுமையால் பெருகும் தற்கொலைச் சாவுகள்

உ.பி மாநிலத் தலைநகர் லக்னோவுக்கு அருகிலுள்ள அவ்ராவன் கிராமத்தைச் சேர்ந்த அனிதா என்ற இளம் கைம்பெண் சமீபத்தில் தனது இரு குழந்தைக ளோடு விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொண்டார். கடந்த இரு மாதங்களுக்குள், லக்னோவைச் சுற்றியுள்ள கிராமங்களில், வறுமையின் கொடுமையைச் சகிக்க முடியாமல், தீ வைத்துக் கொண்டும், தூக்குப் போட்டுக் கொண்டும், விஷம் குடித்தும் தற்கொலை செய்து கொண்டு இறந்து போனவர்களின் எண் ணிக்கை கிட்டதட்ட பத்தைத் தொட்டுவிட்டது. போலீசில் பதிவா காத வழக்குகளையும் சேர்த்துக் கொண்டால், இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும். சொந்தத் தொகுதியின் வறு மையை ஒழிக்க வக்கற்ற பிரதமர் வாஜ்பாயி, நாட்டின் வறு மையை ஒழிக்கப் போவதாக, தேர்தல் அறிக்கையில் வாய்ச் சவ டால் அடிக்கிறார்!

## "நீதி தேவதையின் மயக்கம்!"

இந்திரா காந்தி படுகொலையைத் தொடர்ந்து தில்லி சீக்கிய மக்களைப் படுகொலை செய்வதற்கு ரவுடிகளைத் திரட்டித் திட்டம் தீட்டிக்கொடுத்த காங்கிரசு புள்ளிகளில் சஜ்ஜன் குமார் முக்கியமா னவன். இப்படுகொலை தொடர்பாக சஜ்ஜன் குமார் மீது தொடுக் கப்பட்ட வழக்கை விசாரித்த தில்லி மாநகர நீதிமன்றம், சஜ்ஜன் குமாருக்கு எதிராக தவறாக சாட்சியம் பெறப்பட்டுள்ளது எனக் கூறி, அக்கிரிமினலை விடுதலை செய்துவிட்டது. இப்பொழுது இந்த ''நிரபராதி''யை சோனியா காந்தி நாடாளுமன்ற வேட்பாள ராகவும் அறிவித்துவிட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

கள் உரிமை; அதனைத் தடை செய்ய போலீசுக்கு அதிகாரம் இல்லையென்று வாதிட்டனர். தடை செய்த போலீசார் பேருந்து நிலையத்தில் சிலர் வம்பு செய்வ தாக உயர் அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்து, கைது செய்வதற்கான தயாரிப்பு டன் கூடுதல் போலீசாரோடு பேருந்து நிலையத்தில் குவிந்தனர். இதையெல்லாம் பெரிய விசயமாக எடுத்துக் கொள்ளாமல், தொடர்ந்து பிரச்சாரம் செய்த தோழர்க ளின் துணிச்சல், மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் ஆதரவையும் பெற்றது.

ஒரு கட்டத்தில், போலீசார் தோழர்க ளைக் கைது செய்வதாக அறிவித்து வேனில் ஏற்றி போலீசு நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். பேருந்து நிலையத் திலும், வழி நெடுகிலும், உற்சாகமாக தோழர்கள் முழக்கமிட்டுச் சென்றனர்,

இவர்கள் தேர்தல் புறக்கணிப்பு பிரச் சாரம் செய்தார்கள்; இது தவறு எனக் கைது செய்தோம் என்று போலீசார் உண்மை யைக் கூறாமல், பேருந்து நிலையத்தில் பொது அமைதிக்கு ஊறு விளைவிக்கும் விதத்தில் பொதுமக்கள் மத்தியில் கலாட்டா செய்தார்கள் எனப் பொய்வ ழக்கு போட்டு கோவை மத்திய சிறையில டைத்தனர். பின்னர், தோழர்கள் பிணை யில் வெளிவந்து மீண்டும் உற்சாகமாக பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## வேதாரண்யத்தில்

வி.வி.மு. தோழர்கள் தேர்தல் புறக்க ணிப்புப் பிரச்சார இயக்கத்தை வேதாரண் யம் பகுதியில் தெருமுனைப் பிரச்சார இயக்கமாக நடத்தி வருகின்றனர். ஒரு குறிப்பிட்ட பகுதியில் நடந்த தெருமுனைக் கூட்டத்திற்கு ஆதரவாக 250-க்கும் மேற் பட்ட பொதுமக்கள் கூடியதைக் கண்டு அரண்டுபோன போலீசும், ஓட்டுக் கட்சிக ளும் கூட்டுச் சேர்ந்து கொண்டு, "பிரச்சா ரத்தை நிறுத்தாவிட்டால், கைது செய் வோம்" என மிரட்டினர். போலீசின் இந்த அராஜகத்தை பொதுமக்களே கண்டித்த னர். கூட்டத்தில் இருந்த ஒருவர், "போலீ சுக்கு பத்தோ இருபதோ இலஞ்சமாகக் கொடுத்துவிட்டு, கூட்டத்தைத் தொடர்ந்து நடத்துங்கள்" எனக் கூறி, போலீசை அவ மானப்படுத்தினார்.

• மதுரை, திருச்சி, தஞ்சை, உசிலம் பட்டி, சங்கராபுரம் ஆகிய ஊர்களில் பொதுக்கூட்டங்கள் நடந்துள்ளதோடு, தமி ழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தேர்த லைப் புறக்கணிக்கக் கோரி தெருமுனைப் பிரச்சாரம் தொடர்ந்து எடுத்துச் செல்லப்ப டுகிறது.

---




# வாசகர் கடிதம்

★ முகப்பு அட்டை ஓவியம் பெரியாரிய - அம்பேத்கரியவாதிகளின் யோக்கியதை யைத் தோலுரித்துக் காட்டுகிறது. பு.ஜ. இதழை வாங்க வேண்டும், படிக்க வேண் டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைந்துள்ளது. இருப்பினும் அட்டை ஓவியத்தில் உயிரோட்டம் இல்லாமல் இருப்பது குறையாகத் தெரிகிறது.

வாசகர் வட்டம்.<br>விழுப்புரம்.

★ "கார்கில் வெற்றி அமெரிக்க வல்லர சுக்கே!" என்ற கட்டுரை காஷ்மீர் நிலை மையை முழுமையாகப் படம் பிடித்துக் காட்டியது. மூன்று வகையான 'தேசபக்தி' தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. "பார்ப் பன - பனியா சேவையில் பெரியாரியம் - அம்பேத்கரியம்" என்ற அட்டைப்படக் கட்டுரை சீர்திருத்தவாதிகள் - சமரசவாதிக ளின் சீரழிந்த நிலையையும் அவர்களிடம் வர்க்கப் பார்வை இல்லாததையும் தெளிவு படுத்திக் காட்டியுள்ளது.

தொழிலாளர் பிரச்சாரக் குழு,<br>நெய்வேலி.

★ தலித் துரோகத் தலைவர்களின் தகிடுதத்தம்

*"நாங்கள் அடங்கமாட்டோம்; அத்து மீறுவோம்!"*

— இன்று, ஆண்டைகளின் கடைக் கண் பார்வைக்கு அடங்குவோம்; அறிவா சான்களின் அறிவுரை அத்துக்களை மட் டும் மீறுவோம்.

*"நாங்கள் பிணத்திற்கு முன் தப் பட்டை அடிக்க மாட்டோம்!"*

— இன்று, பணமூட்டைகளுடன் கூட் டுச் சேர்வோம்; அவர்களின் பாட்டுக்கு மட்டும் தப்பட்டை அடிப்போம்.

*"நாங்கள் பிணம் புதைக்க குழி வெட்ட மாட்டோம்!"*

— இன்று, எத்தர்கள் வெட்டியுள்ள புதை குழிக்குள் எங்கள் வாழ்வைப் புதைப் பதைத் தடுக்க எவரையும் விடமாட்டோம்.

— *"பாராளுமன்றம் பன்றிகளின் தொழுவம்!"*

— இன்று, பன்றித் தொழுவத்தில் வாழப் போட்டியிடுகிறோம்; ஆதரியுங் கள் தோழர்களே!

— ஆடல், வாங்கப்பாளையம்.

★ சென்ற இதழில் வாசகர்கள் கோரிய படி, கார்கில் போர் பற்றிய பின்னணியை யும் விளைவுகளையும் முழுமையாகத் தொகுத்து வெளியிட்டிருப்பது, பிரச்சினை யின் முழுப் பரிமாணத்தைப் புரிந்து கொள்ள உதவியாக இருந்தது. அட்டைப்ப டமும் அட்டைப்படக் கட்டுரையும் சமரச வாதிகளை - பிழைப்புவாதிகளைச் சிறப் பாக அம்பலப்படுத்தியது. திருச்சி - தாரா நல்லூர் பகுதியில், விடுதலைச் சிறுத்தை கள் இயக்கத்தினர் மத்தியில் இக்கட்டுரை கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கார்கில் போரை உலகமகா சாதனையாகக் காட்டி பத்திரிகைகள் 'தேசபக்தி' வியாபாரம் செய்துவரும் வேளையில், இந்திய மக்க ளின் யதார்த்த வாழ்நிலை அவலத்தை விளக்கி, பீற்றிக் கொள்ளப்படும் இந்தியா வின் பொருளாதார வலிமையைக் கேள் விக்குள்ளாக்கி உண்மையைப் புரிய வைத்த "இதுதான் இன்றைய இந்தியா" அருமையாக இருந்தது.

வாசகர் வட்டம், திருச்சி.

**சென்னை - சேத்துப்பட்டிலுள்ள எம். எஸ். நகரில், கடந்த பத்து வருடங்களாக தண்ணீர் வசதி இல்லை. அப்பகுதியில் போடப்பட்டிருந்த குடிநீர்க் குழாய்கள் பழு தடைந்து போய்விட்டன. இப்பிரச்சினை யைத் தீர்க்கக் கோரி பகுதி மக்கள் மாநக ராட்சி அதிகாரிகளிடம், பகுதி மாநகராட்சி உறுப்பினரிடமும் பலமுறை கேட்டுக் கொண்ட பின்னும், தண்ணீர் பிரச்சினை தீரவில்லை.**

**சேத்துப்பட்டுப் பகுதியில் இயங்கி வரும் பெண்கள் விடுதலை முன்னணி, இப்பிரச்சினையை முன்வைத்து சுவரொட் டிகள் ஒட்டியும், நேரடியாகப் பிரச்சாரம் செய்தும் பகுதி மக்களை அணிதிரட்டி, 12.08.99 அன்று, மாநகராட்சி கிளை அலு வலகத்தில் மனு கொடுக்கச் சென்றனர். அங்கிருந்த அதிகாரியோ, "வெளியில் போய்ப் பேசுங்கள்" என எரிந்து விழுந் தான். பகுதிப் பெண்கள், அதிகாரியின் அதட்டலுக்குப் பயப்பட்டுவிடாமல், "எங் கள் பகுதிக்கு வந்து அதிகாரிகள் பார்வை யிட வேண்டும்; இல்லையென்றால், நாங் கள் இங்கிருந்து போகமாட்டோம்" எனப் பதிலடி கொடுத்தனர்.**

**பெண்களின் உறுதியைக் கண்டு மிரண்டு போன அதிகார வர்க்கம், பகுதி யை வந்து பார்வையிட்ட கையோடு, குழாய் களைப் பழுதுபார்த்தும் கொடுத்தனர்.**

**தகவல்:<br>பெண்கள் விடுதலை முன்னணி,<br>சென்னை.**

---

Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER FOR INDIA UNDER NO. 42648/85
Regd. No. TN/MS(S) 622 / 99

# இதுதான் இன்றைய இந்தியா




இதோ, மேட்டுக்குடி வெள்ளைக்கார இளைஞனைப் போல, தனது பெண் நண்பருடன் இலண்டனில் நடந்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை இரசித்துப் பார்க்கும் ராகுல் காந்தி, இன்னொரு புறம் சீக்கிய மதத்தினரைப் போல தலைப்பாகை அணிந்து கொண்டு, பாமர சீக்கிய மக்களைப் பரவசத்தில் ஆழ்த்த முயலுகிறார். சினிமாவில் கதாநாயகனோ / நாயகியோ போடும் இரட்டை வேடத்திற்கும், ராகுல் காந்தியின் இந்த இரட்டைத் தோற்றத்திற்கும் வேறுபாடு உண்டு. அதில் இரண்டுமே வேடம். இதில், ஒன்று நிஜம்; மற்றொன்று - சீக்கிய மதத்தினரைப் போல தலைப்பாகை அணிந்து கொண்டு, கையில் வாளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நிற்பது, ஓட்டுப் பொறுக்குவதற்கு ராகுல் காந்தி போட்டுக் கொண்ட அரைமணி நேர வேடம்.

முசுலீமைப் போல குல்லா போட்டுக் கொள்வது, ஏழை - எளிய மக்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு ''போஸ்'' கொடுப்பது என எல்லா ஓட்டுக் கட்சித் தலைவர்களும் ஓட்டுப் பொறுக்குவதற்காகப் பல வகையாக வேடம் போட்டு, மக்களை ஏய்க்கத் தயங்குவதில்லைதான். ஆனாலும், ராகுல் காந்தி போட்டுக் கொண்டு நிற்கும் இந்த வேடம், அதைவிட மோசடித்தனமும், மேட்டுக்குடித் திமிரும் கொண்டதாகும்.

வெளிநாட்டில் பிறந்த சோனியா காந்தி, இந்தியாவின் பிரதமர் பதவியில் உட்காருவதற்காகவே, ''சாகும்வரை இந்தியாவில்தான் வாழ்வேன்'' எனச் சபதம் செய்யும் நேரத்தில், அவரது வயிற்றில் பிறந்த ராகுல் காந்தியோ நிரந்தர இலண்டன் வாசியாகிவிட்டார். இலண்டனில் தன் மகன் உழைத்துப் பிழைப்பதாகக் கூறுகிறார், சோனியா காந்தி. ஆனால், தனது கொலம்பியா நாட்டுக் காதலியுடன் ராகுல் காந்தி ஊர் சுற்றித் திரிவதைப் பத்திரிகைகள் அம்பலப் படுத்துகின்றன. பட்டணத்திலேயே தங்கிவிட்ட கிராமத்துப் படிப்பாளிகள், திருவிழா / பண்டிகை சமயத்தில் சொந்த கிராமத்தை எட்டிப் பார்ப்பதைப் போல, ராகுல் காந்தியும் தேர்தல் திருவிழாவின் பொழுதுதான் இந்தியாவை எட்டிப் பார்க்கிறார்.

சொந்த நாட்டிலேயே வாழ விரும்பாத ராகுல் காந்தி, இந்த நாட்டு மக்களின் மீது கடுகளவாவது அக்கறை கொண்டிருப்பார் என நம்பத்தான் முடியுமா? இலண்டனில் உல்லாசமாக ஊர் சுற்றித் திரிந்து கொண்டிருக்கும் ராகுல் காந்திக்கு, மக்களின் தலைவனைப் போல பவனி வருவதற்கு என்ன அருகதையிருக்கிறது?



பா.ஜ.க. ஆதரிக்கும் பரூக் அப்துல்லாவின் மகன் உமர் பரூக், பிஜூ பட்நாயக்கின் மகன் நவீன் பட்நாயக் போன்ற அரசியல் வாரிசுகளும், ராகுல் காந்தியைப் போலவே இரட்டை வேடப் பேர்வழிகள்தான். குடியும், கூத்தும், கும்மாளத்தையும் மட்டுமே அறிந்த இவர்களுக்கு, தங்களின் தாய் மொழியில்கூடத் தடுமாறாமல் பேசத் தெரியாத இவர்களுக்கு, ஓட்டுச் சீட்டின் மூலம் ''மக்கள் தலைவர்'' என்ற அங்கீகாரம் அளிப்பதைவிட வெட்கக் கேடானது வேறெதும் இருக்க முடியுமா? தங்களின் பரம்பரையைக் காட்டியும், இரட்டை வேடம் போட்டும் இவர்கள் பாமர மக்களை ஏய்த்து வருவதை இனியும் அனுமதிக்கலாமா?